26வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

RBC Insurance
அனைத்து காப்புறுதி மற்றும் சேமிப்புத்திட்ட தேவைகளுக்கும்...
Jey Ahamparam
416 301 1733
உங்கள் வாகன, வீடு (for your Home & Auto)

துரித பணமாற்றுச் சேவையில் முன்னோடிகள்
மு.காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave., East, Suite # 3
(Eglinton & Markham)
Scarborough, ON M1J 2H6
Tel. - 416.267.8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி 26 | பாலம் 19 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | OCTOBER 01, 2016

# இளவரசரின் கனேடியப் பயணம்

இளவரசர் வில்லியம் அவரின் மனைவி கேற் இருவரும் இரண்டாவது முறையாக கனடாவிற்கு எட்டுநாள் பயணத்தை மேற்கொண்டு தமது இரண்டு பிள்ளைகளான ஜோர்ஜ் மற்றும்



சார்லற் உடன் செப்ரெம்பர் 24, 2016 இல் விக்ரோறியா, பிரிட்டிஸ் கொலம்பியாவிற்கு வந்தடைந்தனர். அவர்களைக் கனேடிய ஆளுனர் டேவிட் ஜோன்சன், கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ, அவரின் மனைவி கிறகரி ரூடோ, மற்றும் பிரிட்டிஸ் கொலம்பியா மாகாண முதல்வர் கிறிஸ்டி கிளார்க் ஆகியோர் வரவேற்றனர்.

இப்பிரயாணத்தின் போது இளவரசர் வில்லியமும் அவரின் மனைவி மற்றும் பிள்ளைகளும் விக்ரோறியா அரச விருந்தினர் மாளிகையில் தங்குகின்றனர். இவர்களது எட்டு நாள் பயணத்தின்போது பிரிட்டிஸ் கொலம்பியாவில் நான்கு நிகழ்வுகளிலும் யுகோன் பிரதேசத்தின் மூன்று நிகழ்வுகளிலும் கலந்து கொள்கிறார்கள். இளவரசரும் அவரது மனைவியும் திருமணம் செய்தபின்பு 2011 இல் முதல் தடவை கனடாவிற்கு வந்திருந்தனர்.

செப்ரெம்பர் 24, 2016 மாலை முதல் நிகழ்வாக பிரிட்டிஸ் கொலம்பியா நாடாளுமன்றத்திற்குச் சென்ற இளவரசர் வில்லியம், கேற் இருவருக்கும் 21 குண்டுகள் வெடிக்கப்பட்டு (Gun Salute) வரவேற்பு அளிக்கப்பட்டது. இவர்களுடன் ஜஸ்ரின் ரூடோ, கிறகரி ரூடோ மற்றும் கிறிஸ்டி கிளார்க்கும் வந்தனர். 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். போரில் உயிர் நீர்த்தவர்களது நினைவுத்தூபிக்கு மலர்வளையம் வைத்து இளவரசர் உரையாற்றினர்.

இரண்டாம் நாள் நிகழ்வாகப் பிரதமரும் அவரது மனைவியும், இளவரசரும் அவரது மனைவியும் சகிதமாக வன்கூவரில் உள்ள புதிய குடிவரவாளர்கள் மற்றும் அகதிகளை வரவேற்று அவர்களுக்குத் தேவையான உதவிகளை செய்யும் 'குடிவரவாளர் சேவைகள் சமூகம்' (Immigrant Serivces Society) நிலையத்திற்குச் சென்று அங்கு அரச உதவியுடன் வரவழைக்கப்பட்ட சில சிரிய அகதிகளைச் சந்தித்து உரையாடினர். அத்துடன் இவர்கள் கரையோரப் பாதுகாப்பு நிலையம் (Coast Guard station) ஒன்றிற்கும் சென்றனர். அங்கு அவர்கள் மனநல

தொடர்ச்சி 03ஆம் பக்கம்...

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

LEXUS OF RICHMOND HILL
I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS
INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS
COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.
குமார் ஜெகசோதி
Kumar Jegasothy
Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

IP GOLDHOUSE (905)554-5890

வீடு,வியாபார நிலையம் வாங்க விற்க..
Kannan Nadarajah
416-889-1083

MORTGAGE
For all your Mortgage
We Deal with all banks
Any situations
NESAN 416-908-5656
SUBRA Financial Solutions Inc.
1585 Markham Rd, Unit #407A,
Toronto, M1B 2W1

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

Raguvaran Rajaguru
416-712-2006
5-Years Fixed at 2.49%
Lock your mortgage while interest rates are low!

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS, RCPS (Glasg)
DENTAL SURGEON
> Wisdom Tooth Extraction
> Root canal > Dentures
> Gum Treatment
> Dental Implant
> Tooth Fillings
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

NON-MEDICAL INSURANCE
AGE 18-85
• Mortgage Protection Insurance
• Life Insurance • RESP
• Critical Illness • RRSP
• Disability
• Travel Insurance (Super Visa)
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca

# HOUSE FOR SALE

**7 Summer Ford Dr**




## Bowmanville
5 Bedrooms,
4 Washrooms,
2900Sqft

**22 Havery Jones**




## Bowmanville
5 Bedrooms,
4 Washrooms,
3300Sqft

**21 Berger Ave**




## Markham
4Bedrooms,
4 Washrooms,

1st , 2nd Mortgage for Home/ Business
We buy old houses for highest price
Home Renovation
Home renovation Loan

## CANADA WEALTH MANAGEMENT INC.
6055 Steels Ave E. Unit C102, Scarborough, ON. M1X 0A7
RANGAN Tel: 647.702.2159

வீடு வாங்க விற்க,
வீடுகளுக்கும், வியாபார ஸ்தாபனங்களுக்கும் 1st,2nd மோட்கேஜ்,
பழைய வீடுகள் பெறுமதி மிக்க விலையில் வாங்கப்படும்.
Home Renovation செய்து கொடுக்கப்படும்.

# Veenalayam
*Temple of music*



## Carnatic Veena Classes
Conducted By
**Isai Kalaimani Jeyanthe Ratnakumar**
On the occasion of Vijayadhasamy day we're starting new classes
**Monday.Oct. 10th 2016**
For further information please call: 647 808 5764
Neilson & Sheppard
Mississauga (Tomken and Cawthra place)
Brampton ( McVean and Cottrelle)

# Friends MATRIMONY



திருமணத்
உங்கள் தேடலுக்கோர் முற்றுப் புள்ளி...

சனி, ஞாயிறுகளில்
12:00pm-6:00pm
இலவசமாக திருமண
பொருத்தம் பார்க்கப்படும்

- ✓ 5000 மேற்பட்ட பொருத்தமான வரன்கள் உங்கள் தெரிவுக்கு
- ✓ மிக இலகுவாக இணையத்தில் பதிவு செய்யும் வசதி
- ✓ அல்லது தொலைபேசி, தபால், email லூடாக பதிவு செய்யலாம்

**info@friendsmatrimony.com**
**www.friendsmatrimony.com**
Choose Your Life Partnar Here

அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி 10:30a.m- 7:00p.m

| Sri Lanka | Canada |
|---|---|
| Ph: 94-112-363663 | info: 647-709-1536 |
| No-11- 2/1, 33rd lane, | GTA Square |
| Wellawatta, | 5215 Finch Ave. E. Unit 257 |

# இளவரசரின்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

பிரச்சினைகள் தொடர்பான ஒரு கலந்துரையாடலில் பங்கு பற்றினர்.

மூன்றாம் நாள் நிகழ்வாக 'Great Bear' எனப்படும் Rain Forest பகுதியை வானில் சுற்றிப் பார்த்த இளவரசரும் மனைவியும் பின்னர் McLoughlin வாவியில் படகுப் பயணம் செய்தனர்.

நான்காம் நாள் செவ்வாய்க்கிழமை செப்ரெம்பர் 27, 2016 இல் Kelowna இற்குச் சென்ற அரசதம்பதிகள் பிரிட்டிஸ் கொலம்பியா பல்கலைக்கழக Okanagan வளாகத்தில் மாணவர்களைச் சந்தித்து கூடைப் பந்தாட்ட நிகழ்வு ஒன்றையும் பார்வையிட்டனர். அதைத் தொடர்ந்து Whitehorse இற்கு சென்ற இளவரசரையும் மனைவியையும் Canadian Rangers வரவேற்றனர்.

ஐந்தாம் நாள் Whitehorse இல் உள்ள யுகோன் சரித்திரத்தைக் காட்டும் நூதனக் காட்சியகத்திற்குச் (Museum) சென்றனர். பின்னர் பிரதான வீதியில் பொதுமக்களுடன் கலந்துரையாடிய அரச தம்பதிகள் குடியிருப்புப் பள்ளிக்கூடங்களில் படித்த மாணவர்கள் (Residential School Survivors) நினைவாக நடப்பட்ட கனேடிய முதற்குடிமக்களின் கலாசார Totem Pole ஒன்றைப் பார்வையிட்டனர். பின்னர் கனேடிய முதற் குடிமக்களின் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

ஆறாம் நாள் விக்ரோறியாவிற்குத் திரும்பி வந்த அரச தம்பதிகள் கனேடிய இராணுவத்தினரது குழந்தைகளுக்கான ஒரு விருந்துபசாரத்தை நடத்தினர்.



ஏழாம் நாள் Haid Gwaii இற்குச் சென்ற அரச தம்பதிகள் படகுப் (Canoe) பயணத்தில் Haida Heritage Center இற்குச் சென்றனர். அதன்பின்னர் அங்குள்ள அரச பொது மருத்துமனையில் தாய்மார்களையும் மருத்துவர்களையும் சந்தித்துப் பிரசவகால வசதிகள் பற்றிக் கலந்துரையாடினர்.

ஒக்ரோபர் 01, 2016 இல் தமது எட்டுநாள் பயணத்தின் முடிவாக இரண்டு பொதுச் சேவைகள் செய்யும் நிறுவனங்களுக்குச் செல்ல இருக்கும் அரச தம்பதிகள் அதன்பின்னர் விக்ரோறியாவின் நகரின் உள்ளே உள்ள துறைமுகத்தில் படகுப் பிரயாணம் செய்யவுள்ளனர். இவற்றை முடித்துக்கொண்டு மாலை நாலுமணியளவில் விமானம் மூலம் விக்ரோறியாவில் இருந்து அரச தம்பதிகள் குடும்பசகிதம் புறப்பட உள்ளனர்.

Royal Canadian Mint அரச குடும்பத்தினரது பயணத்தின் நினைவாக $20 வெள்ளி நாணயம் ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் வில்லியம், கேற், ஜோர்ஜ் மற்றும் சார்லற் நால்வரும் சேர்ந்திருக்கும் படம் இருக்கிறது. இப்படத்தில் ஜோர்ஜ் இற்கு மூன்று வயது சார்லற் இற்கு ஒரு வயது.

முழு வர்ணத்தில் இருக்கும் இந்த வெள்ளி நாணயம் 99.99% தூய வெள்ளியாலானது. இதன் விலை $109.95 ஆகும். இந் நாணயங்கள் 10,000 மட்டுமே உருவாக்கப்பட்டுள்ளன.




இளவரசர் வில்லியத்தின் மனைவி கனடாப் பிரயாணத்தின் போது அணிந்திருந்த பிளாட்டினமும், வைரங்களும் பதித்த மேப்பிள் இலை வடிவான brooch இராணியின் குடும்பத்தில் மூன்று பரம்பரைக்கு மேலாகப் பாவிக்கப்பட்டு வருகிறது. இந்த brooch இராணியின் தாயாருக்கு அவரின் கணவரான ஜோர்ஜ் vi மன்னர் கனேடியப் பிரயாணத்தின் போது 1939 இல் அளித்தது ஆகும். அதன் பின்னர் எலிசபெத் ii இராணி தனது முதலாவது கனேடியப் பிரயாணத்தின் போது 1951 இல் அதை அணிந்திருந்தார். அதன் பின்னர் எலிசபெத் ii இராணி தனது மருமக்கள் கனடா பயணம் மேற்கொள்ளும் போது அணிவதற்கு வழங்குகிறார். கமிலா இளவரசர் சார்ள்ஸ் உடன் 2009 இல் கனடா வரும்போது இதை அணிந்திருந்தார். தற்போது கேற் உம் தனது கனடாப் பிரயாணத்தின்போது இதை அணிந்திருக்கிறார். இந்த brooch இனைப் போன்ற வடிவுடைய brooch ஐ பக்கிங்ஹாம் மாளிகையில் இருக்கும் நினைவுச்சின்னங்கள் விற்கும் இடத்தில் $150இற்கு வாங்கலாம். ஆனால் இதில் பிளாட்டினமோ அல்லது வைரங்களோ இருக்க மாட்டாது.



# PAID TRAINING is available!



CANADIAN COLLEGE FOR HIGHER STUDIES

# GREAT NEWS!

## GOVERNMENT FUNDING

**FOR TRAINING & LIVING**
**GRANT UP TO $28,000.00**

*that may cover: Tuition, Books, Travel Transportation, Living Expenses, Disability Supports, Child day care, other living and training cost . Conditions apply.*

**LAID OFF/Maternity/Paternity/ Sick Leave/E.I/E.I REACHBACK/ ODSP/OW/SA?**

**DIPLOMA & POST GRADUATE PROGRAMS**

- IT SUPPORT WITH SOFTWARE QUALITY ASSURANCE
- COMPUTERIZED ACCOUNTING WITH OFFICE ADMINISTRATION (WITH SAP)
- PGD IN ENTERPRISE IT MANAGEMENT
- BUSINESS ADMINISTRATION
- NETWORK (LAN/WAN) ADMINISTRATION
- PGD IN ENTERPRISE LINUX ADMINISTRATION
- SYSTEMS ADMINISTRATOR (Unix/Linux)
- PGD—ERP IS Technical Consultant
- PGD IN SUPPLY CHAIN AND LOGISTICS MANAGEMENT (ERP-SAP)
- ADVANCED DIPLOMA IN CISCO & RED HAT ENGINEERING

**CONTACT US TODAY! (416) 850-1456 ♦ learn@thecanadiancollege.ca**

705 Progress Ave, #108 ♦ Scarborough, ON ♦ M1H 2X1 (Near McCowan subway)

**www.thecanadiancollege.com**

Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005

MORTGAGE ALLIANCE
RIGHT BROKER = RIGHT MORTGAGE
Lic # 10530
Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto
Brokerage Office : 112-895, Don Mills Rd, Toronto, ON, M3C 1W3 Office Phone : 416-391-3232

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

நல்ல ரேட்ல மோட்கேஜ்,
லைன் ஒப் கிரெடிட்,
ரீபைனான்ஸ்,
2வது, 3வது மோட்கேஜ்,
பாங்க்ரப்சி நிலையில் மோட்கேஜ்,
எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க,
வீடு வாங்க, விற்க
மற்றும் உங்கள் தேவை, எதுவாக இருந்தாலும்,

பவர் ஒப் சேல் பிரச்சினையா ?



| BEST RATES FOR "AAA" CLIENTS | |
|---|---|
| 5 Yrs Variable : | Call Us |
| 2 Yrs Fixed Rate : | 2.09%* *OAC |
| 5 Yrs Fixed Rate : | 2.39 % * |

## "மோட்கேஜ் கிளினிக்"

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

திங்கள்—வெள்ளி (call for an appointment)

**வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00**



உங்கள் மாதாந்த மோட்கேஜ் கொடுப்பனவுடன் Credit Card, Car Loan, Personal Loan, Line of Credit
மற்றும் ஏனைய அதிகளவு வட்டி செலுத்தும் கடன்களை ஒன்று படுத்தி
எவ்வாறு உங்களது மாதாந்த கடன் சுமையை குறைப்பது???

BEST RATE GUARANTEED

MORTGAGE IN ANY SITUATION

எமது முகவரி

**1504 Markham Rd,**
**Toronto, ON, M1B 2V9**
**(Markham & HWY 401)**



ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
**Cell : 416-624-4843**

And,,
*For All Your Real Estate Services*

# ‘எழுக தமிழ்’ விளைவும் விமர்சனங்களும்!

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் கடந்த 24ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடை-பெற்ற ‘எழுக தமிழ்’ பேரணி பல்வேறு கருத்துக்களையும், விமர்சனங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றது. பேரணியை நடத்தியவர்கள் இதனை மாபெரும் வெற்றி எனத் தெரிவிக்கின்றனர். அரசாங்கத்தரப்பினர் இது இத்தருணத்தில் நடத்தப்பட்ட குழப்பமான நிகழ்வு எனக் கூறுகின்றனர். சிங்களக் கடும் போக்காளர்கள், இது பிரிவினையை வலியுறுத்தி நடத்தப்பட்ட நிகழ்வு எனக் குரல் எழுப்பி வருகின்றனர்.

‘எழுக தமிழ்’ பேரணி தொடர்பில் சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னரே யாழ். குடாநாட்டில் சந்திப்புகள், ஒன்றுகூடல்கள் நடைபெற்று வந்தன. யாழ். குடாநாடு முழுவதும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. ஊடகங்களில் அது தொடர்பில் விளம்பரம் செய்யப்பட்டன. இந்த நிலையில் இது தொடர்பிலான எதிர்க் கருத்துக்களும் அப்போதிருந்தே வெளிப்படுத்தப்பட்டு வந்தன. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமை இந்த நிகழ்வை வரவேற்க வில்லை. புதிய அரசியலமைப்பினை உருவாக்கும் பணிகள் நடைபெறுகின்ற போது- அதனூடாகத் தமிழ் மக்களுக்காகத் தீர்வுத்திட்டம் ஒன்றினை ஏற்படுத்தும் வழிமுறைகள் ஆராயப்பட்டு வருகின்றபோது, இவ்வாறான நிகழ்வுகள் குழப்பங்களை உண்டுபண்ணும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமையும், அதன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கருத்து வெளியிட்டு வந்தனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பிரதான கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சி இந்த நிகழ்வுகளில் பங்கேற்பதில்லை என அறிவித்தது. அரசியலில் புதிய சூழல் ஒன்று உருவாகும் தருணத்தில் இவ்வாறான நிகழ்வு ஏற்புடையதல்ல எனவும் அக்கட்சி தெரிவித்திருந்தது. இந்த நிலையில் இந்த ‘எழுக தமிழ்’ நிகழ்வு நடந்து முடிந்துள்ளது. கணிசமான பொது மக்கள் இந்தப் பேரணியில் கலந்து கொண்டிருக்கின்றார்கள். ஐயாயிரம், பத்தாயிரம், பதினைந்தாயிரம் எனவும், இன்னும் அதிக தொகையினர் எனவும் எண்ணிக்கை வெளியிடப்படுகின்ற போதும், குறிப்பிடத்தக்க மக்கள் இதில் கலந்து கொண்டிருந்தனர் என்பதையே கூறலாம்.

நல்லூர் ஆலய முன்றலிலிருந்து, பின் பேரணியில் சென்றவர்களிலிருந்து, முற்ற வெளியில் நடைபெற்ற கூட்டம் வரையிலும் கணிசமாக மக்கள் குழுமியிருந்ததைக் காண முடிந்தது. வட மாகாண முதலமைச்சரும், தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவருமான சி.வி. விக்னேஸ்வரன் இந்த நிகழ்வு நடத்தப்பட்டதன் காரணம் குறித்து அந்தக் கூட்டத்தில் தெரிவித்துள்ள கருத்துக்கள் யாவும் ஏற்றுக்கொள்ளத் தக்கதே. இந்தப் பேரணியானது மத்திய அரசை எதிர்த்தோ, சிங்கள சகோதரர்களை எதிர்த்தோ, அல்லது பௌத்த சங்கத்தினரை எதிர்த்தோ நடத்தப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.



தமிழ் பேசும் மக்கள் அனைவரும் பலத்த சந்தேகங்களிலும், ஐயப்பாடுகளிலும், மனச் சஞ்சலத்திலும் இருக்கின்றார்கள். அவர்களின் அந்த மனோநிலையை, ஊரறிய, நாடறிய, உலகறிய உரத்துக் கூறவே இந்த நிகழ்வு எனவும் அவர் விளக்கியுள்ளார். தமிழ்ப் பிரதேசங்களிருந்து இராணுவம் வெளியேறவில்லை. அவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகள் இன்னமும் முழுவதுமாக விடுவிக்கப்பட வில்லை. அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. சிறைகளில் போராட்டம் நடத்தும் அவர்களது குரல்கள் எவரது காதுகளுக்கும் எட்டவில்லை. காணாமலாக்கப்பட்ட இளைஞர்கள் குறித்து இன்னமும் எவ்விதமான பதிலும் தரப்பட வில்லை. அவர்களின் உறவினரின் கதறல்கள் தொடர்கின்றன.

போர்க்குற்றப் பொறிமுறை கலப்புப் பொறி முறையாக இருக்க வேண்டும் என்பது 2015ஆம் ஆண்டின் செப்ரெம்பர் மாத சர்வதேச எதிர்பார்ப்பு. வெளிநாட்டு வழக்கு நடத்துநர், வெளிநாட்டு நீதிபதிகள், சர்வதேசப் போர்க்குற்ற சட்டத்தை உள்ளேற்றல் போன்றவை இல்லாது கலப்புப் பொறி முறையை நிராகரித்து மீண்டும் உள்ளகப் பொறிமுறையை மட்டும் எமது நல்லாட்சி அரசாங்கம் நாடுவது எமக்குச் சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் நடைபெறுகின்றன. நாவற்குழியில், முருங்கனில், வவுனியாவில், முல்லைத்தீவில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன. ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னரும் தமிழ்ப் பிரதேசங்களில் புதிது புதிதாக பௌத்த விகாரைகள் தோற்றம் பெறுகின்றன. இவை யெல்லாம் தமிழ்மக்களுக்குக் குழப்பத்தை விளைவிக்கின்றன எனவே, இவற்றை இலங்கை அரசாங்கத்திற்கும் சர்வதேச சமூகத்திற்கும் வெளிப்படுத்துவதே ‘எழுக தமிழ்’ நிகழ்வின் நோக்கம் என்று முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இன்றைய காலகட்டத்தில் நாடாளுமன்றத் திற்குத் தெரியப்படுத்துவதாலோ மாகாண சபைகளுக்குத் தெரியப்படுத்துவதாலோ எமது உரிமைகளை நாம் வென்றெடுத்துக் கொள்ள முடியாது. மக்கள் சக்தி எமது அரசியல் பயணத்துக்கு அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் விக்னேஸ்வரனின் இந்தக் கருத்துக்கள் சரியானதே. இவற்றை எவரும் தவறானது என நிராகரிக்க முடியாது. புதிய அரசியலமைப்பு ஒன்று உருவாக்கப்படுகின்ற நிலையில் - போர்க்குற்றப் பொறிமுறை குழப்பான கட்டத்திலுள்ள நிலையில் தமிழ் மக்களின் உணர்வுகள் வெளிப்படுத்தப்படுவதற்கான இந்த தருணமும் பொருத்தமானதே.

இதேவேளை, தமிழ் மக்கள் பேரவையிலுள்ள வேறு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கின்ற கருத்துக்கள் சற்று வித்தியாசமானதாக இருப்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். இந்தப் பேரணியின் நிறைவில், யாழ். முற்றவெளி மைதானத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஈபிஆர்எல்எவ் கட்சியின் தலைவருமான சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமையைச் சாடியுள்ளார். தங்கள் சக்தியை அவர்களுக்குக் காட்டுவதற்காகவே இந்தப் பேரணியை நடத்தியதான பொருள் படக் கூடிய வகையில் அவரின் பேச்சு வெளிப்பட்டது.

“எழுக தமிழ்ப் பேரணியில் ஐந்நூறு பேர் கூடக் கலந்து கொள்ள மாட்டார்கள் என்று கூறியவர்களுக்கு இங்கு கூடிய மக்கள் பதிலளித்திருக்கின்றார்கள். மக்கள் வெளிப்படுத்தியுள்ள உணர்வுகள் ஜனாதிபதி, பிரதமர் மட்டுமல்ல கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கும் கேட்க வேண்டும்” என அவர் அங்கு உரையாற்றினார். அதுமட்டுமல்ல, “அன்று விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் ‘பொங்குதமிழ்’ நடத்தினார். இன்று விக்னேஸ்வரன் ‘எழுக தமிழ்’ நடத்திக்காட்டியுள்ளார்” எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான கருத்துக்கள் தென்னிலங்கை இனவாதிகளுக்கு மேலும் சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்தைத் தூண்ட வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது என நடுநிலையாளர்கள் கருதுகின்றனர்.

ஏற்கனவே விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட பொங்குதமிழ் நிகழ்வையே இன்று இவர்கள் நடத்துகின்றார்கள். பிரிவினை வாதம் இன்னமும் வலியுறுத்தப்படுகின்றது என்றெல்லாம் சிங்கள மக்கள் மத்தியில் பரப்புரை செய்தவர்களுக்கு இக்கருத்துக்கள் மேலும் வாய்ப்பினை வழங்குகின்றது என்பதும் உண்மையே.

**- விகிர்தன் -**

வடக்கின் முதலமைச்சர் பிரபாகரனின் நிகழ்ச்சி நிரலையே கொண்டுள்ளார் எனத் தென்னிலங்கை இனவாதிகள் கூறிவருகின்ற நிலையில், எதனையும் அறிவுபூர்வமாகவும், இராஜதந்திரமாகவும் கையாள வேண்டிய காலகட்டம் இது. தமிழ் தலைமைகள் இதனைக் கருத்திற்கொள்ள வேண்டும்.

‘சிங்களம்’ ‘சிங்களவர்கள்’ என்ற சுலோகத்தில் தமிழினத்திற்கு எதிரான பல்வேறு கருத்துக்களும், நிகழ்வுகளும் தெற்கில் வெளிப்படுத்தப்படுகின்ற நிலையில் அதற்குப் பதிலாக அதே வழிமுறையை நாமும் கையிலெடுக்கக் கூடாது என தமிழ் புத்திஜீவிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

நடத்தப்பட்ட இந்த நிகழ்வு சரியானதும், நியாயமானதும்தான். ஆனால், ‘எழுக தமிழ்’ என்ற மகுட வாசகத்தைத் தவிர்த்திருக்கலாம் என்றும் அவர்கள் கூறுகின்றனர். இது தமிழ் மையவாதத்தை அடிப்படையாகக் கொண்டது என இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் தரப்பினர் கருத்துக் கூறுவதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
“ VERY CLEAN LAUNDRY” Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE - TEL : 416.289.7514 / OWNER SAM - CELL: 416.732.9383

OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் தற்போதைய நிலவரம்

2016 பெப்ரவரி 15 விளம்பரம் இதழில் இருந்து அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முறை நான்கு பிரிவுகளை அடக்கியது எனவும் அவையாவன:

1. Prenomination Phase - ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்ய முந்திய காலப்பகுதியாகும்.
2. National Conventions Phase - தேசிய மாநாடு இது ஜனாதிபதி மற்றும் உப ஜனாதிபதியை வேட்பாளரைக் கட்சிகள் தெரிவு செய்யும் மாநாடு. (ஜூலை 2016)
3. General Election Phase - தேர்தல் பிரச்சாரமும் பொதுத்தேர்தலும் (நொவம்பர் 08, 2016 வரை)
4. Electoral College Phase - ஜனாதிபதி மற்றும் உபஜனாதிபதியை உத்தியோக பூர்வமாக தெரிவு செய்து அறிவிக்கும் காலம் (நொவம்பர் 08, 2016இல் இருந்து ஜனவரி 20, 2017 வரை)

எனவும் அவை நான்கையும் விரிவாகப் பார்த்தோம். 2016 ஏப்பிரல் 15 விளம்பரம் இதழில் இருந்து அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் தற்போதைய நிலவரம் பற்றிப் பார்த்து வருகிறோம். இரண்டு கட்சிகளின தும் தேசிய மாநாடுகள் முடிவடைந்து ஜனாதிபதி மற்றும் உபஜனாதிபதி வேட்பாளர்கள் தெரிவும் முடிவடைந்தவுடன் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் முதல் இரண்டு பிரிவுகளும் முடிவடைந்து விட்டன. தற்போது மூன்றாவது பிரிவான தேர்தல் பிரசாரமும் பொதுத்தேர்தலும் நடைபெறுகிறது. இம்மூன்றாவது பிரிவு எதிர்வரும் நொவம்பர் 08, 2016 இல் நடை-பெற இருக்கும் பொதுத் தேர்தல் வரை தொடரும்.

**முக்கிய நான்கு ஜனாதிபதி வேட்பாளர்களும் பின்வருமாறு**

ஜனநாயகக்கட்சி - Hillary Clinton
குடியரசுக்கட்சி - Donald Trump
Libertarian கட்சி - Gary Johnson
பசுமைக்கட்சி - Jill Stein

CBC செப்ரெம்பர் 27ஆம் திகதியின் கருத்துக்கணிப்பின் படி அமெரிக்க மக்களில் வாக்களிக்கத் தகுதி உள்ளவர்களில்

45.5% ஆனவர்கள் Hillary Clinton ஐ ஆதரிக்கிறார்கள்

43.3% ஆனவர்கள் Donald Trump ஐ ஆதரிக்கிறார்கள்

11.2% ஆனவர்கள் ஏனைய கட்சி வேட்பாளர்களை ஆதரிக்கிறார்கள்

கடந்த விளம்பரம் இதழ் வெளிவரும்போது நாடுதழுவிய வாக்குகளில் 2.9% அதிகப் படியான வாக்குகளைப் பெற்றிருந்த Hillary தற்போது 2.2% அதிகப்படியான வாக்குகளையே பெற்றுள்ளார். ஆனால் இந்த நாடுதழுவிய வாக்கெடுப்புக்களின் வீதம் ஜனாதிபதியைத் தெரிவு செய்வது இல்லை. மாநிலங்களில் இருந்து தெரிவு செய்யப்படும் தெரிவாளர்களே ஜனாதிபதியைத் தெரிவு செய்கிறார்கள்.

ஜனாதிபதியைத் தெரிவு செய்ய 270 தெரிவாளர்களது ஆதரவு தேவை. Hillary இற்கு 320 தெரிவாளர்களது ஆதரவு கிடைக்கக் கூடிய நிலையில் தற்போது இருக்கிறார். Donald இற்கு 218 தெரிவாளர்களது ஆதரவு கிடைக்க கூடிய நிலையில் தற்போது இருக்கிறார்.

ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு இடையே யான முதலாவது விவாதம் செப்ரெம்பர் 26, 2016 இல் Hempstead நியூயோர்க்கில் நடைபெற்றது. 90 நிமிடங்களுக்கு மேல் நடைபெற்ற இந்த விவாதத்தை 80 மில்லியனுக்கும் மேற்பட்டவர்கள் நேரடி ஒளிபரப்பாகப் பார்த்துள்ளனர். இதுவே அமெரிக்க வரலாற்றில் அதிகம் பேர் பார்த்த ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு இடையேயான விவாதம் ஆகும்.

இவ்விவாதத்தில் Donald Trump வென்ற தாக அவரின் ஆதரவு ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன. இவ்விவாதத்தில் Hillary Clinton வென்றதாக அவரின் ஆதரவு ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன. ஆனால் CNN போன்ற நான்கு மிகப்பெரிய ஊடகநிறுவனங்கள் விஞ்ஞானமுறைப்படி கருத்துக்கணிப்பு களை நடத்தி (Scientific polls) தமது முடிவுகளில் 50% தொடக்கம் 60% ஆனவர்கள் இந்த விவாதத்தில் Clinton திறம்படச் செய்துள்ளார் எனவும் 30% தொடக்கம் 40% ஆனவர்கள் Donald திறம்படச் செய்துள்ளார் எனவும் கூறுவதாக செய்தி வெளியிட்டுள்ளனர்.

அரசியல் வாதிகள் தமது விவாதங்களில் தரவுகளை தமக்குச் சார்பாகத் திரித்துக் கூறுவது உலகெங்கும் சர்வசாதாரணம். ஆனால் தற்போது ஊடகங்கள்



உடனுக்குடனேயே அந்தத் தரவுகள் சரியோ அல்லது தவறோ என ஆதாரத்துடன் வெளியிடத் தொடங்கி விட்டன. இதன்படி Toronto Star இனுடைய அமெரிக்க அரசியல் விடயங்களை அவதானித்து வரும் ஊடகவியலாளர் Daniel Dale இவ் இரண்டு ஜனாதிபதி வேட்பாளர்களும் விவாதத்தின் போது கூறிய தகவல்களை சரிபார்த்துப் பின்வருமாறு கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்த முதலாவது ஜனாதிபதி வேட்பாளர் களுக்கிடையேயான விவாதத்தின்போது இரு வேட்பாளர்களும் கூறிய தரவுகளில் Clinton தவறான நான்கு தரவுகளைக் கூறியுள்ளார் எனவும் Trump தவறான 34 தரவுகளைக் கூறியுள்ளார் எனவும் தெரிவித்துள்ளார். இவற்றில் சிலவற்றை பார்ப்போம்.

அமெரிக்க-ஈராக் சண்டையை ஆரம்பித்தது தவறு எனத் தற்போது கூறும் Trump அந்தப் போரிற்கு ஒட்டு மொத்தமாக அமெரிக்க அரசியல் வாதிகளையும் அவர்கள் சார்பாக Clinton ஐ குற்றம் சாட்டினார். தான் ஒருபோதும் ஈராக் சண்டைக்கு ஆதரவளிக்கவில்லை என மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார். ஆனால் ஊடகவியலாளர்களின் தகவல் களின்படி Trump நேர்காணல் ஒன்றில் செப்ரெம்பர் 11, 2002 இல் ஈராக் போருக்கு ஆதரவு தெரிவித்துள்ளார். பின்னர் மார்ச் 21, 2003 இலும் ஈராக் போருக்கு ஆதரவாகக் கருத்து தெரிவித்துள்ளார். ஆனால் போர் ஆரம்பித்த பிற்பாடே அந்தப் போர் தவறு எனக் கருத்துக்கூறத் தொடங்கினார்.

பசுமை வாயுக்களால் ஏற்படும் காலநிலை மாற்றம் சீனர்கள் உருவாக்கிய ஏமாற்று வித்தை என Trump கூறினார் என்று Clinton கூறியதை திட்டவட்டமாக மறுத்து அது தவறான தகவல். தான் ஒருபோதும் அப்படிக் கூறவில்லை என Trump விவாதித்தார். ஆனால் ஊடகவியலாளர் கள் Trump இனுடைய 'பசுமை வாயுக்களால் ஏற்படும் காலநிலை மாற்றம் சீனர்கள் அமெரிக்கத் தயாரிப்புக்களின் உற்பத்திச் செலவைக் கூட்டக் கையாளும் ஏமாற்று வித்தை' என்ற 2012 இல் அனுப்பிய Tweet தகவலைச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

வருடாந்தம் $600 மில்லியனுக்கு மேல் வருமானம் பெறும் Trump தனது வருமான வரிக்கணக்குகளை வெளியிட மறுத்து வருகிறார். கடந்த 40 வருடங்களுக்கு மேலாக ஜனாபதி வேட்பாளர்கள் எல்லோரும் தமது வருமானவரிக் கணக்கு களை பொதுமக்களுக்கு வெளியிட்டே வந்துள்ளனர் எனச்சுட்டிக் காட்டிய Clinton சில வருடங்கள் $600 மில்லியனுக்கு மேல்



சிவ ஞானநாயகன்
vlambaram@sympatico.ca


தொடர்ச்சி 20ஆம் பக்கம்...


BUY, SELL or LEASE
Dinesh Jeganathan
Sales Representative

Cell: 647-895-3466
Email: jdinesh@live.ca
Office: 416.298.3200
Fax: 416.298.3440
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, Ontario, M1P 4S6
*each office independently owned and operated
** Not intended to solicit Buyers/Sellers under representation agreement.

# கிளிநொச்சி பொதுச்சந்தை தீவிபத்து: ஒரு துயரச் சம்பவம்!




- ஆதித்தன் -

கிளிநொச்சி பொதுச் சந்தையில் கடந்த 16ம் திகதி ஏற்பட்ட தீ விபத்து போரின் பின்னர் இடம்பெற்ற பாரியதொரு துயரச் சம்பவம் என்றே குறிப்பிடலாம். ‘மரத்திலிருந்து விழுந்தவனை மாடேறி மிதித்தது’ என்று குறிப்பிடப்படும் கிராமியப் பழமொழிக்கு ஒப்பானது. இது பொதுச் சந்தையில் ஏற்பட்ட தீயினால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு சுனாமி ஏற்பட்டதைப் போன்ற அதிர்ச்சியையும், துயரத்தையும் ஏற்படுத்தியது. குறித்த தீ விபத்தின் காரணமாக 124 கடைகள் சேதமாகியுள்ளன. அவற்றில் 60 கடைகள் முற்றாகத் தீக்கிரையானதுடன், 64 கடைகள் பகுதியளவில் சேதமாகியுள்ளன. முற்றாக நாசமடைந்தவை அனைத்தும் புடவைக் கடைகளாகும்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்று வரையும் தங்கள் பொருளாதார, வாழ்வாதார நிலைகளில் பின்தங்கியே வாழ்ந்து வருகின்றனர். அவர்களால் அந்த இழப்பிலிருந்து மேலெழ முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. போரின் பின்னரான கடந்த ஏழு வருடங்களாவும் இந்நிலையே தொடர்கின்றது. அவர்களால் பழைய வாழ்க்கைக்கு திரும்ப இயலவில்லை. உயிர்களையும் உடமைகளையும் மோசமான வகையில் போர் அழித்தது. உயிரிழப்புக்கள் குறித்த வேதனைகள் - அந்த மனவடுக்கள் இன்னமும் உறவுகளிடத்தில் அழியாமலேயே இருந்து வருகின்றன.

இழந்த உயிர்களை திரும்பிப் பெற முடியாது. ஆனால், பொருளாதாரத்தை மீண்டும் பெற்று வாழ வழிவகைகள் உள்ளன. அதனை ஆட்சியதிகாரத்தில் உள்ளவர்கள்தான் செய்து கொடுக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படாததால் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் மேலும் துன்பங்களையே சுமந்து வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவ்வாறு சிரமப்படுகின்ற தரப்பினரில் வர்த்தகர்களும் அடங்குகின்றனர். போரால் பாதிக்கப்பட்ட, கிளிநொச்சி போன்ற வன்னிப் பிரதேசங்களில் உள்ள வர்த்தகர்கள் தங்கள் தொழிலை கடன் பெற்றே மேற் கொள்கின்றனர். அது மட்டுமன்றி போரின் பின்னர் வந்து இப்பகுதிகளில் வர்த்தகம் மேற்கொள்ளும் வெளியாருடனும் அவர்கள் போட்டியிட வேண்டியுள்ளது. இந்நிலையில் வர்த்தகம் என்பது சவாலான தொழிலாகவே மாறியுள்ளது. பொதுவாக இப்பகுதிகளி லுள்ள வர்த்தகர்களின் தொழில்கள் வளர்ச்சி நிலை குன்றியதாக, மோசமான நிலையிலேயே உள்ளது. அதிலும் குறிப்பாக, கிளிநொச்சி பொதுச் சந்தை வர்த்தகர்களின் நிலைமை இன்னும் மோசமானது.

தீ விபத்து ஏற்பட்ட பகுதியினை பார்வையிட வந்த வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம், வங்கிகளில் கடன் பெற்றும், நகைகளை அடகு வைத்தும் முதலீடு செய்து வியாபாரத்தை ஆரம்பித்திருந்த தாம் இப்போது அனைத்தையும் இழந்துள்ளதாகவும், தாம் பெற்றக்கொண்ட வங்கிக் கடன்களிற்கு குறிப்பிட்ட அளவு காலத்திற்கு வட்டியை தள்ளுபடி செய்வதற்கும், அவற்றை மீளச் செலுத்துவதற்கு கால நீடிப்பு செய்து தருமாறுமே பாதிக்கப்பட்ட கிளிநொச்சி பொதுச் சந்தை வர்த்தகர்கள் கேட்டுக்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தொழில் செய்ய முதலீடு இல்லாத நிலையில் இருந்த அவர்கள் தங்களுக்கான நிரந்த சந்தை எங்கே அமையப் போகின்றது என்கின்ற குழப்ப நிலையிலும் ஆரம்பத்தில் இருந்தனர். கிளிநொச்சி நகரில் ஏற்கனவே இருந்த சந்தை போரின் பின்னர் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டது.

கிளிநொச்சி நகரிலிருந்து சுமார் இரண்டு கிலோமீற்றர் தொலைவிலுள்ள கனகபுரம் என்ற இடத்தில் பொதுச்சந்தை அமைக்கப்பட்டது. அதாவது சந்தைக்கான இடம் மட்டுமே காட்டப்பட்டது எனலாம். அங்கு சந்தை வர்த்தகர்கள் தங்களின் செலவிலேயே கொட்டகைகளை அமைத்து வியாபாரம் மேற்கொள்ளப் பணிக்கப்பட்டனர். அந்த இடம் பொதுச் சந்தைக்குப் பொருத்தமற்றதாக இருந்த காரணத்தினால், அங்கு வியாபாரம் மிகக் குறைந்தளவிலேயே நடைபெற்றது. மரக்கறி, மீன் போன்றவற்றைக் கொள்வனவு செய்வதற்காக மட்டுமே அச்சந்தைக்கு மக்கள் சென்றனர். வேறு வியாபாரங்கள் சுமாராகக் கூட நடைபெறவில்லை. இந்நிலையில், சந்தை வர்த்தகர்களின் போராட்டங்களை அடுத்து மீண்டும் கிளிநொச்சி நகரத்திற்கு சந்தை மாற்றப்பட்டது. அங்கும் வர்த்தகர்கள் தங்கள் செலவிலேயே கடைகளை அமைக்க நிர்ப்பந்திக்கப்பட்டனர். கனகபுரம் சந்தையில் அமைத்தவற்றை அப்படியே கைவிட்டு வந்த அவர்கள், மீண்டுமொரு செலவில் கிளிநொச்சி நகரில் கடைகளை அமைத்தனர்.

கடன்களைப் பெற்று சிறிது சிறிதாகத் தங்கள் தொழில்களை ஆரம்பித்து நடத்தத் தொடங்கினர். அவர்களின் உழைப்பின் பெரும் பகுதி பெற்ற கடன்களை மீளச் செலுத்துவதற்கே செலவழிந்தது. இவ்வாறான நிலையில்தான் இந்த தீவிபத்து மேலும் ஒரு இழப்பையும், துயரத்தையும் அவர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. கிளிநொச்சிச் சந்தைக்குள் மரக்கறி வியாபாரத்திற்காக



மட்டும் நிரந்தரக் கட்டடம் ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. ஏனையவை அனைத்தும் தற்காலிக கொட்டகைகளே. இவ்வாறு அமைக்கப்பட்ட கொட்டகைகள்தான் இத் தீவிபத்தினால் எரிந்து நாசமாகியுள்ளன.

வடக்கில் கிளிநொச்சி பொதுச்சந்தை பிரதானமான ஒரு சந்தையாக இருக்கின்றது. அதனை அபிவிருத்தி செய்து நிரந்தர கட்டங்களை அமைக்க அரசாங்கமோ உள்ளூர் நிர்வாகமோ கரிசனை காட்டவில்லை. இதன் காரணமாகவே இவ்வாறான விபத்து ஏற்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் இச்சந்தையில் தீவிபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. எனினும் இவ்வாறு பாரியதாக அவை இருக்கவில்லை. முன்னர் ஒரு தடவை புடவைக் கடை ஒன்று தீவிபத்தினால் பாதிக்கப்பட்ட போது நிரந்த கட்டடங்கள் அமைக்கப்படுவதன் அவசியம் தொடர்பிலும், இச்சந்தையை நிர்வகிக்கும் கரைச்சிப் பிரதேச சபைக்கு தீயணைப்பு பிரிவு ஒன்று இருப்பதன் அவசியம் குறித்தும் வர்த்தகர்களாலும் நலன்விரும்பிகளாலும் சுட்டிக் காட்டப்பட்டது. இக்கோரிக்கைகள் கவனத்தில் எடுக்கப்படவில்லை.

குறித்த தீவிபத்து நடைபெற்ற உடனேயே தீயை அணைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் பாதிப்பைக் குறைத்திருக்கலாம். தொலைவிலிருந்து இராணுவத்தினரின் தீயணைப்புப் பிரிவினர் அழைக்கப்பட்டனர். இதனால் உடனடியாகத் தீயைக் கட்டுப்படுத்த முடியாது கடைகள் எரிந்து நாசமாகின. இதனால் கோடிக்கணக்கான ரூபாய்கள் இழப்பு குறித்த வர்த்தகர்களுக்கு ஏற்பட்டுள்ளது. நல்ல வேளையாக உயிரிழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை.

இப்போது, எதனால் - எவ்வாறு இந்தத் தீவிபத்து ஏற்பட்டது என்பதை ஆராய்வதை விடவும் இழப்பை எதிர்கொண்டுள்ள வர்த்தகர்களுக்கு உதவுவதே அத்தியாவசியமான பணியாகும். வட மாகாண முதலமைச்சர் மற்றும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள் என அனைவரும் வந்து சந்தையைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர். வர்த்தகர்களுக்கு உதவுவதாகவும், இழப்பீடுகளை வழங்குவதாகவும், புதிய கட்டடங்களை அமைத்துக் கொடுப்பதாகவும் வாக்குறுதிகளையும் வழங்கிச் சென்றுள்ளனர்.

தற்போது வெளியாகியுள்ள தகவல்களின் படி, தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சிச் சந்தைக் கட்டடத் தொகுதியினை மீள நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், சேதமடைந்த சந்தைக் கட்டடத் தொகுதியை மீளமைப்பதற்கு 100 மில்லியன் ரூபாவினை ஒதுக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த 100 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கான இணக்கத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார் எனவும், அதன்படி விசேட அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்து இதற்கான நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். துரிதமாக இவ்வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். தங்கள் வாழ்வாதார தொழிலை தொடரவும், பெற்ற கடன்களை மீளச் செலுத்தவும் அவர்கள் நீண்ட காலம் காத்திருக்க முடியாது.

வடக்கின் நிர்வாகம் இதனைச் செய்வதா? அல்லது மத்திய அரசாங்கம் செய்வதா? என்பதெல்லாம் இப்போது பிரச்சினையல்ல. உடனடியாக பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இதற்கு அரசியல் தடைகள் எவையும் இருக்கக் கூடாது.



விளம்பரம்™ VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
பத்திரிகை முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப்பொறுப்பாளர்: விஜய் செல்லையா
தட்டச்சு: கலா விஜயபாலன்
அலுவலக பொறுப்பாளர்: செல்வி ரஞ்சன், தாரணி இந்திரராஜ்
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com / www. tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை ‘விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்’ ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.




4 Bedrooms, 4 W Room
Upgraded Kitchen Cabinets, Backsplash, Granite Counter Top & Centre Island




4 Bedrooms, 3 W Room
Master Bdrm Has An Amazing 4Pc Ensuite & Walk-In Closet




4+1 Bedrooms, 4 W Room
Professionally Finished Basement With Huge Bedroom




3 Bedrooms, 3 W Room
California Shutters, Oak Staircase, Fire Place




3 Bedrooms, 3 W Room
Dining & Family Room With Gas Fireplace




4+2 Bedrooms, 4 W Room
Large Dining Rm W/ Decorative Columns For Entertaining




4 Bedrooms, 3 W Room
Large Detached Fully Bricked Double Car Garage




3 Bedrooms, 3 W Room
Upgraded Oak Staircase With Iron Picket Rails




3+1 Bedrooms, 2 W Room
Professionally Landscaped Including Stamped Concrete




3 Bedrooms, 3 W Room
Bright And Sun-Filled Home Open Concept Kitchen




3+2 Bedrooms, 2 W Room
Potential Basement Apartment Lots Of Parking




3 Bedrooms, 3 W Room
Open Concept Main Flr & Fam Rm W/ W/O To Yard




3 Bedrooms, 3 W Room
Large Master Bedroom With Sumptuous Ensuite Bath




3 Bedrooms, 4 W Room
Beautiful Hardwood On Main Floor Walk-Out To Balcony




3 Bedrooms, 2 W Room
2 Year New " Sierra" Built Royal Wynd Home

KZG 647-200-5833



Sell your home
**faster**
and more
**money**

RE/MAX Platinum Club Award

## ELAGUPPILLAI SRINATHAN (MIKE) B.SC

Sales Representative
**Direct 416 - 276-1225**
Email: esrinathan@trebnet.com

Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800
Fax: 905-470-7770

# Your Home Sold In 30 Days or We buy it

**When you list your home with Mike,you receive these Guarantees.**

Your home advertised 24 hours a day until it is sold, Your home advertised in full color prints ads every week until it is sold, Our team of specialists for the same price as hiring a single agent

# தமிழ்நாடு
# தண்ணீர் எரிகிறது!
# காவிரியில் பாயும் இனவெறி

இந்தியாவில் தமிழகத்துக்கும் கர்நாடகாவுக்கும் இடையே காவிரி நதி நீர் பகிர்வு விவகாரம் மீண்டும் கர்நாடக தமிழர்களின் மீதான வன்முறையாக வெடித்துள்ளது. பேருந்து, லாரி, கார், வேன் என 200க்கும் மேற்பட்ட தமிழக வாகனங்கள் கொளுத்தப் பட்டுள்ளன. கர்நாடக மாநிலத்தின் தலைநகரான பெங்களூருவில் தமிழக பதிவெண் கொண்ட வாகனங்களில் பயணம் செய்வதே பாதுகாப்பற்றது என்ற நிலை. இதனால், தமிழகத்துக்கும் கர்நாடாவுக்கும் இடையே நிறுத்தப்பட்ட போக்குவரத்து ஒரு மாதம் ஆகியும் மீண்டும் தொடங்கப்படவில்லை. தமிழர்கள் மீது பெரிய அளவில் வன்முறை நிகழ்த்த கன்னட அமைப்புகள் திட்டமிட்டு இருப்பதாக இந்திய அரசின் மத்திய உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளதால், கர்நாடாவில் வாழும் தமிழர்கள், 1991இல் நடந்தது போன்று கொலைவெறித் தாக்குதலாக இந்த கலவரம் விஸ்வரூபம் எடுத்துவிடுமா என்று அச்சமடைந்துள்ளனர்.

பற்றி எறியும் பெங்களூரு

"எங்கள் அணைகளில் குடிநீருக்கே தண்ணீர் இல்லை" என்ற கர்நாடகத்தின் வழக்கமான பொய்யையும் புரட்டையும் மீறி, தமிழகத்திற்குத் தண்ணீர் திறந்துவிட கர்நாடக அரசுக்கு உத்தரவிட்டுள்ளதுடன், தமிழகத்தின் நீண்டநாள் கோரிக்கையான காவிரி மேலாண்மை வாரியத்தை இந்திய மத்திய அரசு நான்கு வாரங்களுக்குள் அமைக்க வேண்டும் என்றும் இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்புக் கூறியுள்ளது. மேலும், 'வாழு வாழவிடு' என்றும் கர்நாடகாவுக்கு அறிவுறுதியுள்ளது. ஆனால், இந்தத் தீர்ப்பு தரும் மகிழ்ச்சியைவிட, "காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கும் உச்ச நீதிமன்றத்தின் உத்தரவைப் பிரதமர் ஏற்கக்கூடாது. அந்த உத்தரவை முழுமையாக நிராகரிக்க வேண்டும். காவிரி நடுவர் மன்ற தீர்ப்பையும் மறு ஆய்வு செய்ய வேண்டும்" என்று இந்திய முன்னாள் பிரதமரான தேவகவுடா கர்நாடகாவில் கக்கியுள்ள வெறுப்பு அதிக அச்சத்தைத் தருகிறது. தேவகவுடாவின் குரல் ஒரு தனிநபர் குரலல்ல. ஒட்டுமொத்த கர்நாடக அரசியல்வாதிகள் குரல். இந்தக் குரல்தான் காவிரி விவகாரம் சிக்கலாகும் போதெல்லாம் கர்நாடக தமிழர்கள் மீதான வன்முறையாக வெடிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

நம்முடன் தொலைபேசியில் பேசிய பெங்களூர் தமிழ்ச் சங்கம் தலைவர் கோ. தாமோதரன், "கர்நாடகாவில் 7ஆம் தேதி பந்த் நடைபெறும் என்று அறிவித்ததுமே



- சிவதானு -

நாங்கள் முன்னெச்சரிக்கையாக தமிழர்கள் எல்லோரையும் பாதுகாப்பாக இருக்கும்படி அறிவுறுத்தினோம். ஆனால், அப்போது நிலைமை இவ்வளவு தூரம் செல்லும் என்று எதிர்பார்க்கவில்லை. கர்நாடகாவில் தமிழர் ஒருவர் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து, 12 ஆம் தேதி ராமநாதபுரத்திலுள்ள தமிழர்கள் சிலர் கன்னடத்தைச் சேர்ந்தவரை தாக்கினார்கள். அன்று முழுவதும் அந்த வீடியோ இங்குள்ள அனைத்துத் தொலைக் காட்சி சேனல்களிலும் தொடர்ந்து வெளியானது. அதன்பிறகுதான் கலவரம் ஆரம்பித்தது. அன்று மதியம் 2:30 மணிக்கு கர்நாடக முதல்வர் சித்தராமையாவை அவருடைய இல்லத்தில் சந்தித்துப் பேசினோம். "தமிழர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்கவேண்டும் என்றும் நிலைமையை விரைவாக கட்டுக்குள் கொண்டு வாருங்கள்" என்றும் கூறினோம். "நிச்சயமாக நாங்கள் பாதுகாப்பு கொடுக்கிறோம்" என்று அவர் கூறினார். ஆனால், 5 மணிக்கு மேல் யாரும் எதிர் பார்க்காத விதமாக மிகப்பெரிய கலவரம் ஆரம்பமானது. அடுத்த இரண்டு மணி நேரத்திற்குள் கலவரம் காட்டுத் தீ போலப் பரவ ஆரம்பித்துவிட்டது. கலவரக்காரர்கள் 1991இல் நடந்தது போன்ற வன்முறை வெறியாட்டத்தைத்தான் மீண்டும் கொண்டு வரப் பார்க்கிறார்கள். அப்போது தமிழர்களுடைய வீடுகளுக்குள் புகுந்து தாக்கினார்கள். இப்போது தமிழர்களுடைய வாகனங்களையும் உடமைகளையும் பார்த்துப் பார்த்து சேதப்படுத்துகிறார்கள். எனவே, ஒருவித அச்சத்தோடுதான் உள்ளோம்" என்றார். அரசு, அதிகார வர்க்கம், அரசியல்வாதிகள் ஆதரவு இல்லாமல் இந்தளவு கச்சிதமான கலவரம் சாத்தியமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அதேநேரம், "ஓசூர் ரோட்டில், தமிழ்நாடு - கர்நாடக எல்லையான அத்திரபள்ளியில் தான் வன்முறை அதிகமாக இருந்தது. மற்றபடி பெரும்பாலான இடங்களில் பயப்படும்படி பெரிய அசாம்பவிதம் எதுவும் நடக்கவில்லை. நாங்கள் இருக்கும் பகுதியில் வன்முறை எதுவும் இல்லை. என்றாலும், கிட்டதட்ட தமிழர்களில் பெரும்பாலானோர் வீட்டிலே கைதி போல் முடங்கிதான் விட்டார்கள். வீட்டுக்குள் இருந்தாலும் தெருவில் கொடியை மாட்டிக்கொண்டு ஏதாவது ஒரு ஆட்டோ செல்லும்போது நடுக்கமாகத்தான் இருக்கிறது. ஒரே ஆறுதல் கன்னடர்கள் அனைவருமே தமிழர்களுக்கு எதிரான வன்முறைக்கு ஆதரவாக இல்லை என்பதுதான். ஒரு சிலர் மட்டும்தான் இந்த வன்முறையை நிகழ்த்து கின்றனர். என்னுடைய கன்னட நண்பர்களே எல்லாம் பிரச்சனையும் முடியும் வரையில் வீட்டை விட்டு வெளியில் வராதீர்கள் ஏதாவது தேவை என்றால் நாங்கள் வாங்கித் தருகிறோம் என்று சொன்னார்கள். தமிழர்கள் மட்டுமல்ல கன்னடர்களும் எப்போது இதெல்லாம் முடிந்து இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவோம் என்றுதான் காத்துக் கொண்டிருக்கிறார்கள்" என ஆறுதல் கூறுகிறார், நம்முடன் பேசிய ராஜசேகர் பெங்களூரில் ஒரு தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் தமிழர்.

அமைதிப் பூங்காவான தமிழகம்

கர்நாடகம் கொளுந்துவிட்டு எரிந்ததுடன் ஒப்பிட்டால் தமிழகத்தில் ஒன்றிரண்டு சிறு அசம்பாவிதங்கள் தவிர பெரிய வன்முறைச் சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை. இதற்காக தமிழர்களில் பலரும் பெருமைப் பட்டுக்கொள்ளும் அதேநேரம், "அமைதிப் பூங்காவாக இருப்பது நல்லதுதான் ஆனால், இப்படி சிறு எதிர்ப்புக்கூடக் காட்டாமல் இருப்பது நல்லதுக்கல்ல" என்று பலர் சமூக வலைதளங்களில் கொதித்து எழுதியதும் குறிப்பிடத்தக்கது.

"தமிழ்ப் பொதுச் சமூகம் இவ்வளவு கலவரத்துக்குப் பிறகும் காவிரிப் பிரச்சினை குறித்த எந்தச் சலனங்களும் இல்லாமல் ஏனோ தானேவென்று இருக்கிறது? அமைதி வழியில்கூட ஏன் எந்த எதிர்ப்பையும் பதிவு செய்ய முன்வரவில்லை? காவிரிப் பிரச்சினையில் மட்டுமல்ல எல்லாப் போராட்டங்களிலும் தமிழர்கள் இப்படித்தான் நடந்து கொள்கிறார்கள். தமிழ்நாட்டில் மீனவர்கள் தங்களது பிரச்சினைகளுக்காகப் போராடினால், மற்றத் துறையினர் அதைக் கண்டு கொள்வதில்லை. விவசாயிகள் தங்களது பிரச்சினைகளுக்காகப் போராடினால், மீனவர்கள் உள்ளிட்ட மற்றத் துறையைச் சேர்ந்தவர்கள் அதைக் கண்டுகொள்வதில்லை. அதேபோல்தான் நெசவாளர்கள், வணிகர்கள், மாற்றுத் திறனாளிகள் என எல்லாரும் தனித்தனியாகப் போராடுகிறார்கள். ஒவ்வொரு துறையினர் போராடும் போது, மற்றத் துறையைச் சேர்ந்தவர்கள் அவர்களோடு கை கோர்ப்பதில்லை.

காவிரியில் தண்ணீர் இல்லாவிட்டால், அதன் பாதிப்புகள் தனது வீடு வரைக்கும் வரும் என்பதைக்கூட புரிந்துகொள்ளாத சமூகமாக தமிழ் சமூகம் தன்னை மாற்றிக் கொண்டிருக்கிறது. மீனவர்கள்தானே என்கிறது. கடல் பாதிக்கப்பட்டால், அதன் பாதிப்புகள் எல்லோருக்கும்தான் என்பதைப் புரிந்து கொள்ளவே விரும்பாத அதனிடம் எப்படி எடுத்துச் சொல்வது? கூடங்குளத்தில் போராட்டம் நடக்கிறதென்றால் அதனால் எனக்கென்ன என்று மதுரையிலேயே கேட்கிறார்கள்" என்கிறார் பத்திரிகையாளர் சரவணன் சந்திரன்.

இதை ஏற்றுக்கொள்ளும் காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் பொதுச்செயலாளர் எஸ். தனபால், "காவிரிப் பிரச்சினை என்றாலே ஏதோ டெல்டா விவசாயிகளின் பிரச்சினை மட்டும்தான் என்று நினைக்கிறார்கள். காவிரியில் தண்ணீர் வரவில்லை என்றால் சென்னை, ராமநாதபுரம், வேலூர் வரை குடி தண்ணீர் பிரச்சினை ஏற்படும். அதுபோல இங்கு நெல் விளைச்சல் குறைந்தால் தமிழகத்தில் அரிசி விலை உயர்வதோடு மட்டுமல்லாது கேரளா, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட தென்னிந்தியா முழுவதும் அரிசி விலை உயர வாய்ப்புள்ளது என்பதை அனைவரும் உணர வேண்டும்" என்று கொதிக்கிறார்.

நம்முடன் பேசிய விவசாய சங்கங்களின்

தொடர்ச்சி 20ஆம் பக்கம்...

A+ DRIVING SCHOOL
For all your driving educational needs Thava Nagaratnam
(Govt. Licensed In - Car Instructor)
416.473.6155
www.aplusdriving.ca


# நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

## தொடர் - 472

கடந்த சில மாதங்களாக வட்டிவீதத்தைப் பற்றிய நிலைப்பாடே யாவர் மனதிலும் காணப்படுகின்றது. அமெரிக்க வட்டிவீதம் அதிகரிக்கலாம் என்ற பீதி பலரது உள்ளங்களில் காணப்பட்ட போதிலும் செப்ரெம்பர் மத்திய பகுதியில் அமெரிக்காவின் பொருளாதார அறிக்கைகளின் பலவீனங்கள், வட்டிவீத அதிகரிப்பு குறுகிய காலங்களில் ஏற்படலாம் என்ற எண்ணம் அடிபட்டு விட்டது. இதனை அடிப்படையாகவும் கனேடியப் பொருளாதாரத்தின் நிலைப்பாட்டையும் கருத்தில் கொள்வதன் மூலம், கனேடிய வட்டி வீதம் அடுத்த வருடம்வரை எதுவித அதிகரிப்பும் ஏற்படாது என்ற நிலைப்பாட்டிற்கு வரமுடியும். கனேடியப் பொருளாதார நிலைமை மேலும் மோசமடையும் சந்தர்ப்பத்தில் மத்திய வங்கியின் வட்டி வீதத்தில் குறைப்பு ஏற்பட்டால் கூட ஆச்சரியப்பட வேண்டிய அவசியமிருக்காது.

ஓகஸ்ட் 02, 2016 இல் வன்கூவரில் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு வாங்குபவர்களிற்கு 15% மேலதிக நிலமாற்று வரியினால் ஓகஸ்ட் 2016இல் ஆதன வியாபாரத்தின் வியாபாரத்தில் 18% இறக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் அண்மையில் வெளியிடப்பட்ட தகவல்களின்படி வன்கூவரில் 10% ஆன வெளிநாட்டவர்களே முதலீடு செய்வதாகக் காணப்பட்டது. வெளிநாட்டவர்கள் ஆதனம் வாங்குவதை நிறுத்தினதாலா, அல்லது கனேடியர்கள் வாங்குவதனை தள்ளிப் போட்டதனாலா? 18% இறக்கம் ஏற்பட்டது என்பது எதிர்காலத்தில் தெரியவரும்.

இதற்கு மாறாக ரொறொன்ரோவின் நிலைப்பாடு உள்ளது. ரொறொன்ரோ பெரும்பாகத்தில் வீட்டின் விலை 18% இனால் அதிகரித்ததுடன் விற்கப்பட்ட ஆதனங்களும் 23% இனால் அதிகரித்துள்ளது.

வன்கூவரில் வாங்க இருந்த வெளிநாட்டவர்கள் ரொறொன்ரோவை நோக்கி வந்து விட்டார்களா என்ற இயற்கையான கேள்வி தோன்றியுள்ளது. கனடாவில், இன்றைய காலத்தில் ரொறொன்ரோ பெரும்பாகத்தைத் தவிர மற்றைய மாகாணங்களின் அனேகமான நகரங்களில் ஆதனத்தின் வியாபாரம் மந்த நிலையிலும் கீழ்நோக்கிச் செல்வதனையும் காணலாம்.

ஆனால் ரொறொன்ரோவில் ஏற்பட்ட விலை அதிகரிப்பினால் அடமானக்கடன் மற்றும் கிறடிட்காட், தனிப்பட்ட கடன், Line of Credit போன்ற தனிப்பட்ட கடன்களினால் கனேடியர்கள் பெரிய கடனாளிகளாக இருப்பதாக அறியப்படுகின்றது. கனேடியர்களின் கடன்தொகை 2016 இன் இரண்டாம் கால் பகுதியின் இறுதிப்பகுதியில் $2



ரில்லியனாக காணப்பட்டது. இதில் (One Trillion=1,000 Billion) அடமானக்கடன் மட்டும் $1.3 ரில்லியனாகக் காணப்படுகின்றது. மற்றைய கடன்கள் மிகுதியாக உள்ளது. (குறிப்பு - கனேடியர்களின் மொத்தப் பெறுமதி (Networth) $10 ரில்லியனாக அதிகரித்துள்ளது.

கனேடியப் பொருளாதாரம், சராசரியாகக் காணப்பட்டபோதிலும், அரசு போதியளவு பணத்தை, பொருளாதாரத்தை ஆரோக்கியமான நிலையில் வைத்திருப்பதற்காகச் செலவிடுகின்றது. இதனால் நிர்மாணம் சம்பந்தப்பட்ட பகுதி பிரகாசமாகக் காணப்படுகின்றது. இதிலும் குறிப்பாக ரொறொன்ரோ பெரும்பாகம் சிறப்பாகவும் ஆரோக்கியமாகவும் காணப்படுகின்றது. மேலும் ரொறொன்ரோவின் ஆதனவியாபார அதிகரிப்பு வன்கூவர் போன்ற புதியதொரு வரியை ரொறொன்ரோவிலும் கொண்டு வர வழிசமைக்குமா? இது எல்லோர் மனதிலும் தோன்றுகின்ற கேள்வியாக உள்ளது.




**Engineering Drawing Package for Custom Build Home to Obtain Site Plan Approval and Building Permits - $11,995+HST**

Our Engineering Drawing Package for Custom Build Home includes the all the Applicable Drawings, Plans and Reports including Boundary & Topographical Survey, Site Plan, Site Grading & Erosion Control Plan, Site Servicing Plan, Floor Plans, Elevations, Cross Sections, Foundation & Roof Details, Arborist Report, Heat Loss Calculations, Duct & Ventilation Design to obtain the Site Plan Approval and Building Permits.

**Create Your Dream Home !!**

**We offer Total Project Management for Custom Build Home, including Site Plan Approval, Building Permits, Arranging Construction Loan, and Construction Management for $22,975+HST**



**சகலவிதமான கட்டிட நிர்மாண வரைபடத் தேவைகளுக்கு நம்பிக்கையுடன் நாடுங்கள்**

**M.BASKARASINGHAM**, P.Eng.

**CHARLES AARON JAYAKAR**, B.Arch **JOOMIN PARK**, M.Eng

416 **332 1743** www.**buildingexpertscanada**.com

# அத்தனைக்கும் ஆசைப்படு!



## சத்குரு வாசுதேவ்

**என்னிடம் தவறாமல் கேட்கப்படும் கேள்விகளுள் ஒன்று...**

'கடவுள் இருக்கிறாரா, இல்லையா?'

ஆதிமனிதன் பயத்தால் ஆட்டுவிக்கப் பட்டான். திடீரென்று வானில் வெளிச்சக் கீற்றுகள், தடதடவென்று ஓசை, பொத்துக் கொண்டு கொட்டும் தண்ணீர், அளவிட முடியாத வான்பரப்பு, கணக்கிட முடியாத நட்சத்திரங்கள், எல்லைகள் புரியாத அலைகடல்... எதற்கும் காரணம் புரியாமல் மனிதன் மிரண்டான். இந்தப் பிரபஞ்சத்தின் பிரமாண்டத்தின் முன் தன்னை ஒரு தூசு போல் உணர்ந்தான். தனக்குப் புரிபடாத சக்திக்கு முன் பணிந்து, தன்னைப் பாதுகாக்க வேண்டினான். மழையைக் கும்பிட்டான். சூரியனை வணங்கினான். அன்றிலிருந்தே அச்சத்தின் காரணமாக ஏற்றுக் கொள்ளப்பட்டவரானார் கடவுள்!

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

பிறந்ததிலிருந்தே உங்கள் தாயும், தந்தையும் சமூகமும் கடவுள் உண்டு, கடவுள் உண்டு என்று சொல்லி வந்திருப்பதால் தான் நீங்களும் கடவுள் இருப்பதாக நம்புகிறீர்கள்! உங்கள் குடும்பத்தினர் எந்தக் கடவுளின் கட்சியைச் சேர்ந்தவர்களோ அந்தக் கடவுளை மட்டும் தான் உங்களால் ஏற்றுக் கொள்ள முடிகிறது. உங்களுக்குப் பழக்கமான ஜரிகையிட்ட உடைகளையும் ஆபரணங்களையும் அணிந்துதானே கடவுள் அருள் புரிவார்? காலண்டர்களின் அச்சிட்ட தோற்றங்களில் வராமல், வித்தியாசமாக ஜீன்ஸும் ஜிப்பாவும் அணிந்து வந்தால் அவரைக் கடவுள் என்று ஏற்றுக்கொள்வீர்களா?

யானைகள் உலகத்துக்குப் போய் கடவுள் எப்படி இருப்பார் என்று கேளுங்கள். 'எங்களைவிடப் பெரிய உருவத்துடன், நான்கு தும்பிக்கைகளுடன் இருப்பதுதான் கடவுள்' என்று சொல்லும். எறும்புகளைக் கேட்டால், ஆறங்குலம் உள்ள பிரமாண்டமான எறும்புதான் தங்கள் கடவுள் என்று சொல்லும்.

இந்தப் பிரபஞ்சத்தில் மனிதனைவிடப் பரிணாம வளர்ச்சி கண்டுவிட்ட வேறொரு உயிரினம் வேறொங்காவது இருக்கக் கூடும். அதனிடம் உங்கள் கடவுகளைக் காட்டினால், '*சீச்சீ*'! கேவலம் மனிதனின் தோற்றத்தையா கடவுள் கொண்டிருப்பார்? அவர் எங்களைப் போலல்லவா இருக்கிறார்!' என்று கைகொட்டிச் சிரிக்கும்.

தங்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளத் தெரியாத பலர் மற்றவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கப் புறப்பட்டு விடுகிறார்கள்.

கடவுளைப் பற்றி உங்களுக்கு நேரடி அனுபவங்கள் கிடையாது. அதனால் அடுத்தவர்கள் சொன்னதை அப்படியே ஏற்று நம்பிக்கை வைத்தீர்கள். கோயிலுக்கு எதற்காகப் போகிறீர்கள்? கடவுளை உணர்வதற்காகவா?

'அதைக் கொடுப்பா, இதைக் கொடுப்பா, காப்பாற்றுப்பா' என்று வேண்டிக்கொள்ளத் தானே? உங்கள் கடவுள் நம்பிக்கைகள் பெரும்பாலும் பேராசை மற்றும் பயத்தின் அடிப்படையில் தானே வளர்க்கப்பட்டிருக்கலாம்?

'உங்கள் வீட்டில் டஜன் கணக்கில் கடவுள் படங்களை மாட்டி வைத்திருக்கிறீர்களே, அதனால் வாழ்க்கையைப் பற்றிய உங்கள் அச்சம் விலகிவிட்டதா? கடவுளர்களையும் சேர்த்து அல்லவா வீட்டுக்குள் வைத்துப் பூட்டிவிட்டுப் போகவேண்டியிருக்கிறது.?

கடவுள் என்பதே உங்கள் அச்சத்தின் அடையாளமாக இருப்பதால் தான் பயபக்தி என்று ஒரு வார்த்தையை நீங்கள் ரசிக்கிறீர்கள். கடவுள் அன்பானவர் என்றால், அவரிடம் பக்தி இருந்தால் மட்டும் போதா? பயம் எதற்கு?

கடவுளை உணராதவர்கள்தான் இன்றைக்குப் பக்தியைப் பற்றி அதிகம் பேசுகிறார்கள்.

அப்படியானால் கடவுள் என்பவர் கற்பனைப் பாத்திரம்தானா? அவரைப் பற்றிக் கவலைப்பட வேண்டாமா?

ஒரு சிறு விதை பூமிக்குள் விழுந்ததும் மிகப்பெரிய விருட்சமாக வளர்கிறதே, எப்படி? இந்த விதையில் இப்படிப்பட்ட மரம்தான் வளரும், இப்படிப்பட்ட பூ தான் மலரும் என்று பதிவு செய்யப்பட்டிருக்கிறதே... இந்த விதிகளை அமைத்தது யார்? உங்களை மீறிய சக்தியை கடவுள் என்று சொல்லாமல் வேறு என்னவென்று சொல்வது?

ஆக, தொடங்கிய இடத்துக்கே வந்து விட்டோம்.
கடவுள் இருக்கிறாரா, இல்லையா?

இதைத் தெரிந்துகொள்ளும் ஆசை உங்களுக்குள் வந்துவிட்டால், நீங்கள் யாரிடம் கேட்டு அறிய முடியும்?

## 4 day Inner Engineering Program

***led by an Isha teacher trained by Sadhguru in Scarborough and Mississauga from November 03rd to 06th***

***Program Venue***

***Princess Banquet***, 3330 Pharmacy Avenue,
Scarborough (Toronto), ON M1W 3V8

***Park Inn by Radisson***, Toronto Airport West, 175 Derry Road East
Mississauga (Toronto), ON L5T 2Z7

***Program schedule***

Program timings are as follows for each day:
Thursday Nove 03rd: 6:30PM - 9:45 PM
Friday Nove 04th : 6:30PM - 9:45 PM
Saturday Nove 05th : 8:30AM - 7:00 PM
Sunday Nove 06th: 7:30AM - 7:00 PM
Contact Information

***Email: toronto@ishafoundation.org / Phone: 416 300 3010***
***Online registrations: www.innerengineering.com/total***




## 'எழுக தமிழ்'...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

தெரிவிக்கின்றனர்.

'எழுக மானுடம்' போன்ற பொதுவான தலைப்பை இந்த நிகழ்விற்குச் சூட்டியிருக்கலாம் என்றும், தெற்கில் தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டவர்கள், அதற்காகக் குரல் கொடுக்கின்ற முற்போக்கான சிங்களவர்கள் உள்ளனர். அவர்களையும் இந்த நிகழ்வில் இணைத்திருக்கலாம். இதன்மூலம் அரசாங்கத்திற்கும் சர்வதேசத்திற்கும் வெளிப்படுத்தப்பட்டுள்ள தமிழ் மக்களின் நியாயமான கருத்துக்களையும் உணர்வுகளையும் யாரும் இனவாதக் கண்ணோட்டத்தில் விமர்சிக்க முடியாத நிலையைத் தோற்றுவித்திருக்கலாம் எனவும் இந்த நடுநிலையாளர்கள் கருத்து வெளியிடுகின்றனர்.




எதிர்வரும் காலங்களில் இவ்வாறான நிகழ்வுகளை ஏற்பாடு செய்யும் போது, இவ்வாறான கருத்துக்களைக் கவனத்தில் எடுக்க வேண்டும். வெளிப்படுத்தப்பட்டுள்ள உணர்வுகள் நியாயமானவை என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை. ஆனால் அதன் வடிவம் பற்றிய கருத்துக்கள், விமர்சனங்களை மனதிற்கொள்வது நல்லது.

# சங்கப்பொழில் - சஞ்சிகை - விமர்சனம்

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தார் தமது 23வது ஆண்டு விழாமலர் வெளியீட்டு விழாவை 2016 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 30ஆம் நாள் ஸ்காபரோ நகரில் நடத்தினர். மறைந்தும் ஆத்மாவாக வாழ்ந்து கொண்டிருக்கும் எழுத்தாளர்களுக்கு சமர்ப்பணம் செய்து விழாமலர் வெளியிடப்பெற்றது. இது இரண்டாவது சங்கப்பொழில் மலர் எனக் கருதுகிறேன். மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தில் பணியாற்றிய முன்னாள் முதல்வர் என்ற முறையிலும் இந்நாள் முதன்மையர் என்ற முறையிலும் இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளும் வாய்ப்பு என் குருவருளாலும் இறைவன் திருவருளாலும் வாய்க்கப்பெற்றேன். மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்தாரின் தமிழ்ப்பணிகள் எனும் தலைப்பில் உரையாற்றி அமர்ந்தபோது 23ஆம் ஆண்டு சங்கப்பொழில் மலரை கனடா எழுத்தாளர் இணையத்தின் சார்பாக இணையத்தலைவர் கலாநிதி எஸ். சிவநாயகமூர்த்தி அவர்கள் எனக்கு வழங்கினார்.

நூற்றிப் பதினொரு பக்கங்கள் கொண்ட இம்மலரில் பதினைந்து அறிஞர்களின் ஆக்கங்களும் பதின்மருடைய கவிதைகளும் நான்கு நண்பர்களின் சிறுகதைகளும் இடம் பெற்றிருந்தன. கவிநாயகம் கந்தவனம் அவர்கள் ‘பாதுகாத்திடுவோம் விலங்குகளை’ எனும் கவிதையில் விலங்குகளில் பல நாம் வணங்கும் தெய்வங்களுக்கு வாகனமாக அமைந்திருப்பதன் காரணமே நாம் அவற்றை மாண்புறப் பேண வேண்டும் என்ற நோக்கத்தினாலன்றோ? என வாசகர்களின் சிந்தனையை எழுப்பியிருந்தார். அவரே ‘தொல்காப்பிய நாடக வழக்கு’ எனும் கட்டுரையையும் படைத்திருந்தார். அதில் நாடக வழக்கு என்றால் என்ற? பாடல் சார்ந்த புலனெறி வழக்கம் என்றால் என்ன? என்ற தொல்காப்பியரின் கருத்தையும் அவர்தம் மெய்பாட்டு விளக்கத்தோடு இவர்தம் விளக்கத்தையும் விளக்கி இருந்தது பாராட்டும் படியாக அமைந்திருந்தது? பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்களின் தொல்காப்பியத்தில் ஆரியச்செல்வாக்கு என்னும் கட்டுரை மிகச் சிறந்ததோர் ஆய்வுக் கட்டுரையாக கற்றோர் வியக்கும் படி அழுத்தம் திருத்தமாகவும் அவர்தம் கருத்தின் முடிவு காய்தல் உவத்தலின்றி ஆணித்தரமாகவும் அமைந்திருந்தது. தொல்காப்பியத்தின் சிறப்பினையும் அக்காலத்தில் அது மக்களிடம் பெற்றிருந்த செல்வாக்கையும் நன்குணர்த்தி ஆரியச்சார்புடையோர் தமக்கு வேண்டியவாறு நூற்பாக்களை இயற்றியும் மாற்றியும் திருட்டுத்தனமாக இடைச்செருகல்கள் செய்த இடங்களைக் கண்டறிந்து வெளிப்படுத்தியிருப்பது தமிழுக்கு இ. பாலசுந்தரம் அவர்கள் செய்த தனிப் பெருந்தொண்டாகும். அடுத்து கலாநிதி எஸ். சிவஞநாயகமூர்த்தி அவர்களின் தூது இலக்கியம் பற்றிக் குறிப்பிடவேண்டும். பன்னிரெண்டாம் நூற்றாண்டிற்குப்பிறகு தமிழ் தாழ்ச்சியுற்று வறுமையடைந்தபோது தோன்றியவை பிரபந்தங்கள் என்றும் அதில் தூது இலக்கியங்கள் இன்றியமையாது இடம்பெற்று ஓரளவு தமிழை வளர்ந்தன எனச் சிறந்த எடுத்துக்காட்டு தூதுப் பாடல்களை சுட்டியிருந்தார். தமிழ் எழுத்தாளர்கள் எப்போதும் உண்மையை எடுத்துச் சொல்லத் தயங்கியதில்லை என்பதற்கு இது சான்று. எழுத்தாளர்கள் காலத்திற்கு ஏற்றவாறு புதியநோக்கில் தங்கள் படைப்புக்களை செம்மைப்படுத்தவேண்டும் என்றும் தங்கள் எழுத்துகளுக்குப் புதிய இரத்தம் பாய்ச்சப்பட வேண்டும் என்றும் என்.ஆர். லோகேந்திரலிங்கம் அவர்கள் தன்னுடைய எண்ணத்தை வெளிப்படுத்தியிருப்பது பாராட்டிற்குரியது. கனடாத்தமிழ் எழுத்தாளர் இணைய வாழ்த்துப்பாவை பண்டிதர் ம.செ. அலெச்சாந்தர் படைத்திருந்தார். அவர்தன் நன்பாவினால் எழுத்தாளர்கள் அனைவரையும் எவர் பெயரும் விடாமல் வாழ்த்திப் பாடித்தான் பண்டிதர் மட்டுமல்ல நல்ல பண்பாளரும்கூட என நிறுவியிருந்தார். மேலும் ‘தமிழாய் வாழ்வோம்’ என்ற தீவகம் வே. இராசலிங்கமும், இத்தரைமீதில் எமது பண்பாடு, இனிதுற வளருதல் காண்பீர் என்ற அருட்கவி ஞானகணேசனும் வானம்பாடிக்கு வணக்கம் தந்த சின்னையா சிவநேசனும், ஆத்மஜோதியைப் புகழ்ந்த இராஜ்மீராவும் இன்னும் பலரும் பாராட்டுக்குரியவர்கள். புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் புகழோடும் புண்ணியமான தாய்மொழியாம் தமிழோடும் வாழ்ந்துகொண்டிருக்கும் கனடா - தமிழ் எழுத்தாளர்கள் இணையமாக மட்டுமல்ல இமயமாகவும் உயர்ந்தோங்கியிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

வாழ்க உம்தம் தமிழ்த்தொண்டு
மீண்டும் எழுவீர்! இனிய ஈழம் ஏற்பீர்.

அன்புடன்
முனைவர் க. சின்னப்பா
மதுரைத் தமிழ்ச் சங்க முன்னாள் முதல்வர்
தமிழ்நாடு




## யோகா சோதிடம்

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

## பல்லுப் போனால் சொல்லு போச்சு
## CAN YOU AFFORD YOUR DENTIST BILLS ???
## WHY YOU NEED TO DO DENTAL, VISION & HEARING PLAN ???

**Dental, Vision, Hearing Plan**
**3 in 1 Combined Coverages**

- YEAR 1 : 60% Coverage, YEAR 2 : 70% Coverage, YEAR 3 : 80% Coverage, YEAR 4+ : 90% Coverage
- 10% household discount if two or more people live in same address
- Some coverages cover day one
- Client will qualify for UCT member benefits.

**பல், கண், காது**
மூன்று உறுப்புகளையும்
காப்பதற்கான ஒரே காப்புறுதி



**Nimal Subramaniam**
Financial Advisor
Dir: 416 816 7994
Web: www.nimalInsurance.com
Email: neel900@hotmail.com

KABIS
KABIS & ASSOCIATES INC.
A Solution Company

UCT LaCapitale iA Financial Group

Life Insurance · Non-Medical Insurance · Critical Illness Insurance · Disability Insurance · Mortgage Insurance · Travel Insurance · Super Visa Medical Coverage · Drug and Dental Plan · TFSA · RESP · RRSP · LIRA · LIF

# இயற்கையின் இரகசியங்கள் (யாவருக்குமான அறிவியல்)

## வெளிச்சத்திற்கு வரும் வெளிச்சம் - சுவாரசியமான அறிவியற் தகவல்களைக் கொண்ட தொடர்

இதுவரையில் விஞ்ஞானிகளின் ஆய்வுகளின் வழியிலாக வெளிச்சத்தை வெளிச்சம் போட்டுப் பார்த்தோம். பற்பல சுவாரசியமான திருப்பங்களுடன் ஒரு விறுவிறுப்பான நாவலை வாசித்தது போன்ற உணர்வினை உங்களிற் சிலர் உணர்ந்ததாக அறிந்ததையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். முடிவாக, ஒளியினைப் பற்றித் தேவையான அளவிற்குப் பார்த்துவிட்டோம். வெளிச்சம் தான் துலங்கியவுடனேயே இயற்பியலில் இன்னமும் இரண்டு பெரும் பிரிவுகளுக்குமான வாசல்களைத் திறந்துவிட்டது. இனி எங்களுக்குள்ள (வெளிச்ச) ஞானத்தைக் கொண்டு இந்த ஒளியினை நாமும் ஓர் அலசல் அலசிப் பார்ப்போம்.

ஒளி ஒரு மின்காந்த அலை என்பதுதான் இங்கே சிறப்பு. மின்காந்த அலை என்பதால் அதனது வேகம் மிகப் பெரியதாக இருக்கின்றது. அத்துடன் மிகவும் சிறிய துகள்-அலைத் தன்மை கொண்டது. இரண்டும் ஒன்றுக்கொன்று எதிரான பக்கங்கள். மிகப் பெரியதான ஒன்றும் மிகச் சிறியதான ஒன்றும் கலந்த நிலையில் இந்த ஒளியானது காணப்படுகின்றது. இவ்விரண்டு இயல்புகளும் தத்தமது வழிகளில் இயற்பியலின் இரண்டு பிரிவுகளுக்கு அடிகோலின.

நியூட்டன் ஒளியினைப் பற்றி அதிக கரிசனை எடுத்திருந்தாலும், அதனது முக்கியத்துவத்தினை அவ்வளவாகக் கருதவில்லை. நியூட்டனின் காலத்திலேயே ரோமர் ஒளியின் உயர்ந்த வேகத்தினைக் கண்டு கொண்டார். இந்த அதியுயர் வேகமும் நியூட்டனின் கவனத்தை பெரிதாக ஈர்க்கவில்லை. இதனால் தான் தனது சிந்தனையில் கலிலியோவின் தொடர்பு வேக விளைவுகளில் ஒளியின் வேகத்தினைக் கவனியாது விட்டுவிட்டார் என்று கருத வேண்டும். ஒருவேளை நியூட்டன் ஒளியின் வேகங்களில் ஏற்படக் கூடிய விளைவுகளைச் சிந்தித்து இருந்திருந்தால் அவரது பொறிமுறையின் வடிவம் கூட மாறியிருக்கலாம். எனவே, அவரது செம்மைப் பொறிமுறையானது பெரிய வேகங்கள் பற்றிய கரிசனை இல்லாது, ஒரு வரையறைக்குள் உள்ள வேக இயக்கங்களுக்கே பொருத்தமானது. அதேநேரம் ஒளியானது மிகச்சிறிய துணிக்கை என்பதும் அவரது கருதுகோளாக இருந்தது என்பதும் குறிப்பிடக் கூடியது.



இந்நேரத்தில் இன்னொரு விடயமும் எனது மனதை உறுத்திக் கொண்டு இருக்கின்றது. ஒளியில் முதன்முதலில் சலனத்தை ஏற்படுத்தியவர்கள் நியூட்டனும் ஐகனும் தான். இருவருமே தத்தமது கருத்துக்களுக்கு ரோமரின் ஒளியின் நிலையான வேகத்தினைத்தான் எடுத்துக் கொண்டார்கள். நியூட்டன் தனது துணிக்கைக் கொள்கையில் உறுதியாகவே நின்றார். ஆனாலும், ஐகனின் அலைக் கொள்கைக்கு வலுச்சேர்க்கக் கூடியதான ஒரு பரிசோதனை முடிவினைக் கூடப் பெற்றிருந்தார். அது, நியூட்டனின் வளையங்கள் என இன்றும் கூறப்படுகின்றன. முற்றிலும் ஒளியின் அலை இயல்பின் மேற்பொருந்துகைத் தத்துவத்தால் தெளிவு படுத்தப்படக் கூடிய நியூட்டனின் வளையங்கள் நியூட்டனுக்கு ஏன் உறுத்தலைக் கொடுக்கவில்லை என எனக்கு ஆச்சரியமாக இருக்கின்றது. அப்பரிசோதனையை இவ்விடத்தில் நான் கூறவில்லை. ஆனாலும் இன்றும் பல் கலைக்கழகங்களில் இந்த நியூட்டனின் வளையங்கள் கற்பிக்கப்படுகின்றன. அத்துடன் அவ்வளையங்களுக்கான தெளிவுகளும் விளக்கங்களும் ஒளியின் அலை இயல்பில் இருந்தே கொடுக்கப்படுகின்றன.



கிட்டத்தட்ட அயன்ஸ்ரைனுக்கு ஒப்பான மூளை வலுக் கொண்டிருந்த (அப்படித்தான் சிலர் கூறுகின்றார்கள்), இயற்பியலின் தந்தை எனக் கூறப்படுகின்ற நியூட்டன் ஒளியினை இரு இயல்புத் தன்மையது எனக் கருதியிருந்தால்?.... எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். ஐகன் கூட ஒளியின் துகள் கருத்தினையும் தனது சிந்தனையில் எடுத்திருக்கலாமோ? ஒருவேளை இவ்விருவரும் கூட ஒளியினை இரண்டு விதமாகவும் சிந்தித்து, அந்நாட்களின் அறிவியல் நிலையில் இருந்து கொண்டு தொடர முடியாமலும் இருந்திருக்கலாமோ என்றும் கூட எனது மனம் எண்ணுகின்றது. ஒளியானது இரு தன்மையது என அன்று கருதப்பட்டிருந்தால், இயற்பியலுக்கு ஒருவேளை 200 ஆண்டு முன்னோக்கி இயற்பியல் நகர்ந்திருக்குமோ? இது எனது ஆதங்கம் மட்டுமே, வேறொன்றுமில்லை.

நியூட்டன் - ஐகன் காலத்தின் பின்னராக விஞ்ஞானம் வெகுவேகமாக வளரத் தொடங்கி, இரண்டு நூற்றாண்டுகளில் பெரு வளர்ச்சியுற்றது. இதற்கெல்லாம் அடிப்படையாக இருந்தது, நியூட்டனின் உத்திகளும் விதிகளும், இயற்பியலின் செம்மைப்படுத்தலும்தான். அதன் விளைவாக வந்த முக்கிய ஒளி பற்றிய விளக்கம்தான் முக்கியமானதாகக் கூறப்பட வேண்டும். அதனை மீண்டுமொரு தடவை நினைவுபடுத்துகிறேன். 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஒளி மின்காந்த அலை என்பது வெளிச்சத்திற்கு வந்தது. அத்துடன் அதனது வேகம் மிகவும் பெரியது என்பதும் கண்டறியப்பட்டது. அல்லாமலும் ஒளியானது தன்னிலமைக்கு ஏற்பத் தன்னை அலையாகவோ அல்லது துணிக்கையாகவோ காட்டிக் கொள்கின்றது என்பதும் அறியப்பட்டுவிட்டது. இவ்விரண்டு கண்டுபிடிப்புகளும் இயற்பியலின் திசையை மாற்றி இருவேறு திசைகளில் கொண்டு செல்லத் தொடங்கின. 'வளர்த்த கடா மார்பில் பாய்ந்தது' என்பார்களே, அது போல இவ்விரண்டு தெளிவுகளும், இயற்பியலை ஆட்சி செய்து கொண்டிருந்த செம்மைப் பொறிமுறையின் வளர்ச்சியாக, செம்மைப் பொறிமுறையில் இருந்தே பெறப் பட போதிலும், செம்மைப்பொறி இயல் முழுமையானதா எனவும் ஐயுற வைத்தன. இந்த ஐயத்தின் தெளிவுகள் சார்பியல், குவாண்ரவியல் என்கின்ற இரண்டு வெற்றிகரமான பகுதிகளை இயற்பியலினுள், செம்மைப்பொறி இயலைச் செம்மைப் படுத்தும் விதமாக வந்தன.

சார்பியல், குவாண்ரம் என்பவற்றினை அறிமுகப்படுத்தியதில் அயன்ஸ்ரைன் முக்கியமானவராக இருக்கின்றார். ஆனாலும் அயன்ஸ்ரைன் என்றதுமே சார்பியல்தான் எல்லோரது மனதிலும் எழும். சார்பியலும் குவாண்ரமும் ஏற்கனவே விளம்பரத்தின் ஊடாக உங்களை வந்து சேர்ந்தன. எனவே அடுத்த தடவையில் இருந்து இன்னொரு புதிய இயற்பியற் கதையை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கிறேன்.

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மிக மிகச் சுவாரசியமானதாக இருக்கும். நாங்கள் யாவருமே அறிந்து கொள்ள வேண்டிய கதை - விஞ்ஞான உண்மை. பேரண்டத்தின் பரிணாம மாற்றத்தைக் கூறும் கதை. எளிய தமிழில், விஞ்ஞானத் தனங்களைக் களைந்து வரப் போகும் அத்தொடர், யாவரையுமே கவர்ந்திழுக்கும். சரி, என்ன தலைப்பு என்கிறீர்களா?
"அந்த மூன்று நிமிடங்கள்".

மறுமுறை சந்திப்போம்.

"யாம் பெற்ற இன்பம் பெறுக
இவ்வையகம்."

**- கனி -**
416.261.1348
leptons@hotmail.ca



ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL



• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca

# கனடாவிற்கு வர விரும்புவர்களுக்கு 'பத்து வழிகள்'

## கனேடிய தகவல் தொடர் 257

**கனடாவிற்கு வர விரும்புவர் களுக்குரிய வழிகள் யாவை?**

கனேடிய அரச குடிவரவுத்துறையின் இணையத்தள தகவல்கள், குடிவரவு சட்டத்துறை நிபுணர்களின் ஆய்வுக் கட்டுரைகள், கருத்தரங்குகளில் அறிந்து கொண்ட விடயங்கள் ஆகியவற்றினை உசாத்துணையாகக் கொண்டு பின்வரும் பத்து வழிகளை சுருக்கமாக குறிப்பிடுகின்றேன்.

'காலத்துக்குக் காலம் கனேடிய அரசுகள் இறுக்கங்கள், தளர்வுகள் என மாறுபட்ட சூழ்நிலைகளை கனடாவிற்கு வரும் பாதைகளின் ஒவ்வொரு வழியிலும் சாதக-மாகவும், பாதகமாகவும் சட்டங்களிலும், செயல்பாடுகளிலும் உருவாக்குகின்றன.

தகவல்களையும், விண்ணப்பங்கள் போன்ற விடயங்களையும் இணையத்தளத்தினூடாக வும் மற்றும் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள, கனேடிய அரசின் பிரதிநிதித்துவ காரியால யமாகவுள்ள கனேடிய தூதரங்கள் மூலமாகவும் விபரமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**1. தற்காலிக விசாப்பெற்று உல்லாசப் பிரயாணியாகப் பிரவேசித்தல்!**
(Visiting by temporary tourist visa)

சில குறிப்பிடப்பட்ட, கனடாவினால் அங்கீகரிக்கப்பட்ட நாட்டு மக்கள், தங்கள் நாட்டுக் கடவுச் சீட்டுகளுடன் கனடா விற்குப் பிரயாணம் செய்வதற்கு எதுவிதமான விசாவும் முன்கூட்டியே பெற வேண்டிய அவசியமில்லை. கனடாவிற்கு வந்திறங்கிய இடத்தில் வைத்து ஆறு மாதத்திற்கு தற்காலிகமான விசா வழங்கு வார்கள். உதாரணமாக, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள நாடுகள், அவுஸ்திரேலியா, கொங்கொங், ஜப்பான், நியூசிலாந்து, சிங்கப்பூர், தாய்வான் என 51 நாடுகளைக் குறிப்பிடலாம்.

இலங்கை, இந்தியா உட்பட ஏனைய நாட்டு மக்கள் இந்த வழியில் கனடாவிற்கு வர வேண்டுமானால் முற்கூட்டியே தமது நாட்டில் உள்ள கனேடிய தூதராலயத் திற்கு விண்ணப்பித்து தற்காலிக விசா பெற்றுக்கொள்ள வேண்டும். விசா வழங்க முன்பு கனேடிய தூதராலயம் பின்வரும் விடயங்களைக் கூர்ந்து பரிசீலனை செய்து கொள்ளும்.

தற்போது மின்அஞ்சல் மூலமாகவும் விசாவுக்கு விண்ணப்பிக்கலாம். (ETA - Eelctronic Travel Authorization)

• தமது சொந்த நாட்டில் தொழில், வீடு, நிதியியல் ரீதியான சொத்துகள், குடும்ப உறவுகள் யாவற்றினையும் வைத்திருக்கும் ஒருவர் தற்காலிகமாக கனடாவிற்கு போய் குறிப்பிட்ட காலத்திற்குள் திரும்பி வருவதே நோக்கம் என்பது நம்பக் கூடிய அளவுக்கு தூதராலய விசா அதிகாரிகளினால் ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

• ஆரோக்கியமான உடல் நிலை, குற்றவியல் பதிவுகள் எவையும் இல்லாத நிலைமை நிரூபிக்கப்படல் வேண்டும்.

• கனடாவில் தங்கப்போகும் இடம், அதற்குரிய நிதி நிலைமைகள் காட்டப்பட வேண்டும்.
உறவினர்கள், நண்பர்களுடன் தங்குவதாக இருந்தால், அவர்களின் விபரங்கள், நிதி நிலைமை, அவர்களின் ஆதரவுப் பத்திரம், மற்றும் அழைப்புக் கடிதம். (Letter of Invitation) என்பன தேவை.
இங்கு இருவகையான விசாக்கள் வழங்கப்படும்.
1. ஒரு முறை மட்டும் பிரவேசிக்கும் விசா (Single Entry Visa). இது குறிப்பிட்ட ஆறு மாதத்துடன் முடிவடைந்து விடும்.
2. பலமுறை பிரவேசிக்கும் விசா (Multiple entry visa). சுமார் பத்து வருடங்களுக்குள் பலமுறை போய் வரலாம்.

ஒருமுறை சென்றால் ஆறு மாதத்திற்கு மட்டுமே கனடாவில் தங்கி நிற்கலாம்.

**2. கல்வி, தொழில் துறைகளின் திறமைசாலிகளுக்கு வழங்கும் விசா**
(Federal Skill Worker Visa)
பல்கலைக்கழகப் பட்டப்படிப்புகளுடன் சேர்ந்த தொழில்துறை சார்ந்த புலமை யாளர்களை (Highly skill professionals) ஏனைய உலக நாடுகளிலிருந்து கனடா விற்கு குடிவருவதற்காக வழங்கப்படும் நிரந்தர குடியுரிமை விசாவே இதுவாகும். இங்கு கனேடிய குடிவரவு அமைச்சு பின்வரும் ஆறு விடயங்களை கருத்தில் கொண்டு, ஒரு புள்ளி விபர மதிப்பீட்டின் அடிப்படையில் (Points based system) நிரந்தர குடியுரிமை விசா வழங்குவது பற்றி முடிவு செய்கின்றது.

• கல்வி (Education) - Maximum 25%
• கனேடிய மொழிகளில் ஒன்றில் திறமை (Skills in English or French) - 16% -18%
• தொழில் அனுபவம் (Work Experience) - 9% - 15%
• வயது (Age) - Maximum 12% 18-35 வயதுக்கு இடைப்பட்டோர். மேலதிக ஒவ்வொரு வயதுக்கும் ஒவ்வொரு புள்ளி 47 வயது வரை குறைக்கப்படும்.
• கனடாவில் உடனடியாக உகந்த தொழில் வாய்ப்பு - 0% - 10% (Valid job offer)
• கிடைக்கும் ஆதரவுகள் & வாய்ப்புகள் மற்றும் ஆரம்பநிலையில் பணவசதிகள் (Adaptability)

தற்போது உள்ள குடிவரவு ஒழுங்கு விதிகளின்படி 67% புள்ளிகள் கிடைத்தால் சாதகமான முடிவு கிடைக்கும். இவற்றில் இறுக்கங்கள் பல்வேறு காலங்களிலும் ஏற்படுவது வழமையாகும்.

**3. துறைசார்ந்த சிறப்புத் தொழில் திறமையுள்ளவர்களுக்கு வழங்கும் நிரந்தர குடியுரிமை விசா**
(Federal Skill Trades Program)

கல்வி, தொழில்த்துறைகளில் திறமைசாலி களுக்கு (University Professional Graduates) வழங்கும் நிரந்தர குடியுரிமை விசாவிலிருந்து (Federal skill worker visa) இக்குடியுரிமை விசா சற்று வேறுபட்டது. அதாவது கல்வித் தகைமை என்பது இங்கு பெரிதாகக் கருத்தில் கொள்வதில்லை.

இங்கு குடியுரிமை விசாவினைப் பெறுவதற்கு பின்வரும் தகுதிகள் எதிர் பார்க்கப்படுகின்றன.
• கைத்தொழில், மின்னியல், இயந்திர வியல், கட்டிடத்துறைகள், சமையல்துறை, வேளாண்மைத்துறை போன்ற தொழில் துறைகளில் இரு வருடங்களுக்கு மேலாக முழுநேரமாக தொழில் செய்த அனுபவம் இருக்க வேண்டும்.
• மேற்குறிப்பிட்ட தொழில் திறமை என்பது அரச தொழில் சார்ந்த நிறுவனங்களின் சான்றிதழ் (லைசைன்ஸ்) பெற்ற தொழில் சார்ந்த நிபுணராக இருக்க வேண்டும்.
• கனேடிய மொழிகளான ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழியில் ஓரளவேனும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
• கனடாவிற்கு வந்து சேர்வதற்கும், கால் ஊன்றுவதற்கும் ஓரளவுக்கேனும் ஆரம்ப கட்ட நிதிவசதி இருக்க வேண்டும்.

**4. கனடாவில் கல்வி கற்க விரும்பும் மாணவர்களுக்கான விசா**
(Canadian Student Visa)
ஒவ்வொரு வருடமும் சுமார் 200,000 மாணவர்கள் உலகின் பல நாடுகளிலிருந் தும் கனடாவில் உள்ள கல்வி நிறுவனங்களில் கல்வி பயில்வதற்காக வருகின்றார்கள் என்பது புள்ளிவிபர அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. கனடாவின் பல பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் உட்பட பல்வேறு வகையான கல்வி நிறுவனங்கள் சர்வதேச ரீதியில் மாணவர்களை அனுமதிக்கின்றன.

முதலில் எந்தக் கல்வி நிறுவனத்தில்? என்ன துறையில்? கல்வி பயில விரும்புகின்றீர்களோ அந்த நிறுவனத்தில் அதற்குரிய கட்டணங்களை செலுத்தி அனுமதி பெறுதல் வேண்டும். அனுமதி அவரவர் நாடுகளின் கனேடிய தூதராலயங்களினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம். கனடாவில் வாழ்பவரின் உதவி மூலமும் பெற்றுக்கொள்ளலாம். அனுமதியின் பின்பு, அவர்களின் நாடுகளில் உள்ள கனேடியத் தூதராலயத்தில் விசாவுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

கனேடியத் தூதராலயம், விசாவுக்கு விண்ணப்பிக்கும் மாணவர் குறிப்பிட்ட துறையில் கல்வி பயிலத் தகுதி, ஆர்வம் உட்பட கல்வி கற்கத்தான் செல்கின்றரா? அவருக்குள்ள நிதி வசதிகள் என்பவற் றினை பரிசீலனை செய்து அவர்களின் நேர்முகப்பரீட்சையில் கனடாவின் பாதுகாப் புக்கும் ஆபத்து இல்லாதவர் என்பது உறுதிப்படுத்திய பின்பு விசா வழங்கு வார்கள். கற்கை நெறியினை கனடாவில் முடித்தவர் அதேதுறையில் தொழில் செய்யும் அனுமதிப் பத்திரம் பெற்று தற்காலிகமாக தொழில் கிடைத்தால் தொழிலும் செய்யலாம்.

இரு வருடங்கள் கனடாவில் தொழில் செய்த பின்னர் நிரந்தர வதிவுரிமைக்கும் விண்ணப்பிக்கலாம். மூன்று வருட நிரந்தர வதியுரிமைக்கு பின்பு கனேடியக் குடியுரிமைக்கும் விண்ணப்பிக்கலாம்.

**5. கனடாவின் மாகாண அரச வதிவிட நியமனங்களினூடாக பெறும் நிரந்தர வதிவுரிமை**
(Provincial Nominee Program)

கனடாவுக்கு நிரந்தர வதிவுரிமை பெற்றுக் குடியேறும் வெளிநாட்டவர் எவரும் பொதுவாகத் தத்தமது வசதிகள் வாய்ப்பு களுக்கு ஏற்றமாதிரி கனடாவின் எந்த வொரு மாகாணத்திலும் குடியேறலாம். மத்திய அரசு (Federal Government) என்ற பேரரசின் கீழ் உள்ள சிற்றரசுகள் போல் பத்து மாகாணங்களும், மூன்று பிரதேசங்களும் தங்களுக்குரிய இறைமை களுடன் ஆட்சி செய்கின்றன. இங்கு ஏனைய நாடு ஒன்றிலிருந்து குறிப்பிடப்பட்ட ஒரு மாகாணத்தில் மட்டுமே தொழில் செய்து அந்த மாகாணத்திலேயே நிரந்தர மாகக் குடியேறுவேன் என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் வழங்கும் நிரந்தர வதிவுரிமை விசாவே இதுவாகும்.

ஒவ்வொரு மாகாண அரசும் இந்தப் பிற நாட்டவர்களின் குடியுரிமை விடயங்களில் தங்களுக்குரிய கொள்கை, திட்டங்களை தங்களின் தேவைகளுக்கு ஏற்றமாதிரி தாங்களே வகுக்கின்றன.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# இளம் பெண்களின் உடல் பருமல்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

### *Weight loss workout for young women*

உடல் பருமல் அனைத்து வயதினரையும் பாதிக்கக்கூடியது. முக்கியமாக பருவ வயதிலுள்ள குமரிப் பெண்களுக்கும், திருமணமான இளம் பெண்களுக்கும் உடல் பருமலானது மிகுந்த மன உளைச்சலை அளிக்கக்கூடியது. இந்தப் பிரச்சினை அவர்களை மட்டுமல்லாது தாய், தந்தையர் மற்றும் திருமணமான கணவன் என்பவர்களையும் மனதளவில் பாதிக்கிறது. பெண்களுக்கு கொழுப்பு உடலின் இடுப்பு, தொடை, கால், வயிறு பகுதிகளில் சேமிக்கப்படுகிறது. இதன்பின் உடல் எடை படிப்படியாக அதிகரிக்கத் தொடங்குகின்றது.

பெண்கள் இளம் வயதிலேயே உடல் பருமலடைய பல காரணங்கள் உள்ளன. இளம் வயதிலே அளவுக்கு அதிகமான கொழுப்புப் பொருட்களை பெற்றோர்கள் உண்ணக்கொடுப்பது. மேலும் எண்ணெயில் பொரித்த உணவு வகைகளை குழந்தைகள் விரும்புகின்றனரென்று வாங்கிக் கொடுப்பது, உண்ணும் அளவுக்கு உடல் உழைப்பு இல்லாமல் இருப்பது, சிலருக்கு தைரொய்டு சுரப்பி குறைவாக சுரப்பதால் உடல் பருமலடைய ஆரம்பித்து விடுகிறது.

ஒரு சிலருக்கு பரம்பரையாக உடல் பருமல் நோயின் தாக்கம் இருப்பதால் அவர்களின் வாரிசுகளுக்கும் உடல் பருமல் உண்டாகின்றது. பெண்களின் சீரான உடல் நலத்திற்கு அவர்களின் மாதவிடாய் காலம் தவறாது வெளியேறவேண்டும். அது சரிவர



வெளியேறாவிட்டால் உடல் பருத்துவிடும். சில பெண்களுக்கு ஹோர்மோன் (Hormones) குறைபாடுகளால் மாதவிடாய் முறையாக வெளியேறுவதில்லை. அத்துடன் மாதவிடாயை முறைப்படுத்த உட்கொள்ளும் மருந்துகளின் பக்கவிளைவினாலும் உடல்பருமல் ஏற்படுகின்றது.

சில பெண்களுக்கு இயல்பாகவே விரக்தி மனநிலை ஏற்படுகிறது. இவர்கள் பெரும்பாலும் தனித்து இருக்கவே விரும்புவார்கள். வீட்டில் தனக்கு யாரும் அன்பு, பாசம் காட்டுவதில்லையென்று முடிவு செய்து மன உழைச்சலுக்கு ஆளாவர். இவற்றிலிருந்து விடுபட அடிக்கடி உணவின் மேல் கவனத்தைச் செலுத்துவர். இதனுடன் நொருக்குத்தீன் பண்டங்களின்மேல் நாட்டம் கொண்டு அதை விரும்பி உண்பர். அதனால் உடல் பருமல் உண்டாகிறது.

நாளமில்லா சுரப்பிகளின் குறைபாடு அதிகமான பெண்களுக்கு ஏற்படுவதால், சுரப்பிகள் சரிவர இயங்காமல் இருப்பதால் உடல்நிலை மற்றும் மனநிலை பாதிப்பு ஏற்பட்டு உடல் பருமல் அடைகிறது. அதுமட்டுமன்றி இவர்கள் விரும்பி உண்ணும் உணவுகள் மலச்சிக்கலை உருவாக்கும்போது உடல் எடை தானாகவே கூடுகிறது.

பல காரணங்களால் ஏற்படும் உடல் பருமலை எவ்வாறு குறைப்பது? எந்த ஒரு நோயும் ஒரே நாளில் ஏற்பட்டு விடுவதில்லை. உடல் பருமலும் அவ்வாறே! உடல் பருமலை மருந்துகள் மூலம் கட்டுப்படுத்த முடியாது. பொருத்தமான உடல் பயிற்சியும் உணவுக் கட்டுப்பாடும் அவசியம்.

#### உடற்பயிற்சி

உடல் பருமல் உள்ளவர்கள் தினமும் உடற்பயிற்சிக்கு ஒருமணி நேரமாவது ஒதுக்க வேண்டும். இதனை முதலில் முறையான ஆசிரியர்கள் மூலம் சரிவர கற்றுத் தெளிந்து பயிற்சி செய்ய வேண்டும்.

1. மெது ஓட்டம் (Jogging)
2. நடைப்பயிற்சி (Walking)
3. சைக்கிள் ஓடுதல் (Cycling)
4. நீச்சல் (Swimming)
5. யோகாசனம் (Yoga Exercise)
6. மூச்சுப்பயிற்சி (Breathing Exercise)

இவற்றுள் ஏதேனும் இரண்டு பயிற்சிகளையாவது தெரிவு செய்தல் வேண்டும். இவற்றுள் யோகா பயிற்சியானது உடல் எடையைக் குறைப்பதுடன் உடலுக்கு அழகையும், ஆரோக்கியத்தையும், மன அமைதியையும் தரக்கூடியது. அத்துடன் தைரொய்ட் முதலான நாளமில்லா சுரப்பிகளின் தொழில்பாட்டை சமநிலைப்படுத்தி மாதவிலக்கின் ஒழுங்கற்ற முறையைச் சீர்செய்து அதனால் வரும் நோய்களிலிருந்து உடலையும் மனதையும் பாதுகாக்கிறது.

#### உணவுக்கட்டுப்பாடு

பெண்களைப் பொறுத்தமட்டில் ஒல்லியான உடல் வாகு அழகு சேர்ப்பதாகும். இதற்கு உணவுக் கட்டுப்பாடு மிகவும் அவசியம். உடல்பருமலைக் குறைப்பதற்கு சரிவிகித உணவு கடைப்பிடிக்கப்பட வேண்டும். உடல் பருமல் உள்ளவர்கள் பழங்கள், காய்கறிகள், முளைகட்டிய தானியங்களை உணவாகக் கொள்ள வேண்டும்.

#### தவிர்க்க வேண்டிய உணவுகள்

1. கேக் (Cake), குக்கீஸ் (Biscuits), ஐஸ்கிறீம்
2. வறுத்த உணவுகள், குளிர்பானங்கள்
3. மதுவகைகள்
4. கொழுப்புப் பொருட்களான நெய், வெண்ணெய், சீஸ்.
5. மாமிச உணவுகள் இறைச்சி, முட்டை, பால்வகைகள். அதாவது



மிருகங்களிலிருந்து பெறப்படும் கொழுப்பு நிறைந்த உணவுகள் எடையை அதிகரிக்கச் செய்யும்.

#### உணவில் சேர்க்க வேண்டியவை

1. சலட் (Salad) வகைகள்
2. காய்கறிச்சாறு (Vegetable soup)
3. நார்ச்சத்து (Fiber) நிரம்பிய உணவுகள் பழங்கள்
4. காளான் வகைகள் (Mashroom)

#### உடல் பருமலுக்கு மூலிகை மருந்துகள்

அரைக்கீரையுடன் மிளகு, சீரகம், பூண்டு, பெருங்காயம், மஞ்சள்தூள் சேர்த்து தேவையான அளவு தண்ணீர் சேர்த்துக் கொதிக்கவைத்து சூப் செய்து அதை ஒருமாதம் உண்டுவந்தால் உடல்பருமல் வெகுவாகக் குறையும்.




C - 416.617.5721
H - 416.289.2033 after 7:00pm


## மூத்த எழுத்தாளர் திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்) அவர்களிற்கு விளம்பரம் பத்திரிகையின் அஞ்சலி

கனடாவின் மூத்த தமிழ்ப் பத்திரிகையான விளம்பரத்தில் பல ஆண்டு களாகத் தமது சிறந்த ஆக்கங்களை எழுதி வந்த வரும், எழுத்தாளர் உலகில் நன்கு மதிக்கப்பட்ட வரும் விளம்பரம் வாசகர்களுடன் சகல எழுத்துபிரியர்களின் ஏகோபித்த மதிப்பைப் பெற்ற இவர் செப்ரெம்பர் 15, 2016 இவ் உலகை விட்டு இறைவனடி சேர்ந்தார். இவரின் இழப்பு விளம்பரம் எழுத்தாளர் குழாமிலிருந்து, குறுகிய காலத்தில் இழந்த இரண்டாவது இழப்பாகும். அண்மையில் அதிபர் பொ. கனகசபாபதி அவர்களும் எம்மைவிட்டு சென்றுவிட்டார் என்பதனை இக்கணத்தில் நினைத்துக் கொள்கின்றோம்.

குறமகள் அவர்களின் படைப்புகள் பல நூல் உருவில் வெளியாகியுள்ளன. எமது பத்திரிகை சார்பிலும் 'கூதிர்காலக் குலாவல்' நூல் வெளிவந்தது. இவரின் பூதவுடல் இவ்வுலகை விட்டு நீங்கிய போதிலும் புகழுடல் தமிழ் உலகம் இருக்கும் வரை எழுத்துருவில் இருந்து கொண்டே இருக்கும் என்பதே எமக்குள்ள மன நிறைவாகும்.



இவரின் ஆத்மா இறையடிகளில் சாந்தி அடைய விளம்பரம் பத்திரிகை சார்பாக இறைவனை வேண்டுகின்றோம்.

*- விளம்பரம் நிறுவனம்*

# கனடாவிற்கு...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

மாகாணங்களின் பொருளாதார வளர்ச்சிக்காக வெளிநாடுகளிலிருந்து குடியேறுபவர்களை பரவலாக்கம் செய்வதற்காக இத்தகைய வதிவுரிமை விசாக்களை கனேடிய அரசு வழங்குகின்றது. இங்கு முதலில் குறிப்பிடப்பட்ட மாகாண அரசுக்கு நேரடியாக விண்ணப்பித்து தங்களின் கல்வித் தராதரம், தொழில் திறமைகள், அனுபவங்களுக்கு அங்கீகாரம் (Provincial Nomination) பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். குடியேறப்போகும் மாகாணத்தின் அங்கீகாரம் கிடைத்த பின்பு பின்வரும் விலாசத்திற்கு விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

***Citizenship & Immigration Canada***
Provincial Nominee Program
Centralized Intake Office
P.O. Box 1450
Sydney, NS B1P 6K5
Canada

அவருடைய நாட்டில் உள்ள கனேடியத் தூதராலயத்தின் இறுதிப் பரிசீலனையின் பின்பு குடியுரிமை விசா வழங்கப்படும். கனடாவின் எந்த மாகாணத்தில் குடியேறலாம் என அங்கீகாரம் கிடைத்ததோ அந்த மாகாணத்தில் குடியேறித் அவரின் வாழ்வினை ஆரம்பிக்கலாம்.

**6. தனியார் வீடுகளில் தங்கியிருந்து பணி செய்யும் பணியாளர்களுக்குரிய தொழில் விசா.**
(Live in caregiver or home caregiver)
கனடாவில் பல்வேறு வகையான வசதிகளோடு வாழ்பவர்கள், தங்கள் வீடுகளில் தங்கியிருந்து, வீட்டு வேலைகளுடன்

- குழந்தைகளைப் பராமரிப்பது.
- முதியோரைப் பராமரிப்பது.
- உடல் இயங்க முடியாதவர்களுக்கு உதவுவது.

போன்ற தொழில்களுக்கு எவராவது தேவைப்பட்டால், வழங்கப்போகும் சம்பளங்கள், சலுகைகள் எவ்வளவு என்ற சட்டரீதியான ஒப்பந்தங்களுடன், ஏனைய நாடு ஒன்றிலிருந்து வருவித்து இரு வருடங்களுக்கு கனடாவில் நியமனம் வழங்கிக் கொள்ளலாம்.

இரு வருடங்கள் தொடர்ந்து ஒரு வீட்டில் பணி புரிந்தவர், இரு வருடங்களின் பின்பு நிரந்தர வதிவுரிமைக்கு (Permanent Resident) விண்ணப்பிக்கலாம். தொடர்ந்து சில வருடங்களின் பின்பு குடியுரிமையும் பெறலாம்.

குறிப்பிடப்பட்ட வேலைக்கு கனடாவில் இருந்து எவரையும் நியமனம் செய்ய முடியாதுள்ளது என்பது மத்திய அரசிற்கு (Employment & Social Development Canada) விண்ணப்பித்து உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அதற்குரிய உறுதிப் பத்திரத்தினைப் பெற்றுக்கொண்டே ஏனைய நாட்டிலிருந்து பணியாளரை வருவிக்க முயற்சிக்கலாம் (Labour market impact assessment). தொடர்ந்து ஏனைய நாடு ஒன்றிலிருந்து ஊதியம் வழங்கிப் பணியாளரை நியமனம் செய்யும் அளவுக்கு வலிமை உள்ளவர் என்பதும் அவருக்கு பணியாளர் ஒருவர் தேவை என்பதும் கனேடிய குடிவரவுத்துறை அமைச்சுக்கு விண்ணப்பித்து நிரூபிக்கும்போது, 'தொழில் அனுமதி' (Work permit) வழங்குவார்கள்.

தொடர்ந்து விண்ணபங்களை முன் எடுக்கும்போது, குறிப்பிடப்பட்ட தொழிலை கனடாவுக்கு சென்று பணியாற்றுவதற்கு, பணியாளராக செல்பவர் தகுதியானவரா? என்பதனை நேர்முக பரீட்சையின்போது அந்தந்த நாடுகளில் கனேடிய அரசின் பிரதிநிதியாக உள்ள தூதராலயம் முடிவுபண்ணி விசாவினை வழங்கும்.

**7. இன்னொரு நாட்டிலிருந்து பிள்ளைகளை சட்டரீதியாகத் தத்து எடுத்தல்.**
(Inter Country adoption program)
சர்வதேச ரீதியாக தங்களின் பிள்ளை போன்று இன்னொரு பிள்ளையினை தத்து எடுத்து, அந்தப் பிள்ளையினை கனடாவுக்கு எடுப்பது என்பது இன்னொரு வழிமுறையாகும். கனடாவில் வாழும் ஒருவர் இன்னொரு நாட்டிலிருந்து பிள்ளை ஒன்றினை சட்டரீதியாக தத்து எடுப்பது ஒரு கட்டம். எடுக்கப்பட்ட பிள்ளைக்கு கனடாவின் குடியுரிமை எடுப்பது என்பது இன்னொரு கட்டம்.

கனேடிய மத்திய அரசு, தத்து எடுப்பவர் குடியிருக்கும் மாகாண அரசு, தத்து எடுக்கப்போகும் பிள்ளை பிறந்த நாட்டின் சட்ட திட்டங்கள், அவர்களின் நிபந்தனைகள், ஒழுங்கு விதிகள் எனப் பல படிமுறைகளில் அங்கீகாரங்களை பல்வேறு வகையான நிலைப்பாடுகளிலிருந்து இவ்விடயத்தில் பூரணமான வெற்றியினை அடையலாம்.

**8. கனடாவில் அகதி அந்தஸ்து கோரல்.**
(Convention refugee claim)
தமது சொந்த நாட்டில் போர்க் கால சூழல்களினால் கொடுமைகள், துன்பங்கள், துயரங்களை எதிர்கொண்டு, உயிர்வாழ அச்சமாக உள்ளவர் என்பது நிரூபிக்கப்பட்டு கனடாவில் அகதிநிலை கோரலாம்.

இவவாறு அகதிநிலை கோருபவர்களை இருவகையாகப் பிரிக்கலாம்.
1. கனடாவுக்கு வெளியே இன்னொரு நாட்டில் அகதியாக இருந்துகொண்டு கனடாவினுள் புகலிடம் கோருவது
உதாரணமாகப் பின்வருவனவற்றினைக் குறிப்பிடலாம்.
1. சிரியா போன்ற நாட்டிலுள்ள அகதிகளை கனேடிய அரசே பொறுப்பேற்றுப் புகலிடம் வழங்கியது.
2. ஐந்து பேர் இணைந்து குழுவாக ஒரு அகதியின் புகலிடத்திற்கு ஸ்பொன்சர் செய்வது.
3. ஒரு நிறுவனம் அல்லது சமூகம் ஒரு அகதியின் புகலிடத்திற்காக ஸ்பொன்சர் செய்வது

2. கனடாவினுள் இருந்து கொண்டு அகதிநிலை கோருவது,
ஏதோ ஒரு வழியில் கனடாவினுள் வந்து சேர்ந்த தமிழர் பலர் கனடாவில் நிரந்தர வாழ்வினை அமைத்துக் கொண்டதனை இங்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

**9. குடும்ப ஸ்பொன்ஸர்**
(Family Sponsorship)
கனடாவில் நிரந்தரமாகக் குடியேறித் தமக்கென ஒரு வாழ்வினை உருவாக்கிக் கொண்ட ஒருவர், ஏனைய நாடுகளில் இருக்கும் தங்கள் குடும்ப உறவுகளுக்கு ஸ்பொன்சர் பண்ணிக் கனடாவுக்குள் அழைக்கும் முறையே இதுவாகும்.

குடும்ப உறவுகளுக்குள் பின்வருவோருக்கு ஸ்பொன்சர் செய்யலாம்.

1. மனைவி அல்லது கணவன், பிள்ளைகளுக்கு செய்யும் ஸ்பொன்சர்
(Spouse, common law partner and dependent children)
2. பெற்றோர், பேரன்மாருக்கு ஸ்பொன்சர் செய்தல்.
(Sponsor parents & gradparents)
3. தற்காலிகமாகப் பெற்றோர், பேரன்மார் சேர்ந்து வாழ வழங்கும் விரைவான சுப்பர் விசா (Quick super visa)
4. தகுதியான உறவினர்களுக்கு ஸ்பொன்சர். (Eligible related sponsor)
உதாரணமாக 1983 ஆம் ஆண்டு இலங்கையில் உருவான பாரிய இனக்கலவரம் உட்பட பல உள்நாட்டுக் கலவரங்கள், பாதிப்புகளிற்குட் பட்டவர்களுக்கு இந்த வழிமூலம் மேற்கொண்ட ஸ்பொன்சர் பலருக்கு வெற்றியினைத் தந்தது.

**10. வர்த்தகர்கள் & முதலீட்டாளர்களுக்கு வழங்கும் விசா**
(Investors & Entrepreneurs Visa)
கனடாவில் குடியேற விரும்பும் உலகம் எங்கும் வாழும் மிக பெரும் செல்வந்தர்களுக்கே இம்முறை சாதகமாக அமையலாம்.

வர்த்தக முதலீடு செய்பவர் குறைந்தது இரண்டு கனேடிய மில்லியன் டொலர் பணத்தினை கனடாவினுள் கொண்டு வர வேண்டும். குடியேற விரும்புவரின் தேறிய வருமானம் பத்து மில்லியனாக இருக்க வேண்டும் என்பது இவை தொடர்பான சட்டப் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அண்மையில் உருவாக்கப்பட்ட நாடாளுமன்ற சட்ட மூலம் (Bill C - 31) இந்த விசாவுக்குத் தடை விதித்துள்ளது.


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4



கேதார கௌரி காப்பு விரத சீனி அரியதரம்

கோயில்களுக்கும், விரதகாரர்களுக்கும் தேவையான சீனி அரியதரம், பலகாரத்தை உங்களுக்குத் தேவையான அளவுகளில் விசேட விலைகளில் எவ்வளவு வேண்டுமானாலும் ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

Sulasie Foods Sweets & Party Supplies 100% தூய சைவ உணவகம்
Markham Mcnicoll Centre, 3011 Markham Road, #7
416.879.2725 / 416.712.2020

# நீரைத் தூய்மையாக்கும் வாழைப்பழத் தோல்

## *Banana peels can be used to purify drinking water*

வாழைப்பழத் தோலின் பலன்களை நீங்கள் தெரிந்து கொண்டால், அதனை வீசி எறிய கொஞ்சம் யோசிப்பீர்கள். குடிநீரை சுத்தம் செய்ய இனி நீர் தூய்மையாக்கும் கருவி (Water Purifier) போன்ற பொருட்களை பயன்படுத்த வேண்டியதில்லை. வாழைப் பழத்தோல் இருந்தால் போதும். குடிநீரில் உள்ள நச்சுப்பொருட்களை அகற்றுவதில் நீர் தூய்மையாக்கும் கருவியை விட, வாழைப் பழத்தோல் சிறப்பாக செயல்படுவதாக பிரேசில் நாட்டு ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.



நீரில் வாழைப்பழத் தோலை நனைத்தாலே, அதில் உள்ள நச்சுக்கள் உடனடியாக குறைவதை ஆய்வில் கண்டோம். நீரில் உள்ள நச்சுக்களை வாழைப்பழத் தோல் உறிஞ்சிவிடுகிறது. இதனால், 90 சதவீதம் அளவுக்கு நீர் சுத்தமாகிறது. பல கட்டங்களாக ஆய்வு செய்தே வாழைப்பழத் தோலுக்கு இப்படி ஒரு ஆற்றல் இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்தோம். நீரைச் சுத்தப்படுத்துவதில் இம்முறை சிறப்பானது. செலவும் குறைவு. ஒரு வாழைப்பழத் தோலை 11 முறை திரும்பத் திரும்பப் பயன்படுத்தலாம் என ஆய்வறிக்கை மூலம் தெளிவுபடுத்தியுள்ளனர் ஆராய்ச்சியாளர்கள்.

வசதி படைத்தவர்கள், ஓரளவு சம்பாதிப்ப வர்கள் மட்டுமே கடைகளில் விற்கும் நீர் தூய்மையாக்கும் கருவி (Water Purifier) போன்ற பொருட்களை பயன்படுத்த முடிந்தது. வசதி குறைந்தவர்கள், ஏழைகள் இப்படி ஒரு பொருளை கற்பனை செய்து பார்க்க முடியாது. அதற்காகவே இந்த ஆய்வு.

உள்ளே ஈயம் பூசப்படாத செப்புக் குடத்தில் நீரை நிரப்பிப் பருகினார்கள் எமது முன்னோர்கள். செப்புப் பாத்திரம் நீரில் உள்ள அத்தனை கிருமிகளையும் அடியோடு நீக்கிவிடும். இதுவும் ஒரு நீர் தூய்மை யாக்கும் கருவி தான். செப்பு நாணயம் ஒன்றை நீர் பாத்திரத்தினுள் போட்டு வைத்து அதே நன்மையை பெறலாம் இன்றும். மூன்று நாளைக்கு ஒரு தரம் செப்பு நாணயத்தை எடுத்துப் பார்த்தால் பாசி பிடித்த மாதிரி இருக்கும். அதெல்லாம் பாக்டீரியாக்கள்தான். நாணயத்தை சுத்தமாக கழுவிவிட்டு திரும்பவும் நீர் பாத்திரத்தினுள் போட்டு வைக்கலாம்.

வாழைப்பழத்தோல் தரும் மருத்துவம்:

- முள்ளை எடுக்க வேண்டுமா? முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டுமென்பதில்லை. வாழைப்பழத் தோல் இருந்தால் போதும். கைகளிலோ, பாதத்திலோ, முள் குத்தினால், அதனை எடுக்க முடியாமல் டாக்டரிடம் போகத் தேவையில்லை. வாழைப் பழம் கைவசம் இருந்தால் போதுமானது. முள் குத்திய இடத்தில் வாழைப்பழத் தோலினை மெல்லத், தடவுங்கள். பின்னர் அந்த இடத்தைச் சுற்றி அழுத்தம் கொடுத்தால் எளிதில் முள் வெளியே வந்துவிடும்.

- சோரியாஸிஸ் (Psoriasis) பிரச்சனையா? சோரியாஸிஸ் போன்ற தோல் நோய்களுக்கு தோல் சிவந்து தடித்துக் காணப்படும். இதனால் சொறி உண்டாகி, படை படையாக இருக்கிறதா? இனி தோல் நோய் பாதித்த இடங்களில் வாழைப்பழத் தோலினை தேயுங்கள். சொறி நின்று, தோல் இயல்பு நிலைக்கு வரும். தோலுக்கு ஈரப்பதம் அளித்து, அரிப்பினை தடுக்க சிறந்த வழி இது.

- மருக்கள் (Warts) நீக்க: மருக்கள் இருந்தால் அது சரும அழகையே பாதிக்கும். இதனைப் போக்க மிக எளிய வழி இதுதான். வாழைப்பழத் தோலினை மருக்கள் மீது தேயுங்கள். பின், வாழைப்பழத் தோலினை மருக்கள் மீது வைத்து ஒரு துணியினால் கட்டி ஒரு இரவு முழுவதும் வைத்திருங்கள். நாளடைவில் மருக்கள் மறைந்துவிடும்.

- முகப்பருவை (Acne/ Pimples) முகச் சுருக்கத்தை (Wrinkles) எதிர்க்கிறது: முகப் பருவை முகச் சுருக்கத்தை எளிதில் போக்க வாழைப்பழம் இருந்தால் போதும். வாழைப் பழத் தோலில் இருக்கும் நொதியங்கள்



சுந்தரம் இந்திரராஜா

தொடர்ச்சி 20ஆம் பக்கம்...

Opening Soon

Shirdi Sai School of Canada

We are accepting registration (Kindergarten to Grade 5) for this brand new school opening soon in Scarborough.

To register your interest please go to:

http://shirdisaischoolofcanada.com/

# காங்கிரஸ் தமிழகத்தில் மீண்டும் பலம்பெறும்!

## நேர்காணல் - காங்கிரஸ் தமிழக தலைவர் திருநாவுக்கரசர்

திமுக தலைவர் கருணாநிதியுடன் தமிழக உள்ளாட்சி தேர்தல் தொடர்பாக ஆலோசனை, நடிகர் ரஜினிகாந்துடன் சந்திப்பு, ஈ.வி.கே.எஸ். இளங்கோவனால் நீக்கப்பட்டவர்கள் அனைவரையும் மீண்டும் கட்சியில் சேர்க்க உத்தரவு... என பரபரப்பாக இருக்கிறார், மூன்று மாதங்களாக நிரப்பப்படாமல் இருந்த காங்கிரஸ் தமிழ் மாநில தலைவர் பதவிக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள திருநாவுக்கரசர். எம்.ஜி.ஆர். காலத்து பழுத்த அரசியல்வாதி. 1977 முதல் 2004 வரை தமிழக அரசியலில் செல்வாக்கோடு வலம் வந்தவர், 12 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தமிழக அரசியலில் முக்கியத்துவம் பெற்றுள்ளார். அவருடன் ஒரு சந்திப்பு.

**- சிவதாணு-**

காங்கிரஸ் என்றாலே கோஷ்டி பூசல்கள்தான் அனைவருக்கும் ஞாபகம் வரும். எப்படி சமாளிக்கப் போகிறீர்கள்?

கல்லூரி படிக்கும் காலத்திலிருந்தே நான் அரசியலில் இருக்கிறேன். அடுத்த ஆண்டுடன் என் அரசியல் அனுபவத்துக்கு நாற்பது வயதாகப் போகிறது. முதன்முதலாக எனது 27ஆவது வயதில், அதாவது 1977இல் அறந்தாங்கி தொகுதியில் இருந்து சட்டப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டேன். அப்போதே என் திறமையைப் பார்த்து எனக்கு சட்டப்பேரவை துணைத் தலைவர் பதவியைத் தந்து அழகு பார்த்தார் எம்.ஜி.ஆர். அதில் நான் சிறப்பாக செயல்பட்டதைப் பார்த்து, அடுத்த மூன்றாவது வருடம் 1980இல் என்னை கேபினட் அமைச்சராக்கினார். அன்றிலிருந்து எம்.ஜி. ஆரின் இறுதிக் காலம் வரை எம்.ஜி.ஆர். அமைச்சரவையில் கேபினட் அமைச்சராக இருந்தேன். 1977, 1980, 1984, 1989, 1991, 1996 என தொடர்ந்து 6 முறை அறந்தாங்கி தொகுதியில் இருந்து எம்எல்ஏவாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன். அதன் பின்னர் இரண்டு முறை நாடாளுமன்ற உறுப்பினர், வாஜ்பாய் அமைச்சரவையில் மத்திய இணை அமைச்சர் என முக்கியப் பதவிகளை வகித்திருக்கிறேன். எனவே, பதவி எனக்குப் புதியதல்ல கோஷ்டி பூசலை சமாளிப்பது என்பதும் பெரிய விஷயமல்ல. காங்கிரஸ் கட்சியில் இருக்கும் எல்லோரும் எனக்கு காங்கிரஸ்காரர்கள்தான். அவர்கள், யாருடைய அணியில் வேண்டுமானாலும் இருக்கட்டும். அது குறித்து நான் கவலைப்படவில்லை. ஆனால், எந்த அணியி ல் இருந்தாலும் காங்கிரஸின் வெற்றிக்கே பாடுபட வேண்டும். அனைவரிடமும் பாகுபாடில்லா மல் அரவணைப்போடு இருப்பேன். கூட்டு முயற்சி, கூட்டுழைப்பு, கூட்டுப் பொறுப்பு ஆகியவற்றை சரியான முறையில் பயன்படுத்துவதுதான் ஒரு சிறந்த தலைவனுக்கு அடையாளம். யாரையும் ஒதுக்கி வைப்பது அல்ல.

ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் நீக்கியவர்களை மீண்டும் கட்சியில் சேர்க்க உத்தரவிட்டுள்ளீர்கள். இதுபோல் வாசன், ஞானதேசிகன் உள்ளிட்ட பழைய



காங்கிரஸ்காரர்களையும் மீண்டும் கட்சியில் இணைக்க முயற்சிப்பீர்களா?

வாசனும் ஞானதேசிகனும் எனக்கு இனிய நண்பர்கள். ஆனாலும், தற்போது வாசன் ஒரு கட்சியை தொடங்கி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கட்சியை தொடர்ந்து நடத்த விரும்புகிறார்களா அல்லது அக்கட்சியை மீண்டும் தாய்க் கட்சியுடன் இணைக்க விரும்புகிறார்களா என்பதை முடிவு செய்யவேண்டியது அவர்கள். வாசன் அபிப்பிராயம் தெரியாமல் அவரை நிர்பந்திப்பது முறையல்ல.

கருணாநிதியைச் சந்தித்த பிறகு உள்ளாட்சித் தேர்தலிலும் திமுக – காங்கிரஸ் கூட்டணி தொடர்கிறது என்று நீங்கள் சொன்னீர்கள். ஆனால், இன்னொரு பக்கம் மு.க. ஸ்டாலினைச் சந்தித்து திமுக – தமாக கூட்டணிக்கு முயற்சிக்கிறாரே வாசன்?

ஜி.கே.வாசன் சந்திப்புக் குறித்து நான் கூறுவதற்கு எதுவும் இல்லை. இரு அரசியல் தலைவர்கள் சந்திப்பது புதிய நிகழ்வல்ல. திமுக - தமாகா கூட்டணி அமைந்தால் அதுபற்றிக் கேளுங்கள். நான் பதில் சொல்கிறேன். இப்போது இந்தக் கேள்விக்கான அவசியமே எழவில்லை. நாங்கள் கடந்த சட்டப்பேரவைத் தேர்தலிலேயே திமுகவுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டோம். அந்தக் கூட்டணி இப்போதும் தொடர்கிறது. உள்ளாட்சித் தேர்தலுக்கான தொகுதிப் பங்கீடு குறித்து திமுகவுடன் விரைவில் பேச்சு நடத்த இருக்கிறோம். தி.மு.க.வுடன் மாவட்ட அளவில் பேச்சுவார்த்தை நடத்த, மாவட்டம் தோறும் குழுக்கள் அமைக்கப்படும். அறிவிக்கப்படும். உள்ளாட்சி தேர்தல் என்பது சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்கள் போல் இல்லை ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களைக் கொண்டது என்பதால் இதில் தொகுதிப் பங்கீடு சிக்கலானது. இருந்தாலும், மேலிடத்திலும் காங்கிரஸ் முன்னணி தலைவர்களிடமும்

தொடர்ச்சி 36ஆம் பக்கம்


Second Career

Planning for a New Career or Upgrading Your Skills?

Find Out:

- Which program best suits your skills?
- What government funding is available for you?
- Which careers have the best job opportunities?



- EENC is an award-winning service network that is connected to 100's of Training Institutions and Employers.
- We are NOT a Training Institution.
- Our services are free and you are under no obligation.

Join 100's Who Say They're Glad That They Called Us First

EENC.ca Employment and Education Network Canada Inc.

2016 readers' choice Awards WINNER

2016 readers' choice Awards DIAMOND

Nira (Mon to Fri 9AM to 5 PM)
(416)-224-5020 Ext: 201

தமிழில் விபரங்களிற்கு:
(416)-224-5020 Ext 205

Second Career மற்றும் அரச நிதியுதவி பற்றிய விபரங்களிற்கு அழையுங்கள்:

BUSINESS / LAW CAREERS
Accounting ♦Payroll Admin ♦Business Administration ♦ERP Information System Analysis ♦Banking and Financial Services ♦Paralegal / Law Clerk ♦Property Administrator ♦Hospitality Management ♦Tourism Management ♦Police Foundations/ Immigrant Consultant ♦Supply Chain & Logistics ♦Business Management ♦Business Analysis, Projects & Service Management ♦PMP ...

IT CAREERS
Network Administration ♦Graphic/Web Designer ♦Software Quality Assurance and Testing Diploma ♦Network Security Specialist ♦Web & Mobile Developer ♦CISCO ♦LINUX ♦Software Quality Assurance and Testing ♦ITIL ♦Datawarehousing & Business Intelligence ...

HEALTHCARE & Related
Medical Office Administration ♦Diagnostic Cardiovascular Sonography♦ ECG/Phlebotomy ♦Aesthetician/ Make-Up Artist ♦Hair Stylist ♦Community Service Worker ♦Personal Support Worker(PSW) ♦Massage Therapist ♦Pharmacy Technician ♦Early Childhood Assistant(ECA) ♦Medical Laboratory Technician ♦Physiotherapist Assistant and Occupational Therapist Assistant♦Food Service Worker ♦Intra Oral Dental Assistant ♦Addiction Worker ...

TRADES
HVAC Technician ♦Gas Technician-G3/G2 ♦Home Inspection ♦Construction & Maintenance Electrician Pre-Apprenticeship ♦Electrical Technology ♦Home Renovation Technician ♦Industrial and Commercial Maintenance ♦Civil / Mechinacial / Engineering ♦Welding / Solar Energy Technician ...

ENGINEERING / DESIGN
Civil Engineering Design and Technology ♦CNC and MasterCAM Technology ♦Mechanical Engineering Design and Technology ♦Structural Engineering Design and Technology♦Electrical and Electronics Engineering Design & Technology ...

PHARMACEUTICAL
Pharmaceutical Manufacturing ♦Pharmaceutical Quality Control ♦Regulatory Affairs ♦Research & Development ♦Industrial Pharmaceutical and Bio-Pharmaceutical Modern Technology ♦Pharmaceutical and Bio-Pharmaceutical Clinical Research ...

# அமெரிக்க...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

வருட வருமானம் எடுத்தும் Trump வருமானவரியாக ஒரு சதமேனும் கட்ட வில்லை எனக் குற்றம்சாட்டினார்.



இதற்குப் பதிலளித்த Trump வருமானவரி கட்டாதது தனது திறமை என்றும் அவ்வாறுதான் செய்ய முடிந்ததிற்கு Clinton போன்ற அரசியல் வாதிகள் உருவாக்கிய சட்டத்தில் உள்ள ஓட்டை தான் காரணம் என்று கூறித் தனது திறமையை மெச்சினார்.

இன்னும் இவர்களுக்கு இரண்டு ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு இடையேயான விவாதங்கள் உள்ளன. அவை ஒக்ரோபர் 09 ஆம், 19ஆம் திகதிகளில் நடைபெற உள்ளன. ஒக்ரோபர் 4ஆம் திகதி உபஜனாதிபதி வேட்பாளர்களுக்கு இடையேயான விவாதம் நடைபெற உள்ளது.

# நீரைத்...

18ஆம் பக்கத்தொடர்ச்சி

தோலின் துவாரங்களுக்கூடாக சென்று பாதிக்கப்பட்ட இடத்தில் செயல் புரிகிறது. இதனால் முகப்பருக்கள் குறைந்து, அதனால் ஏற்படும் தழும்புகளும் மறையும்.

• தோல் ஒவ்வாமையா? (Skin allergy?) ஏதாவது சிறு பூச்சி, நுளம்பு (mosquito) கடித்தால் அல்லது வேறு பிரச்சனைகளால் தோல் தடித்து சொறி ஏற்படும்.

இதற்கு முதலுதவியாய் வாழைப்பழத் தோலினை ஃப்ரிட்ஜில் (Fridge) வைத்து, அதன் பின் சொறி மற்றும் அரிப்பு இருக்கும் இடத்தில் தடவுங்கள். விரைவில் நிவாரணம் கிடைக்கும்.

• வெண்மையான பற்கள் பெற (Whiten teeth): மஞ்சள் கறை இல்லாமல் வெண்மை யான பற்கள் பெற எல்லாருக்கும் ஆசை. வாழைப்பழத் தோலினைக் கொண்டு உங்கள் பற்களை தேயுங்கள். பற்கள் மின்னும்.

• காயங்கள் ஏற்பட்டுள்ளதா? வாழைப் பழத் தோலை காயத்துக்கு தடவுங்கள். காயமும் விரைவில் ஆறிடும்.

வாழைப்பழத்தோல் தரும் பயன்கள்:

• சப்பாத்து பொலிஷ் (shoe polish) பண்ண, வெள்ளிப் பாத்திரங்களை பொலிஷ் பண்ண வாழைப் பழத் தோலைப் பயன்படுத்திப் பாருங்கள். மின்னும்.



• இறைச்சி சமையலின் (Tenderize meat) போது சில துண்டுகள் வாழைப் பழத் தோலை சேர்த்தால் மெதுமையாகவும் ஜுசியாகவும் இறைச்சிக் கறி கிடைக்கும்.

• றோசா செடிக்கு வாழைப்பழத் தோல் நல்ல பசளை.

வீணாய் வீசி எறியும் வாழைபழத் தோலில் இவ்வளவு விஷயம் இருக்கிறதா என ஆச்சரியப்படுகிறீர்கள்தானே!.

# தமிழ்நாடு...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

கூட்டமைப்பு பொதுச்செயலாளர் ஆறுபாதி கல்யாணம், “மக்கள் மட்டுமல்ல தமிழக அரசியல் கட்சிகளும்கூட இதை ஒரு சீஸன் பிரச்சினையாகத்தான் பார்க்கிறார்கள். ஆனால், கர்நாடகாவிலோ மாநிலத்தை ஆளுவது காங்கிரசாக இருந்தாலும் சரி, பாஜகவாக இருந்தாலும் சரி, விவசாயிகளின் உணர்வுகளை தூண்டிவிட்டுப் போராட்டம் நடத்துகிறார்கள். மேலும், மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் அந்தப் போராட்டத்தை அனுமதித்து அரசியல் செய்கிறார்கள். நேர்மாறாக தமிழகத்தில் நாங்கள் அறவழி யில் போராட்டம் நடத்தினால்கூட எங்கள் போராட்டத்தை தமிழக அரசே நசுக்குகிறது.

கர்நாடகத்தில் கட்சிகள் வேறுவேறாக இருந்தாலும் குரல் ஒன்றாகத்தான் ஒலிக்கிறது. தமிழகத்திலோ திமுக, அதிமுக ஆகிய இரண்டு பெரிய கட்சி களுமே காவ-ிரிப் பிரச்சினையில் உண்மை யான உணர்வுடன் போராடுவதில்லை. லாவணி



அரசியல் செய்யத்தான் காவிரியை பயன்படுத்துகிறார்கள். எனவே, தமிழகத்தில் காவிரிப் போராட்டம் பெரிய மக்கள் போராட்டமாக மாறுவதில்லை. இதுதான் நமது பெரிய பிரச்சினை. தமிழகத்தின் ஏழரை கோடி மக்களும் ஏன் இங்குள்ள புல், பூண்டு, புழுவும்கூட காவிரிப் பிரச்சினைக்காகப் போராட வேண்டும் அப்போதுதான் இதற்கு ஒரு நிரந்தர தீர்வு கிடைக்கும்” என்றார்.

## தமிழ் திரையுலகினர் மௌனம்

ஒட்டுமொத்தத் தமிழகமும் போராடாதது போலவே தமிழ்த் திரையுலகினர் மௌன மும் காவிரி விவசாயிகளால் கேள்விக் குள்ளாக்கப்படுகிறது. நம்முடன் பேசிய அனைத்து விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பி.ஆர். பாண்டியன், “தமிழகத்திற்குத் தண்ணீர் தரக்கூடாது எனக் கன்னட நடிகர்கள் எல்லாம் சேர்ந்து தொடர்ந்து போராட்டம் நடத்துகிறார்கள். இந்த நிலையில் தமிழக நடிகர்கள் எங்களுக்கு ஆதரவாகப் போராட்டத்தில் பங்கெடுப்பார்கள் என்று எதிர்பார்த்திருந்தோம். ஆனால், காவிரிப் பிரச்சினைக்காக எந்தப் போராட்டத்திலும் ஈடுபடமாட்டோம் என நடிகர் சங்கம் அறிவி த்துள்ளது. இது வேதனை அளிக்கிறது. காவிரித் தண்ணீரைக் குடித்து உயிர்வாழும் நடிகர்களுடைய தமிழுணர்வு எங்கே போனது? இவர்கள் நடிகர் சங்கக் கட்டிடம் கட்ட தமிழர்களிடம் பணம் கேட்கிறார்கள். ஆனால், தமிழர்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் ஓடி ஒளிந்துகொள்கிறார்கள். இந்தத் துரோகத்தை தமிழக மக்கள் மறக்கவும் மன்னிக்கவும் மாட்டார்கள். தென்னிந்திய நடிகர் சங்கத்தைக் கலைத்து விட்டு தமிழ்நாடு நடிகர் சங்கம் எனப் பெயர்மாற்றம் செய்து அதற்குத் தமிழர்களே பொறுப்புக்கு வரவேண்டும். அண்டை மாநிலத்தைச் சேர்ந்த நடிகர்கள் பொறுப்பில் இருப்பதால்தான் நமது உணர்வுகள் புறந்தள்ளப்படுகிறது, போராட்டம் நசுக்கப் படுகிறது” என்றார்.

## காவிரிக்குள் புகுந்த அரசியல்

மேலும் தொடர்ந்த ஆறுபாதி கல்யாணம், “காவிரிப் பிரச்சினை இவ்வளவு சிக்கலும் சிடுக்கும் கொண்டதாக மாறியதற்கு இந்திய காங்கிரஸ் கட்சியும் பாரதிய ஜனதா கட்சியும்தான் முக்கியக் காரணம். இந்த இரண்டு கட்சிகளும் தேசிய கட்சியாக இருந்துகொண்டு மாநில அரசியல்தான்



செய்கிறார்கள். இந்திரா காந்தி, 1971ஆம் ஆண்டு கர்நாடகாவில் தேவராஜை முதல்வராக்குவதற்காக, அன்றைய தமிழக முதல்வர் கருணாநிதியிடம் பேசி, காவிரி வழக்கை வாபஸ் வாங்கச் செய்து, காவிர-ியில் அரசியல் விளையாட்டைத் தொடக்கி வைத்தார். அதனால் ஏற்பட்ட பின்னடைவு இன்றுவரை நீடிக்கிறது. தேவகவுடா பிர-தமரான பிறகு தனது மாநிலத்துக்கு சாதகமாக நடந்துகொள்ளக் காவிரியில் தமிழகத்துக்கு மேலும் பெரிய பின்னடைவு ஏற்பட்டது.

கர்நாடகாவில் நேத்ராவதி உள்ளிட்ட நதிக-ளில் வீணாகக் கடலில் கலக்கும் 200 டி.எம்.சி. தண்ணீரைக் காவிரிப் பாசனப் பகுதிகளுக்குப் பயன்படுத்தினால், இந்தப் பிரச்சினை தீரும் என்று கர்நாடகாவைச் சேர்ந்த மறைந்த நீர்வள நிபுணர் பவான-ிசங்கர் சொன்னார். அதனை மத்திய அரசின் உதவியுடன் கர்நாடக அரசு நடைமுறைப்படுத்தினால் காவிரிப் பிரச்சினை தீர வாய்ப்புண்டு. ஆனால், அந்தவகையில் அவர்கள் எந்த முயற்சியும் செய்வதில்லை. இது மட்டுமல்லாமல், கர்நாடகத்தில் மேற்கு நோக்கிப் பாயும் நதிகளில் 2000 டி.எம்.சி. தண்ணீர் வீணாகக் கடலில் கலக்கிறது. அதையெல்லாம் சேமிக்காமல் காவிரி குறுக்கே மேகதாட்டுவில் புதிய அணைகட்ட கர்நாடகா துடிக்கிறது. இதுவே காவிரியில் எவ்வளவு அரசியல் கலந்துள்ளது என்பதற்குச் சாட்சி.

இந்திய இறையாண்மைக்குக் கட்டுப்பட்டு செயல்படாமல் தனிநாடு போலச் செயல்படுகிறது, கர்நாடகம். கிட்டத்திட்ட ஒரு தாதா ஸ்டேட் போலச் செயல்படுகிறது. அந்தத் தாதாவை இந்திய மத்திய அரசும் உச்ச நீதிமன்றமும் வளர்த்துவிட்டுள்ளது. இது பெரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை அவர்கள் மனதில்கொள்ள வேண்டும். இது பிரிவினைக்குக்கூட வித்திடும்” என்றார் கொதிப்புடன்.

என்று தணியும் இந்தக் காவிரி தாகம்?

# ஸ்காபுரோவில் சிறப்பாக நடைபெற்ற 'Journey – A Glimpse into Tamil Cinema' நடன நிகழ்வு

செப்டம்பர் 17 ஆம் திகதி சனிக்கிழமை ஸ்காபுரோவில் உள்ள சீன கலாச்சார மண்டபத்தில் அரங்கம் நிறைந்த நிகழ்வாக இந்த நிகழ்ச்சி மிகச்சிறப்பாக நடை-பெற்றது. கீர்த்தனா, நிவேதா, யாழிகா, சிந்தியா ஆகிய நான்கு நடன தாரகைகளும் 1960 களிலிருந்து இன்று வரை தமிழ் சினிமாவிலிருந்து சிறு சிறு முக்கிய பகுதிகளைத் தெரிந்தெடுத்து அவற்றை நடனக் கண்கொண்டு வடிவமைத்து மிக







- வேலா சுப்ரமணியம் -



அற்புதமான நடனங்களாகப் பார்ப்போர் மெய்சிலிர்க்கும் விதத்தில் தந்திருந்தார்கள். பாடல் தெரிவு, அபிநயம், விறுவிறுப்பு, நகைச்சுவை, உடை அலங்காரம், ஒளி, ஒலி, நடன அமைப்பு செய்யப்பட்ட விதம் சகலதும் அற்புதம். மொத்தத்தில் இது சகலரையும் கவர்ந்த, பிரமிக்க வைத்த முழுமையான நிகழ்ச்சி.

சதங்கை நர்த்தனாலய ஸ்ரீ வாசு சின்னராசா அவர்களிடம் நடனம் பயின்று அரங்கேற்றத்தை நிறைவு செய்த பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழக கனடா வளாகத்தில் நடனத்தில் டிப்ளோமா பட்டம் பெற்ற நாட்டிய கலா மணிகளான கீர்த்தனா அருளானந்தராசா, நிவேதா மூத்ததம்பி, யாழிகா மகேஸ்வரன், சிந்தியா சிறிரங்கன் ஆகிய நால்வரும் தமது சொந்த விருப்பில் கடந்த ஆறு மாதங்களாக உழைத்த உழைப்பிற்கு கிடைத்த மாபெரும் வெற்றி இது. 2015 ஆண்டில் இருதயா நடன நிறுவனம் என ஒரு நடனப் பள்ளியை ஆரம்பித்து நடன வகுப்புகளை நடத்தி வரும் கீர்த்தனாவும், நிவேதாவும் சதங்கை நர்த்தனாலய பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களான யாழிகா, சிந்தியா ஆகிய இருவருடனும் சேர்ந்து இந்நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தனர். பல்கலைக்கழக மாணவர்களான இவர்கள் தங்கள் கல்விச்சுமையோடு இந்த நடன நிகழ்வுக்கு வேண்டிய சந்தைப்படுத்தல், நிர்வாகம், மேடை அமைப்பு, உடை அலங்காரம், பாடல் தெரிவு, நடன அமைப்பு, பயிற்சி போன்ற சகல பொறுப்புக்களையும் தாங்களே சிரமேற் கொண்டு மிக நேர்த்தியாகச் செய்திருந்தார்கள். LankaSri Fly திரு சுரேஷ் அவர்கள் தனது உரையின் போது சினிமா நட்சத்திரங்களுக்கு விருது வழங்கும் நாம் இந்த நர்த்தகிகளின் திறமைக்கு பல விருதுகள் வழங்க வேண்டும் எனக் குறிப்பிடிருந்தார். திருமதி சில்வியா பிரான்சிஸ் அவர்கள் தனது உரையில் இந்த நான்கு நாட்டிய கலாமணிகளினதும் திறமைகளை வெகுவாக வியந்து பாராட்டினார்.

நிகழ்ச்சியின் முடிவில் ATN தொலைக் காட்சி நிறுவனர் திரு. சந்திரசேகர் அவர்கள் நடன தாரகைகள் நால்வரையும் வியந்து பாராட்டிய விதம் மெய் சிலிர்க்க வைத்தது. இருதயா நடன நிறுவனத்தின் எந்த எதிர்கால நிகழ்சயசிக்கும் தான் இலவச விளம்பரம் உட்பட சகல உதவிகளையும் செய்யக் காத்திருப்பதாக வும் இந்த நிகழ்வை சென்னையில் ஒரு தடவை மேடையேற்ற ஆசைப்படுவதாகவும்




கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது. திட்டமிடப்பட்டபடி மாலை 5:50 மணிக்கு ஆரம்பித்த நிகழ்வு 8:50 க்கு முடிவடைய இவ்வளவு சீக்கிரம் முடிந்துவிட்டதே என்ற உணர்வு சகலருக்கும். நிகழ்ச்சி முடிந்து விட்டது சென்று வாருங்கள் என்று கூறும் வரை பார்வையாளர்கள் ஒருவரும் அசையவே இல்லை. நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிய சுரேக்காவும் குணாவும் தங்களது நகைச்சுவை கலந்த சம்பாசனை மூலம் அசத்திவிட்டார்கள்.

இந்த நர்த்தகிகளின் ஆசைப்படி கனடா புற்று நோய் நிறுவனத்திற்கும், கிளிநொச்சி மகாதேவசுவாமிகள் அநாதை சிறுவர் இல்லத்திற்கும் தலா $10,000 டொலருக் கான காசோலைகள் இந்நிகழ்வின் மூலம் திரட்டப்பட்ட நிதியில் இருந்து வழங்கப் பட்டது. திரட்டப்பட்ட நிதியில் குறிப்பாக மண்டபம், ஒலி, ஒளி என்பவற்றுக்கான செலவுகள் போக மிகுதிப் பணம் முழுவதும் மேற்குறிப்பிடப்பட்ட இரு நிறுவனங்களுக் கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. நடன ஆடை, ஆபரங்களுக்கான செலவுகளையும் இதர சில்லறை செலவுகளையும் இவர்களே பொறுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட்டாகவேண்டும். அத்துடன் 2014ல் இதே நால்வரும் மேலும் நான்கு மாணவர் களும் சேர்ந்து "Magical" என மேல் நாட்டுப்பாணியில் ஒரு நடன நிகழ்வை மார்க்கம் தியேட்டரில் நடத்தி அதன் மூலம் கிடைத்த சுமார் $12,000 டொலர்களை மார்க்கம் ஸ்டோபில் வைத்தியசாலைக் கும், SAAAC கும் நன்கொடையாக கொடுத்து இருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

தாங்கள் கடன்பட்டும், இங்குள்ள மக்களிடமும் வர்த்தகர்களிடமும் பணத்தை பிடுங்கியும், இறக்குமதி செய்யப்படும் பின்னணி பாடகர்களினதும், சினிமாப் பிர-பலங்களினதும் மடியை நிரப்ப பாடுபடும் எம்மவர் மத்தியில் இந்த சிறுமிகள் ஒரு எடுத்துக்காட்டாகவே திகழ்கிறார்கள்."கனடா வில் இவர்களிடம் படிக்கவேண்டிய விடயங்கள் நிறைய உண்டு".

பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டு இருக்கும் கீர்த்தனா, நிவேதா, யாழிகா, சிந்தியா ஆகிய நால்வரும் இப்படி வெற்றிகரமான ஒருநிகழ்வை நடத்தியதை பாராட்டாமல் இருக்கமுடியாது. இவர்களது ஒளிமயமான எதிர்காலத்திற்கு வாழ்த்துகள்! வாழ்த்துகள்!!

இவர்களுக்குப் பக்கபலமாக இருந்த இவர்களது பெற்றோர்கள், ஊடகங்கள், படப்பிடிப்பாளர்கள், Sponsors அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.






# Parkway Mall Chatr Mobile Grand Opening SPECIAL

$50 OFF COUPON

Bigger Network Coverage Faster Internet !!

## $20/mo

UNLIMITED Local Calling, Caller ID, Voice Mail and more...

## $40/mo

Free Caller ID & Voice Mail

UNLIMITED Data, Internet, UNLIMITED Download

UNLIMITED Canada-wide Calling & UNLIMITED Internatonal Text



| Phone | Regular | Price |
|---|---|---|
| IPhone 5s 16GB | ~~$549.99~~ | $299.99 |
| Samsung Galaxy S6 32GB | ~~$729.99~~ | $399.99 |
| Motorola Moto X (2nd gen) | ~~$499.99~~ | $124.99 |
| Samsung Galaxy J1 | ~~$249.99~~ | $119.99 |
| Samsung Galaxy Grand Prime | ~~$399.99~~ | $99.99 |
| Samsung Galaxy Ace 2x | ~~$199.99~~ | $49.99 |
| ZTE Salem 3G | ~~$129.99~~ | $0 |

No Contract !!
No Credit Check !!

All phones working to Chatr Mobile!!!
Even Iphone 4, Bring in your own phone !!!

ONLY at

Chatr Mobile @ Parkway Mall (Kiosk beside Metro Supermarket)
Parkway Mall (Ellesmere Rd./ Victoria Park Ave)
85 Ellesmere Rd. Scarborough
M1R4B8, 416-999-9229

***Ideal square*** இல் வேலை செய்வதற்கு ***Stair Installer (தச்சுவேலை)*** ***(GENERAL HELP WANTED)*** அனுபவம் உள்ளவர்கள் தேவை. Full time or Part time. With Benefit.

தொடர்புகளுக்கு: ***416.830.3932***

## JOB JOB JOB

### VAUGHAN / BRADFORD / BARRIE

ஆகிய பகுதிகளில் அனுபவமுள்ள Cleaners வார இறுதி நாட்களில் cleaning உதவியாளர்கள், Cleaning Sub Contractors ஆகிய வேலைகளுக்கு ஆட்கள் தேவை.

***Contact : 416.543.7745***

## LOT PERSON / AUTO DETAILER WANTED

SCARBOROUGH வில் அமைந்துள்ள Used Car Dealer Ship ஒன்றிற்கு வாகனங்களை Cleaning செய்ய, Display Lot ஐ பராமரிப்பதற்கு ஆட்கள் தேவை. Must have Ontario valid Driver Licence. Full / Part time position available.

தொடர்புகளுக்கு: ***416.419.2300***

## உடனடி வாடகைக்கு

Markham Rd & HWY 407 அருகில் 4 BR+3 WR Detached வீடு உடனடி வாடகைக்கு உண்டு. Newly Renovated Kitchen with Breakfast area, Nice Backyard with Deck, Closer to Catholic and Public School, , Costco, Banks, Restaurants, Shopping Mall & Many more, Steps to Markham Rd & HWY 407. தொடர்புகளுக்கு: ***647-712-4843/ 416-816-9011***

## TEMPS EMPLOYMENT AGENCY

***LOOKING FOR GENERAL LABOURERS FOR D/A/N SHIFT WORK***

1) APPLY AT 211-805 MIDDLEFIELD ROAD SCARBOROUGH ON M1V 4Z6 BETWEEN 10AM TO 2PM

OR

2) PHONE ***647.270.8944*** BETWEEN 10AM TO 2PM

3) E MAIL RESUME TO ***tempemployagency@gmail.com***

## RESTURANT FOR SALE

***MALVERN TOWN CENTRE ( SCARBOROUGH)***

Busy location with inside & outside access family oriented business. Including all furniture & fixtures. ***Contact:***

***416.419.8299 / 416.418.9390***

# மாணவர்களும் பொழுதுபோக்குச் சாதனங்களும்

பொழுது போக்குவதற்கு மாணவர்கள் பல விடயத்தைச் செய்வார்கள். சிலர் ஏதாவது ஒரு விளையாட்டில் பங்குபெறுவர். சிலர் புத்தகத்தை வாசிப்பர். இன்னும் சிலர் படத்தை வரைவார்கள். பலர் தொலைக்காட்சியில் ஓடும் படங்களையோ நிகழ்ச்சிகளையோ பார்ப்பார்கள். பலர் இணையத்தளத்திலும் விரும்பியதைப் பார்ப்பார்கள். சிலர் இணையத்தளத்தில் பிறருடன் கதைப்பார்கள்.

இன்றைய மாணவர்கள் கூடுதலாக இணையத்தளத்தின் மூலமாக பொழுது போக்குவார்கள். இதைக் கைத்தொலைபேசி மூலமாகவும் செய்வார்கள். இதனால் பல பிரச்சினைகளும் உண்டாகலாம். அதாவது, பள்ளிப்பாடத்தில் கவனம் செலுத்துவதைக் குறைப்பது, நிறைய நேரம் ஒரு சிறிய திரையைப் பார்ப்பதால் பார்வைக் குறைபாடு போன்ற பிரச்சினைகள் தோன்றலாம்.

ஆனாலும் இணையத்தளத்தால் பல நன்மைகள் உண்டு. பொழுதுபோக்கு மட்டுமே என்று பார்த்தால், சிலர் கதைகளோ, எடுத்த படங்களையோ, வரைந்த ஓவியங்களையோ இணைத்தளத்தில் போடுவார்கள். இதனால் பல மாணவர்கள் அவர்கள் விரும்பும் பொழுதுபோக்கில் திறமையுள்ளவர்களாக வர முடியும்.

மாணவர்களுக்கு ஒரு பொழுதுபோக்கு சாதனமாவது இருக்க வேண்டும். பள்ளிக்குச்



செல்வதும், ஏனைய பாடங்களுக்குச் செல்வதையும் விட மாணவர்களுக்கு ஒரு பொழுது போக்கு இருக்க வேண்டும். இதனால் அவர்கள் களைப்பாறுவதற்கும், திரும்பப் படிப்பில் கவனம் செலுத்துவதற்கும் முடியும்.

முதல் கூறிய மாதிரி பலர் இணையத்தளத்தை மட்டுமே பொழுது போக்காகப் பாவிப்பதால் பல பிரச்சினைகள் உண்டாகிறது. மற்றப்பொழுதுபோக்குகளுக்கு நேரமில்லாமல் போகிறது. பெற்றோர்களின் ஊக்குவிப்பு சிறுவயதிலிருந்து இல்லாததால் பல மாணவர்கள் தொலைபேசி போன்ற பொழுது போக்குச் சாதனங்களை மட்டும் பாவித்து, வெளியே சென்று விளையாட்டுகளில் ஈடுபடுவதையும் திரை இல்லாத பொழுதுபோக்கு சாதனங்களைப் பாவிப்பதையும் குறைத்துவிடுகின்றனர்.

வெளியில் சென்று விளையாடுவதால் மாணவர்களுக்கு உடற்பயிற்சி கிடைக்கிறது. மற்றப் பிள்ளைகளுடன் கூடி விளையாடுவதால் பல நண்பர்கள் கிடைப்பார்கள். அவர்களுடைய சமூக பழக்கவழக்கங்களும் முன்னேறும்.

பாரதியார் 'ஓடி விளையாடு பாப்பா' என்று சிறு பிள்ளைகள் விளையாடுவதன் மூலம் பொழுது போக்குவது நல்லது என்கிறார்.

இதனால் எல்லா மாணவர்களும் பல வித்தியாசமான பொழுதுபோக்குச் சாதனங்களை பாவித்துப் பொழுது போக்க வேண்டும் என்று தெரிகிறது.



ஞா. ஆரணி
அகவை 18


## WATSON PROPERTY MANAGEMENT
416-284-9999 FOR RENT - CONDO / HOUSE / BASEMENT

*Scarborough* - **Ellesmere/Morrish – Basement** with sep entry (2Brm, 1Bath) Close to UTSc, Centennial college, Pan am centre, Schools, Shopping, Hospital, Hwy 401, TTC. Steps to Church, Mosque, Bank, Park, Shoppers. **[Asking $ 900/m]**

*Scarborough* - **Bellamy/Eglinton – Main floor** (3Brm, 1Bath) Close to St.Nicholas Cathelic school & Cedarbrook Public school, Park, Walmart, supermarket & restaurants. Well maintained. 24 Hr. TTC, Go Station. **[Asking $1550/m]**

*Scarborough* - **Finch/ Middlefield – Condo** (1+1Brm, 1Bath) 24 Hrs Ttc Bus Service. Steps to GTA Square Mall, Hindu Temples, Restaurants, Underground parking, Visitor parking, part & meeting room facilities, Well maintained. **[Asking $1350/m]**

*Scarborough* - **Tapscott/Finch- Full House** - (4+1Brm, 3Bath)Large lot suitable for a family. Newly upgraded & painted. Finished Basement. Steps To Schools, TTC, churches & parks, Close to Hindu Temple, shoppers, No Frills & Banks **[Asking $1750/m]**

*Scarborough* **Corporate Dr/McCowan – Condo-** (1+1Brm, 1Bath) – Spacious, Facing Park. Steps To Bus, Subway, Near Scarborough Town Centre, Hwy 401& Grocery. 24 Hr Concierge. Parking & Locker Included **[Asking $1400/m]**

*Scarborough* - **Birchmount/ Sheppard – Full House**(3+2Brm, 2Bath) Spacious. Sep entrance to basement, Walk To Sheppard, Walmart, Shopping, Park. Close To 401, (5 Minute Walk To School And Ttc.) **[Asking $2100/m]**

*Scarborough* – **Morningside/Ellesmere – Condo Townhouse** - (2+1Brm, 2Bath) Well maintained . Minutes To UOfT, Centennial College, Pan Am Centre, Ttc, Hospital, Hwy 401. 2 Car parking **[Asking $1450/m]**

*Scarborough* – **Markham/Sheppard- Condo Townhouse** (3 Brm, 3 Bath) Well Maintained Very Bright & Spacious, Hwd floor Throughout, Close To Shopping Mall, Hwy 401, Bus Stop, U of t Scarborough and Centennial College. **[Asking $2000/m]**

*Scarborough* – **Pharmacy / Sheppard – Full House** – ( 4Brm, 2Bath) Finished Basement Hardwood Floor Throughout, Mins To Hwy 404, 401,School, Park, Shopping, Banks, Fairview Mall, Theatre, Subway **[Asking $2050/m]**

*Scarborough* – **Warden / McNicoll – Full House** – ( 4Brm, 3Bath) Spacious, Huge Bsmt Rec/Play Rm W High Ceiling.Steps To David Lewis P.S. & Dr. Bethune H.S., Ttc, Parks & Chinese Super Market (Foody Mart). Scarborough Hospital **[Asking $2280/m]**

*North York*- **Sheppard/Shaughnessy – Main Floor** ( 4 Brm + 3Bath) A Large detached home. TTC at doorstep, Steps to Schools, church, & childcare centre. Close to North York General Hospital, Banks, Shopping, Hwy 401 and resta urants and Fairview Mall **[Asking $2500/m]**

*East York* - **Bay/College– Condo** ( 2Brm, 2Bath) Brand New with parking, West facing corner suite with 9'Ceiling. Walk out to Oversized Balcony. Close to Financial district, U of T, Queen's park, Major Hospitals, Restaurants & Shopping. Subway at doorstep. **[Asking $2950/m]**

*North York*– **Finch /Victoria Park – Basement** (2Brm, 1Bath) Sep. Entrance. Well maintained. Steps to TTC. ,Close to Public School, Catholic school, Childcare centre, Seneca College, Hwy 404 **[Asking $1000/m]**

watsonPM1989@gmail.com SPECIALISING IN MANAGING RESIDENTIAL PROPERTIES

Karu: 416-616-7278 Vithy: 416-509-9557 Vathsan: 416-417-8432

# CUSTOM BUILD HOME

## Build Your Personalized Dream Home

**Footing, Foundation, Framing & Building Envelope**
**By Experienced Fine Italian Craftsmen & Tradesmen $110/sq ft**
**(Interior Finishes, Fixtures, Appliances and Painting Extra)**



உங்கள் கனவு இல்லத்தை நனவாக்குவதற்கு
அனுபவம் நிறைந்த, நாணயமான,
தரமான கட்டிட நிபுணர்கள்

**Industrial & Commercial Buildings from $75 / sq ft**

**TAMB CANADA** (647) 877-8262 (TAMB)

Purchase of the Lot, Building Design, Municipal Fees, and Site Preparation are Not Included in Our Price




Math tutorial331

Answers to Tutorial 330

1)For y=-$\sqrt{(x+2}$ $D=[x \in R|X \geq -2$ $and R=[Y \in R|Y \leq 0.$ $For\ y=x^2$-2 ,D=[X$\in$ $R]$ $and\ R=[y \in R|Y \geq -2]$ The student will be correct if the domain of y=$x^2$-2 is restricted toD=[X$\in$ $R|X \leq 0]$

2)Inverse of y=$2x^2$+4x .This could be written as y=$2(x+1)^2$-2 so inverse is x=$2(y+1)^2$-2 (,$y+1)^2$=(x+2)/2,y+1=squre root of (x+2)/2 ,y= root of (x+2)/2 -1. $f''$=root of (x+2)/2-1

3)The number of arrangements ending in S is ,arrangements of 8 letters of which 2 are $E_S$ .So this can be done in $\frac{8!}{2!}$ =20160 ways

4)The fraction that contains at least one defective is

(100choose5 -97choose5) divided by (100choose5) =1-(95.94.93)/(100.99.98) ~0.144

5)f''(x)=-1/4$(x+1)^{3/2}$+$2bx^{-3}$

Substituting x=3,b=27/64

Tutorial 331

Questions

1)Explain why there are no solutions to the equation$\log_3(-9)$ =x

2)If y=5/2($e^{x/5}$+$e^{-x/5}$), then provey$''$=y/25

3)Find the equation of the circle that has its centre on the y axis and passes through O(0,0) and the point A(2,1)

4)Describe each of the following loci in one sentence (a)$x^2+y^2$-2x+6y-3=0 (b)$(x-1)^2+(y+2)^2+(z-3)^2$=0

By Mr.S.F.Xavier(Teacher)
Tel6473409490/4167322228

# "தமிழினம் பற்றிய ஆய்வுகளும், நவீன கண்டு பிடிப்புகளும் மேலை நாடுகளில் வேகமாக நடைபெற்று வருகின்றன"

மேற்கூறியவாறு "பண்டைத் தமிழர் பண்பாடு - புதிய நோக்கு" நூல் வெளியீட்டு விழாவில் நூலாசிரியர் கலாநிதி பாலசுந்தரம் வலியுறுத்தினார். அவர் மேலும் கூறுகையில் "தமிழினம் குற்ற மனப்பான்மையில் பிறந்து, கல்வி போதித்து வந்த இனம். ஆனால் தற்போது தமிழினத்தின் வரலாறு பற்றிய பல நவீன கண்டு பிடிப்புக்கள் தோன்றியுள்ளன. தமிழினம் பற்றிய ஆய்வுகள் மேலை நாடுகளில் அதிகரித்து வருகின்றன. கடல் கொண்ட லெமூரியா கண்டத்தின் பூர்வீக வாசிகள் திராவிடர்கள் ஆவர். அவர்களின் வழித் தோன்றலே தமிழினத்தவர்களாவர். தமிழினம் நாகரிகம் படைத்த இனம் என்பதனை ஏற்றுக் கொள்ளாதவர்கள் தமிழர்கள் அல்லர். அழிந்துபோன குமரிக் கண்டத்தினை தாயமாகக் கொண்டவர்கள் தமிழர்கள். அரசாங்கத்தின் உதவியும், பணமும் இருந்தால் இதுபற்றிய உண்மை அரங்கேறும். உண்மையை வெளிப்படுத்தும் உரிமை தமிழருக்கு இல்லை".

- வீரகேசரி மூர்த்தி -

"பண்டைத் தமிழர் பண்பாடு - புதிய நோக்கு" என்ற நூல் வெளியீட்டு விழா ஞாயிற்றுக் கிழமை மாலை ஸ்காபுறோ பெரிய சிவன் ஆலய மண்டபத்தில் நடைபெற்றபோது நூலாசிரியர் கலாநிதி பாலசுந்தரம் அவர்கள் இவ்வாறு கூறினார். பெருந்திரளான மக்கள் குழுமியிருந்த இவ்விழாவிற்கு எழுத்தாளர் குரு அரவிந்தன் தலைமை தாங்கினார். அவர் தனது தலைமை உரையின் போது: "கலாநிதி பாலசுந்தரம் அவர்கள் ஈழத்திலுள்ள இடங்களின் பெயர்களைப் பற்றி ஆய்வு செய்து முன்னர் ஒரு நூலை வெளியிட்டிருந்தார். தற்போது புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களுக்கென விட்டுச் செல்ல அரிய பொக்கிஷமாக இந்த அருமையான நூலினை எழுதியுள்ளார்" எனக் கூறினார்.

மதிப்பீட்டுரை வழங்கிய கலாநிதி ஜோசெப் சந்திரகாந்தன் பின்வருமாறு குறிப்பிட்டார். "கலாநிதி பாலசுந்தரமும் நானும் சம காலத்தில் யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தில் பணியாற்றினோம். ஒரு தரமான நூலுக்கு மதிப்புரை, பொருட்கூறு, வலிமை, மேன்மை, இன்றைய பண்பாடும் அன்றைய அடிப்படையும் ஆகியன அத்தியாவசியமாகும். இந்த இருபத்தோராவது நூற்றாண்டில் ஈழத்தவர்கள் பல ஆய்வுகளை உலகளாவிய ரீதியில் முன்வைத்துள்ளனர். தாம் வாழும் நாடுகளில் தமிழ் மொழிக்காக அரும் பணியாற்றி வருகின்றனர். உலக அரங்கில் ஆயிரக் கணக்கான தமிழ் மாணவர்கள் பல்கலைக் கழகங்களில் கல்வி பயின்று வருகின்றனர். பழமை வாய்ந்த பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றினைக் கொண்டவர்கள் நாம் என்பதனை எமது இளம் சந்ததியினருக்கு நாம் உணர்த்த வேண்டும். கலாநிதி பாலசுந்தரம் அவர்கள் பத்து பொருட் கூறுகளை இந்நூலில் உள்ளடக்கி உள்ளார். காலம் வளர வளர நம்மவர்கள் புதிய புதிய ஆய்வுக் கண்ணோட்டத்தில் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். பண்பாடு, மானி



டம், போரியல் ஆகியன பற்றி விளக்கி வருகின்றனர்.

பேராசிரியரின் நூலில் நாடகத் துறை, நாடகவியல் மிகச் செழுமையாக இருக்கின்றது. இவற்றில் அவர் மிக்க அனுபவமுள்ளவர். மூன்றாவது பகுதி வலிமை - பல்துறை சார்ந்த ஆய்வு. கதை கூறுவது போன்று வரலாற்றைக் கூறும் முறை மாறி விட்டது. இவர் புதை பொருள் ஆய்வு, தொல் பொருள் ஆய்வு ஆகிய ரீதியில் எழுதியுள்ளார். குறியீட்டுச் சொற்கள் மொகஞ்சதாரோவில் உள்ளன. நீரைக் குறிக்கும் சொற்களில் நீர்த் துளியும், வீட்டைக் குறிக்கும் சொற்களில் வீட்டின் சின்னமும் இருக்கும். கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் தொல்காப்பியம் உருவாகியதாகக் கூறப்படுகின்றது. அதுபற்றி இன்று வரை தெளிவற்ற நிலை இருந்து வருகின்றது. பேராசிரியர் பாலசுந்தரம் அவர்கள் தமிழர் பெருமையை அடுத்த சந்ததிக்கு கொண்டு செல்லும் முயற்சியை மேற்கொண்டுள்ளமைக்கு எனது நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்" என்றார்.

தமிழகத்தில் இருந்து வந்துள்ள பேராசிரியர் சின்னப்பாவும் உரையாற்றினார். பெருந்திரளான மக்கள் விழாவில் கலந்து கொண்டு நூலினைப் பெற நீண்ட வரிசையில் அணி வகுத்து நின்றனர். முதற் பிரதியை திருமதி விமலா பாலசுந்தரம் பேராசிரியர் வேலுப்பிள்ளையின் புதல்வியும் பல் வைத்தியருமான புஷ்பா வன்னித்தம்பியிடம் வழங்கினார். அடுத்த இதழை திரு. செல்வநாயகம் பரராஜசிங்கம் பெற்றுக் கொண்டார்.


JOBS! JOBS! JOBS!

வேலை இல்லை என்ற கவலை இனி வேண்டாம். அனைத்து விதமான வேலைகளும் எம்மிடமுண்டு. கனடாவிற்கு புதிதாக வந்தவர்கள், மொழிப் பிரச்சனை உள்ளவர்கள் தமிழில் உரையாடி உங்களின் வேலைத் தேவைகளை நிறைவேற்றலாம். உங்களுக்கு ஏற்ற விதத்தில் பதிவுகள் செய்து தரப்படும்.

JOB OPENINGS IN TORONTO, MISSISSAUGA, BRAMPTON, CONCORD & SCARBOROUGH

- General Labourers in Bakeries, Laundries & Other Factories.
- Mixers
- Window Assemblers.
- Forklift Opetators.
- CNC Machine set-up/ Operators.
- Packagers & Assembly line Workers.
- Welders MIG & TIG.
- Wood & Upholstery Workers.

PLEASE APPLY IN PERSON WITH YOUR SIN & PHOTO ID
AND TALK TO OUR CUSTOMER SERVICE REPRESENTATIVE AS SOON AS POSSIBLE

STAFF MASRER INC.
5109 STEELS AVE W. UNIT 105
TORONTO ON. M9L 2Y8
TEL: 416-551-1626
staff.master.inc@gmail.com

STAFF MASTER INC.

# EDUCATION

## Review Questions16-19

➢ BIOLOGY 11– Genetics

(i) What is galactosaemia?
If both parents are carrying heterozygous for galactosaemia gene and having 3 children. What is the probability that none of the three will have galactosaemia?

(ii) In pea plants, round and green seeds are dominant. When two plants produced from green wrinkled seeds were crossed, 146 green round seeds and 5 yellow round seeds were produced. What are the genotypes of the parent plants?

(iii) Colour blindness is considered to be sex linked disease and males much more **likely to be colour blind than females " Explain" why?**

➢ BIOLOGY 12– Biochemistry
What are polypeptides? Explain the formation of 3-Dimensional protein structures from polypeptides.

➢ CHEMISTRY 12–Organic Chem.

Show reagents and experimental conditions to synthesize the following compounds from 1-propanol.
(i) Propene (ii) Propanal
(iii) Propanoic acid (iv) 2-propanol
(v) 2-bromopropane (vi) Propanone

## Answer Key : 16-18

➢ PHYSICS 11 &12

1200m
P Q
A → 45km/h V m/s ← C
B → 54km/h a m/s²

Speed of the car A =12.5m/s (constant speed)
Speed of the car B 15m/s (constant speed)

Speed of the car C at Q V m/s with a constant acceleration of a $m/s^2$

Car A crosses car C in 25.2 after it passes the intersection P.

$$t = \frac{d}{v} = \frac{315}{12.5} = 25.2\ s$$

In this time duration Car-C travels (1200-315) =885m

$$\Delta d = v\Delta t + \frac{1}{2}a\Delta t^2$$

$885 = v \times 25.2 + \frac{1}{2} a \times 25.2^2$ ....(1)

$885 = 25.2v + 317.5a$ ....(1)

Car B crosses C in 24.3s after it passes the intersection P.

$$t = \frac{d}{v} = \frac{365}{15} = 24.3\ s$$

At this time duration Car-C travelled (1200-365) 835m

$$\Delta d = v\Delta t + \frac{1}{2}a\Delta t^2$$

$835 = v \times 24.3 + 320a \times 24.3^2$ ....(2)

$835 = v \times 24.3 + 295.2a$ ....(2)

Solve for $v$ and $a$ using equations 1&2
$v$ = 14 m/s (5m/h); $a$ = 1.68 $m/s^2$

➢ PHYSICS 12

(a) T=mg =900x9.8N

(b) (i) pulling back, h=15-15cos20=0.905m

ΔEg =Δ mgh=mg x0.905 J= $\Delta E_k$ = ½ $mv^2$;
V= 4.2m/s

(ii) T =mg +$mv^2$/r 9.9x$10^3$ N

(c) $V_2$=0, $V_1$= 4.2m/s

a= 4.2/0.2 =21m/$s^2$;

F=ma =900x21N=1.9x$10^3$N




➢ ADV. FUNCTIONS 12
Determine the x-values in the interval [0,π] that satisfy the inequality $0 < \sin x \le \frac{\sqrt{2}}{2}$

ans: $\sin x \le \frac{\sqrt{2}}{2}$ $(0,\frac{\pi}{4}) \cup (\frac{3\pi}{4},\pi)$

Answer key
16-19 -next issue
☎ 647 341 3975
Dr. K.A. Srikrishnaraj

KEEN TUTORING CENTRE

# காங்கிரஸ்...

## 19ஆம் பக்கத்தொடர்ச்சி

கலந்து ஆலோசித்துவிட்டு தொகுதிப் பங்கீடு குறித்து திமுகவுடன் பேசுவோம். தொகுதிகள் முடிவானதும் காங்கிரஸ் கட்சி சார்பில் விருப்ப மனு பெறுவது அறிவிக்கப்படும்.

திராவிட அரசியலில் வளர்ந்தவர் நீங்கள் காங்கிரஸ் கட்சிக்கு வந்து ஏழு வருடங்கள்தான் ஆகிறது. அதற்குள் மாநிலத் தலைவரானதை பாரம்பரிய காங்கிரஸ் தொண்டர்கள் ஏற்றுக்கொள்வார்களா?

அப்பா, அம்மா என என் குடும்பத்தினர் அனைவரும் காங்கிரஸில் இருந்தவர்கள் தான். நான் மட்டும்தான் திராவிட அரசியலில் ஈடுபட்டேன். எதில் இருந்தால் என்ன? எல்லாமே மக்களுக்கான அரசியல் கட்சிகள் தான். பெரிய வித்தியாசம் எனக்கு தெரிய வில்லை. ராஜ்யசபா எம்.பி., அகில இந்திய செயலாளர் பதவிகளையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு, காங்கிரஸில் ஒரு சாதாரண அடிப்படைத் தொண்டனாகத்தான் 2009 இல் சேர்ந்தேன். அன்றிலிருந்து தங்கபாலு, ஞானதேசிகன், ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் உள்பட தலைவராக இருந்தவர்களுடன் இணக்கமாக கட்சிப் பணிகளைச்செய்து வந்திருக்கிறேன். என் கடந்தகால செயல் பாடுகளைப் பார்த்து என் மீது நம்பிக்கை வைத்து ராகுல்காந்தி இந்தப் பொறுப்பை கொடுத்துள்ளார்.

ஆனால், 60 வயதைக் கடந்தவர்களுக்கு பதவி இல்லை என்று சொன்ன ராகுல்காந்தி, 65 வயதைக் கடந்த உங்களுக்கு பதவி கொடுத்திருக்கிறாரே?

முதலில் என்னை வயதானவன் என்று சொன்னதற்கு உங்களை வன்மையாக கண்டிக்கிறேன். இளைஞர்களுக்கு அதிக வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில்தான் ராகுல்காந்தி சொன்னாரே தவிர, வயதானவர்களை கட்சியிலிருந்து ஓரங்கட்ட வேண்டும் என்ற நோக்கத்தில் சொல்லவில்லை. ஒரு கட்சிக்கு இளைஞர் சக்தியும் தேவை, அனுபவம் மிகுந்த மூத்தவர்களும் தேவை. வயதை பார்க்க வேண்டாம். உள்ளத்தாலும் உழைப்பாலும்



என்றும் நான் இளைஞன்தான்.

ஒருகாலத்தில் தமிழகத்தை ஆட்சி செய்த கட்சி இன்று தமிழகத்தில் தனியாக ஒரு தொகுதியைக்கூட வெல்ல முடியாத நிலையில் உள்ளது. இந்நிலையில் காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சிக்கு என்ன செய்யத் திட்டமிட்டுள்ளீர்கள்?

முதலில் கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகமாக்குவதோடு தமிழ் நாடு முழுவதும் பூத் கமிட்டிகளையும் அதிக மாக்கப்போகிறேன். கட்சி நிர்வாகிகளையும் தொண்டர்களையும் ஒன்றிணைக்கும் வகை யில் அதிகமான பொதுக் கூட்டங்களையும் மாநாடுகளையும் நடத்த முடிவெடுத்திருக் கிறேன். ராகுல்காந்தியை அடிக்கடி தமிழகத்துக்கு அழைத்துவரும் திட்டமும் உள்ளது. நிச்சயம் என் தலைமையில் தமிழக மக்களின் பிரச்சனைகளுக்காக மிக வலிமையாகப் போராடும் கட்சியாக காங்கிரஸை மாற்றுவேன். குக்கிராமங்களில் கூட இனி காங்கிரஸ் கொடி பறக்கும்.

பல்வேறு கட்சிகளுக்கு சென்று வந்துவிட்டாலும் அதிமுக அடையாளம்தான் இன்றும் உங்களுக்கு அதிகமாக இருக்கிறது. எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பிறகு அதிமுக இரண்டாக உடைந்தபோது, நீங்கள் அதிமுக (ஜெ) அணியின் முக்கிய தலைவராக விளங்கினீர்கள். இந்நிலையில் எப்படி அவரை எதிர்த்து அரசியல் செய்வீர்கள்?

அதிமுகவை எம்.ஜி.ஆர். தொடங்கிய காலத்திலிருந்து அவரது கடைசி காலம் வரை கட்சியை வளர்த்தவர்களில் நானும் ஒருவன். இளைஞரணி செயலாளராக இருந்தபோதும், அமைச்சராக இருந்தபோதும் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த பல்வேறு இளைஞர்களைக் கொண்டுவந்து அதிமுக கட்சியில் இணைத்திருக்கிறேன். அவர்களில் பலர் தற்போது எம்.எல்.ஏ.க் களாக இருக்கிறார்கள். எம்.ஜி.ஆரின் அன்புக்குரியவர்களில் ஒருவனாக இருந்தேன் என்பதாலும், கட்சி உடைந்தபோது ஜெயலலி தாவுக்கு ஆதரவாக இருந்திருக்கிறேன் என்பதாலும், என் அதிமுக அடையாளம் மக்கள் மனதில் ஆழமாக இருக்கலாம். ஜெயலலிதா அரசியலில் நிலைத்து நிற்க நானும் துணை நின்றேன் என்பதை மறுக்கவும் முடியாது மறக்கவும் முடியாது. இது, எல்லோருக்கும் தெரிந்த உண்மை. ஆனால், இன்று நான் காங்கிரஸ் தலைவர். என் கட்சியை வளர்க்கவும் மக்கள் பிரச்சனைகளுக்குப் போராடும்போதும், யார் எதிர்ப்பாக இருந்தாலும், அவர்களை எதிர்த்து அரசியல் செய்ய வேண்டியது எனது கடமை. மக்களுக்கு தேவையான நல்லத் திட்டமாக இருந்தால் ஆதரிக்கலாம் எதிர்க்க வேண்டிய மோசமான திட்டங்களாக இருந்தால் நிச்சயமாக எதிர்ப்பேன்.

பாரம்பரியமான காங்கிரஸ் கட்சியில் இன்று குஷ்பு, நக்மா போன்ற நடிகைகள் முக்கிய தலைவர்களாக இருப்பது விமர்சிக்கப்படுகிறதே?

காங்கிரஸில் நடிகைகள் இருப்பது புதிதல்ல. சுதந்திரப் போராட்டத்தின்போதே கே.பி. சுந்தரம்பாள் போன்ற திரை நட்சத்திரங்கள் காங்கிரஸுக்கு ஆதரவாக இருந்திருக்கிறார் கள். சினிமாப் பிரபலங்கள் அரசியலுக்கு வருவது வரவேற்க வேண்டியதுதான்.

திடீரென நடிகர் ரஜினியைச் சந்தித்ததன் காரணம் என்ன? அவருடன் என்ன பேசினீர்கள்?

அந்த சந்திப்பு முழுக்க முழுக்க நட்பு ரீதியானதே. அதில் அரசியல் இல்லை.

நீங்களும் சினிமாவில் நடித்தீர்களே, ஏன் தொடர்ந்து நடிக்கவில்லை?

நான் நடித்த படங்கள் ஓடவில்லை. அதனால், தொடர்ந்து நடிக்கவில்லை. அதற்கு மேலும் சினிமாவில் வாழ்க்கையை தொடரப் போதுமான பணமும் என்னிடம் இல்லை.

# புகழ்பூத்த மூத்த எழுத்தாளர் வள்ளிநாயகி இராமலிங்கம் - குறமகள்

ஈழத்தின் மூத்த பெண் எழுத்தாளருள் ஒருவர் கிருபானந்த வாரியாரின் பெயர் சூட்டுதலினால் குறமகளான ஒருவர், இன்று எம்மிடையே இல்லை என்னும் போது மெல்லிய இழப்புக்கோடு உள்ளே நுழைகின்றது. எண்பத்து மூன்று ஆண்டுகள் வரை வாழ்ந்து மண்ணுலகினை விட்டு நீங்கிச் சென்ற அவர் சராசரி ஒரு தமிழ் பெண்மணியல்ல. குறமகள் அறுபது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் இலக்கியத்திற்கு ஊழியம் செய்த ஒருவர். ஈழத்து பெண் எழுத்தாளர்களுள் மூத்தவர். புனைகதை, கவிதை, கட்டுரை, குறு நாவல், ஆய்வியல் போன்ற எல்லா துறைகளிலும் எழுதிக் குவித்தவர். சிறந்த சொற்பொழிவாளர். நல்ல நடிகர். ஒப்பற்ற கலைஞர் ஜனவரி 09,1933 ஆம் ஆண்டு சின்னத்தம்பி செல்லமுத்து தம்பதியினருக்கு இவர் மூத்த புதல்வியாக காங்கேசன்துறையில் பிறந்தார். ஆரம்பக் கல்வி நடேஸ்வராக் கல்லூரியாகும். பின்பு இளவாலை கன்னியர்மட ஆங்கிலக் கல்லூரி கற்று, சாதாரணத்தரப் பரீட்சை (SSC)யில் சித்தி எய்தி கோப்பாய் ஆசிரியர் பரீட்சையிலும் தேறினார். 1955 ஆம் ஆண்டு பால பண்டிதர் பரீட்சையிலும் சித்தி பெற்றார். 1961 இல் இந்தியாவில் ஒரிசா மாகாணத்தில் B.A பட்டம் பெற்றார். 1972 இல் இலங்கை பல்கலைக்கழகத்தில் கல்வி டிப்ளோமா (Dip. in Ed.) பட்டம் பெற்றதுடன் 1977இல் கொழும்பு பல்கலைக் கழகத்தில் நாடக டிப்ளோமா (Dip. in Drama) பட்டம் பெற்றார். 1981-82 ஆம் ஆண்டுகளில் M.A பட்டப்படிப்பை யாழ். பல்கலைகழகத்தில் மேற்கொண்டு, முதல் வருடப் பரீட்சையில் சித்தியடைந்தார். 1983 இல் நாட்டு சூழ்நிலை காரணமாக பட்டத்திற்குரிய ஆய்வு கட்டுரையை சமர்ப்பிக்க முடியாமல் போனமையால் M.A பட்டம் பெறமுடியாமல் போய்விட்டது.

நடேஸ்வரா கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, சென். ஹென்றீஸ் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் ஆசிரியராகவும், அழுத்கம ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிகளில் விரிவுரையாளராகவும் சிறந்த கல்விப்பணி புரிந்தார். ஆங்கிலப் புலமை தமிழறிவு கொண்டிருந்த அவர் பல கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள், நாட்டிய நாடகங்கள் என்பவற்றினை மாணவர்களின் துணையுடன் அரங்கேற்றினார்.

சிறுவயதிலிருந்தே வாசிப்புப் பழக்கம் கொண்ட இவர் ஈழகேசரி மூலம் அறிமுகமானார். 1954 இல் ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் நடைபெற்ற சிறுகதை போட்டியில் முதல் பரிசு பெற்றதுடன் அவரது புகழ் பூக்க ஆரம்பித்தது. இரசிகமணி கனக செந்திநாதன் அவரை ஊக்குவித்தார். அப்போதிருந்தே சன்மார்க்க சபை, அன்னை (கஸ்தூரிபாய்) கல்லூரியாய் நிலையம், காங்கேசன்துறை நலன்புரி மன்றத்தில் சேர்ந்து பணி புரிந்தார்.



குறமகள் சிறந்த எழுத்தாளராக மாறுவதற்கு தமிழக எழுத்தாளர்களே முக்கிய காரணமாகும். பாரதி, மகாத்மா காந்தி, ஈவேரா, முவ போன்ற தமிழக அறிஞர்களின் எழுத்துகளில் மூழ்கினார். ஆரம்பத்திலிருந்தே பெண்களின் சீர்கெட்ட நிலையை உணர்ந்தமையால் அதனைக் கருவாகக் கொண்டு பல கதைகளை எழுதி வரலானார். கவிதைகளிலும், நாடகங்களிலும் அவையே மலர்ந்தன. பெண்களின் பிரச்சினைகள் பற்றி எழுதிய மூலவர் இவரேயாவர்.

சத்யப்பிரியா, ராசாத்திராம், பத்மினி பிரியதர்சினி, கோமகள், காங்கயி, வாலின், சக்திக்கனல், குறமகள் என்று பல புனை பெயர்களில் எழுதியவர் இவர். ஒவ்வொரு புனைபெயரிலும் ஏதோ ஒரு காரணம் இருக்கும் என்பது அவரை அறிந்தால் தான் தெரியும். வீரகேசரியில் 'மத்தாப்பு' குறு நாவல் எழுதிய நால்வருள் இவரும் ஒருவர். அத்துடன் மாணிக்கம் பத்திரிகையில் வெளிவந்த 'கடல் தாரகை' நாவலில் எழுதிய பத்து பேரில் இவரும் ஒருவர். இப்படிப் பலர் சேர்ந்து நாவல்களை எழுதிய வரலாறு இதுவே முதலாவதாகும்.

குறமகளின் முதல் சிறுகதைத்தொகுதியான 'குறமகள் கதைகள்' யாழ். இலக்கிய வட்டத்தினால் 1990 ஜனவரியில் வெளியானது. எழுதத்தொடங்கி 35 வருடங்களின் பின்பே நூலுருவில் அவர் தெரிய வந்தார். இதில் 12 சிறுகதைகள் உள்ளன. இதற்குப் பதிப்புரை வழங்கிய செங்கையாழியான் 'நான் எழுத்துத் துறைக்கு வரு முன்னரே, ஈழத்து இலக்கிய பரப்பில் காலூன்றியவர் குறமகள்' என்று விதந்துள்ளார். இந்த நூல் மீள்பதிப்பாக எஸ். பொ. அவர்கள் 'மித்ரா' பதிப்பாக வெளியிட்டார். மீண்டும் 'குறமகள் கதைகள்' என்ற பெயரிலேயே வெளி வந்தது. இது 2000 ஆம் ஆண்டில் வெளியானது. இவர் தனது எழுத்தில் "தமிழ் முன்னெடுப்பின் பல துறைகளிலும் குறமகள் உத்தம ஊழியக்காரியாய் வாழ்ந்துள்ளார். கல்விச் சேவையில் தடம் பதித்தவர். மேடைப் பேச்சில் புகழ் நாட்டியவர். நாடகத்தை கற்கை நெறியாகப் பயின்று நாடகக்கலையை புதுப்பித்தவர். கவிஞராய்-வியாசராய்-கதை-ஞராய் எழுத்துத்துறையில் நிலைத்து நிற்பவர். சென்ற நூற்றாண்டிலே, ஈழத்துப் பெண் எழுத்தாளர்கள் சாதித்தவற்றிற்கு ஒரு மெய்யான ஆவணமாகவே குறமகள் கதைகள் விளங்குகின்றன" எனக் கூறியுள்ளார்.

1994ஆம் ஆண்டு தமிழர் தகவல் நிகழ்த்திய வருடாந்த விருது வழங்கும் நிகழ்வில் குறமகளுக்கும் இலக்கிய சேவைக்கான விருது வழங்கப்பட்டது. அந்த நிகழ்வில் அவர் பெற்ற கௌரவம் மூலமே அனைவருக்கும் அறிமுகமானார். அத்துடன் கவிஞர் கந்தவனம் அவர்கள் தனது கலாநிதி பாராட்டு விழாவில் 'இலக்கிய வித்தகி' என்ற பட்டத்தையும் சூட்டி மகிழ்ந்துள்ளார்.

மறுவருடமான 2001 இல் குறமகளின் 'உள்ளக்கமலமடி' சிறுகதை தொகுதி வெளியானது. இந்திரா பார்த்தசாரதி தனது முன்னுரையில் 'இவரது கதைகளை நான் படித்த பின்புதான் இதுவரை எனக்கு ஏற்பட்டிருந்த இழப்பினை என்னால் உணர முடிந்தது' என்று வேதனைப்படுகிறார். வாழ்வுச்சிக்கலை கலை நேர்த்தியுடன் எழுதுபவர். திண்ணிய பார்வையும், தெளிந்த மனப்பக்குபவமும் உள்ளவர். சமூக மாறுதல்களை வேண்டுபவர் என்றும் பாராட்டுகிறார். இதேநூலில் குறமகள் தனது எழுத்தில் 'கணத்திற்கு கணம் சலனப்படும் காலநிலை, பனியில் புதைந்து புறப்பட்டு உறுத்தும் ஊதற்காற்று, காற்றுப் புகாத விண்ணளாவிய புகைக் கூண்டு வதிவிடங்கள், தனிமைப் படுத்தப்பட்ட மௌன வாழ்க்கை' என்கிறார். தனது வாழ்வு பற்றியும் இழப்புகள் பற்றியும் இப்படி கூறுகிறார். "யுத்தகால சூறாவளிக்குள் சுற்றிச் சுழன்று பார்த்த தொழில், பாரம்பரிய சொத்துக்கள், தோட்டங்கள், வீடுகள், உடைமைகள், ஆவணங்கள், என் கதைகள், கட்டுரைகள், கவிதைகளின் ஒட்டுப்புத்தகங்கள், சொந்த பந்தங்கள் எல்லாம் இழந்து தலைவனையும் பறிகொடுத்து கடைசி மகள் ரோசாவையும் ஈழப்போராட்டத்திற்காக அர்ப்பணித்து கரையொதுங்கினேன் கனடாவில்" என்று கூறி எம்மையும் கண்ணீர் துளிர்க்க வைத்துள்ளார்.

குறமகள் கட்டுரையாளர், ஆய்வாளர் என்பதற்கு அவர் எழுதிய 'யாழ்ப்பாணச் சமூகத்தில் பெண்கல்வி சார்பு ஆய்வு' என்ற நூல் சான்று பகரும். இவ் யாழ்ப்பாண பெண்கள் பற்றிய ஆய்வு வேறு எவரும் செய்ததாக ஞாபகமில்லை. இந்நூலுக்கு 20 பக்கங்களுக்கு மேல் பேராசிரியர் சிவத்தம்பி முகவுரை எழுதியுள்ளார். 2006 இல் வெளியான இந்நூல் மிகச்சிறந்த ஆய்வு நூல், ஆவண நூல். இவர் செய்த ஆய்வின் பெரும்பகுதியை தாயகத்தில் இழந்து விட்டார். எனவே இந்த இழப்பு ஈடு செய்ய முடியாததொன்று.



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

தொடர்ச்சி 39ஆம் பக்கம்...

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➤ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➤ FUNCTIONS, ADV. FUNCTIONS
➤ CALCULUS & VECTORS, DATA MGT
➤ SCIENCE, MATH, ENGLISH
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு
✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB &AP PROGRAMME
✓ MCAT Classes
✓ EQAO GR 3 & 6
GR 9-12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com

## நகைச்சுவைத் தொடர் 341 ராசம்மா ராச்சியம்

கலகலப்பு நீதன்



மலர்கள் கேட்டேன் வனமே தந்தனை....
தண்ணீர் கேட்டேன் அமிர்தம் தந்தனை....
பாடல் இப்போ எல்லோர் வாயிலும் முணு முணுப்பதும்
காதுகளில் ஒலிப்பதுமான பிரபலமான பாடல்



கவியரசு வைரமுத்து அவர்களின் வரிகள். ஏ.ஆர்.ரகுமானின் இசை. இசைக்குயில் சித்திராவின் குரல்.
ஆனால் தமிழ் நாடு கர்நாடகாவிடம் தண்ணீர் கேட்டது........
கர்நாடகா காரர் அங்கு வாழ்ந்த தமிழர்க்கு அடி, உதை
உயிர்க்கொலை, உடமைகள் தீக்கிரை...



என்னவோ தெரியவில்லை தமிழர் எங்கு வாழ்ந்தாலும்
உரிமை கேட்டாலும் உணவு கேட்டாலும்
தண்ணீர் கேட்டாலும் அடி உதை உயிர்ப்பலிதான்.

உலகம் பிறந்தது எனக்காக... ஓடும் நதிகளும் எனக்காக...
(எம். ஜி.ஆர் - பாசம் திரைப்படப்பாடல்)

அதுசரி இப்ப அம்மாவுக்கு கொஞ்சம் சுகமாம் என்றபடி தனது ஐபொட்டை எல்லா ரேகைகளும் தேயுமளவிற்கு உருட்டிக் கொண்டு வந்தா ஐபொட் அகிலாண்டேஸ்வரி.



சரி அம்மா...என முணுமுணுத்தா செக்கண்ட் புளோர் செல்லம்மா. அன்னம்மா.. அது ஜெயலலிதா அம்மா. அவவுக்கு சுகமில்லையெண்டு அவவோடை சேர்ந்த, கடவுள் இருக்கிறார், இல்லையெண்டு சொல்லுற எல்லாக்கட்சியளும் கோவில்களிலை பூசை, வேள்வி, அர்ச்சனை, அபிசேகம் செய்யினமாம் எனச் செய்தியின் பின்னனி சொல்வதுபோலச் சொல்லிமுடித்தா ஆட்டிலறி அன்னம்மா.

உலகரின் தடிமனும் இருமலும் 2 கிழமையாக ஓயவில்லை. உலகண்ணை என்ரை பேஸ்புக்கிலை போட்டுவிடட்டா என ஐபொட் அகிலாண்டேஸ்வரி கேட்டதும் செக்கண்ட்புளோர் செல்லம்மாவும் ஆட்டிலறி அன்னம்மாவும் தங்களை மறந்தே சிரித்து விட்டார்கள். யு..நோ, உலகண்ணை உங்களுக்கு சிக் எண்டு பேஸ் புக்கிலை போட்டா கனபேர் லைக் பண்ணுவினம். உலகண்னை சினத்திலை இருக்கிறார், உவ சிக்கெண்டு போடப் போறாவாம். மரணத்திற்கும் மலச்சிக்கலுக்கும் லைக் போடும் மக்கள் இருக்கும்வரை பேஸ் புக் வளர்ந்துகொண்டே போகும்.



பிக்ஸ் டிப்போசிற்றிலை போட்ட பணமும்
பேஸ்புக்கிலை போட்ட நியூசும்
இலகுவில் திருப்பி பெற முடியாது. (கலகலப்பு புது மொழி)



நன்றி மறவேல் - ஔவையார் (ஆத்திசூடி)
நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது.
அன்றே மறப்பது நன்று - திருக்குறள்
தாங்ஸ் கிவிங் (Thanksgiving)

விவசாய அறுவடை - நன்றிக் கடன் தான் இத்தினம். கனடாவில் 06 நவம்பர் 1879 இல் இருந்து ஒக்ரோபரில் 2வது திங்கள் கொண்டாடப்பட்டு வருகிறது. காலம் செல்லச்செல்ல கலை கலாச்சாரம் எப்படி எமக்கேற்ற வகையிலே நாம் கொண்டாடுகிறோமோ அப்படி மாறி வந்துள்ளது.

எமது பொங்கல் விழாக்கள் எப்படி மாமிச போசனத்துடன் மாற்றிக் கொண்டாடுகிறோமோ அப்படித்தான். என்ன இருந்தாலும் ஒரு விடுமுறை நாள்.



பிறிம்லி மீனாவும் மதனும் நீண்ட நாட்களின்பின் உலகர் வீட்டுக்கு வந்தது மட்டுமல்ல மதன் ஒரு கார் வாங்கியிருக்கிறான் என பிறிம்லி மீனா சொல்ல மதன் தான் அண்மையில் பார்த்த ஒரு புளோகிறாம் படங்களை எல்லோருக்கும் காட்டினான்.

'JOURNEY' நல்ல வடிவா புறோகிறாம் செய்தவை. காசு சேர்த்துக் கனடாவிலை புற்றுநோய் நிறுவனத்திற்கும் கிளி-நொச்சியிலை மகாதேவ சுவாமிகள் அநாதை சிறுவர் விடுதிக்கும் நிதியை பிரிச்சுக் கொடுத்தவை. சினிமா படங்கள்ளை வந்த சில காட்சிகளையும் நடிச்சுக் காட்டினவை. ஒரு நிமிடம் கூட வேஸ்ற் இல்லை.

நான் அம்மாவோடை கன புறோகிறாம் பாத்தனான். ஒரு விழாவிலை குத்துவிளக்குக் கொளுத்த லிஸ்ரிலை போட்ட பெரியவர் ஒரு மணித்தியாலம் லேட்டா வந்தவர். நிகழ்ச்சி முடிய சரியான லேற். இரவு 11 மணிக்கு சோறு, இடியப்பம் தந்தவை. அதை சாப்பிட்டு நான் 2 நாள் ஸ்கூலுக்கு போகேல்லை எனச் சொல்லிச் சிரித்தான்.
மதன் உப்பிடி கதைக்கக்கூடாதென பிறிம்லி மீனா அடக்க... இல்லை அவர் சொல்லுறது தான் சரி. என்னை ஒரு விழாவிற்கு கூப்பிட்டு என்ரை பேரை வாசித்த பிள்ளை போனிலை ரைப் பண்ணினதாம். எனக்கு சேட்டிபிகற் தரேக்கை போன் பற்றி டவுனாம். என்னைப்பற்றி ரைப்பண்ணின இன்∴பமேசன் அழிஞ்சு போச்சாம். அடுத்து..பாடசாலையின் பழைய அதிபர் எக்கவுண்டன் அகிலா...வரி எனப் பிழையா எல்லாம் சொல்லி நான் பிறின்சிபலிட்டை பேச்சு வாங்கிகொண்டு வந்தனான்.

அறிவிக்க வந்த பிள்ளைக்கு தமிழும் ஒழுங்கா தெரியாது, இங்கிலீசும் ஒழுங்கா தெரியாது.

பூமி மாசடையுது. குப்பயைளை கொட்டாதேங்கோ, சிகரெட் பிடிக்காதேங்கோ, பழைய கார்கள் புகை அடிக்க அடிக்க ஓடாதேங்கோ எண்டு உலகத்தலைவர்கள் அங்கையும் இஞ்சையும் கூட்டம் வைக்கினம். (அவர்கள் இடையிடை சுருட்டு கஞ்சா பிடிப்பதை கணக் கெடுக்க வேண்டாம்)



உங்கை ரி.வி.யைப்பார் அகிலாண்டேஸ்வரி... கோஸ்ரரிக்காவிலை எரிமலை சாம்பலைக் கக்கிக் கொண்டிருக்கு, எயர்போட் றோட்டுத் தெருவெல்லாம் ஒரே சாம்பல் என்றா செக்கண்ட்புளோர் செல்லம்மா
முடிசார்ந்த மன்னரும் பிடிசாம்பல் ஆவது திண்ணம்.

சாதனையும் வேதனையும்
வாழும் காலத்தில் நாம் எதனைச் சாதிக்கிறோம் எமது சமுதாயத்திற்கு எவற்றை விட்டுச்செல்கிறோம் எனக் கேள்வி வரும்போது சில வேளைகளில் பதிலில்லை.



அண்மையில் நம்மை விட்டுப்பிரிந்த நம் மனதைவிட்டுப்பிரியாத திருமதி வள்ளிநாயகி ராமலிங்கம் அவர்கள் குறிப்பாக 'குறமகள்' என்றால்தான் தெரியும் கனடாவிற்குப் புலம்பெயர்ந்து வந்த காலத்திலிருந்து எழுத்தாளராக, மேடைப் பேச்சாளராக, நடிகராக ஒவ்வொரு துறையிலும் தனக்கென முத்திரை பதித்தவர் இறைவனடி சேர்ந்துள்ளார். அவரது ஞாபகம் என்றும் எங்களுடன்....

ஞாபகம் இருக்கிறதா? ஒக்ரோபர் 1..15..



01. நவராத்திரி விரதாரம்பம்.

01. நடிகர் திலகம் சிவாஜி கணேசன் பிறந்தநாள் (1927......2001

01. உலக முதியோர் நாள்



02. மகாத்மா காந்தி பிறந்ததினம் (1869 -1948)

04. 1957 ல் பண்டா செல்வா ஒப்பந்தத்திற்கு எதிராக கண்டிக்கு ஊர்வலம் நடத்தப்பட்டது.



04. சர்வதேச வன விலங்குகள் நாள்

05. அனைத்துலக ஆசிரியர் நாள்



08. இணுவில் வீரமணி ஐயர் நினைவு தினம்
(கற்பகவல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்) (1931..2003)

09. உலக அஞ்சல் நாள்



10. விஜயதசமி வித்தியாரம்பம் (ஏடு தொடக்குதல்)

10. தாங்ஸ்கிவிங் டே



11. சர்வதேச பெண் குழந்தைகள் தினம்

15. இணுவில் வீரமணி ஐயர் பிறந்த நாள்

15. புரட்டாசிக் கடைசிச்சனி.


**றொறன்ரோ தமிழ்ச்சங்கம் மாதாந்த இலக்கியக் கலந்துரையாடல்**

### "பத்திரிகைத்துறையில் எமது பார்வைகளும் பயணங்களும்"

ஒருங்கிணைப்பு: வைத்திய கலாநிதி இ. லம்போதரன்

சிறப்புபேச்சாளர்கள் உரை:
திரு. ராஜா மகேந்திரன் (விளம்பரம்)
திரு.ரி.கே.பரமேஸ்வரன் (ஈழநாடு)
திருமதி. ராஜி அரசரத்தினம் (தமிழர் செந்தாமரை)
திரு.ஆர்.என்.லோகேந்திரலிங்கம் (உதயன்)

**ஐயந்தெளிதல் அரங்கு**

நாள்: 29-10-2016 நேரம்: மாலை 3:00 முதல் 7:00 வரை
இடம்: றொறன்ரோ தமிழ்ச்சங்க மண்டபம்
3A, 5637, Finch avenue East, Scarborough, M1B 5k9

தொடர்புகளுக்கு: அகில் - 416-822-6316
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம் அனுமதி இலவசம்

# புகழ்பூத்த...

### 37ஆம் பக்கத்தொடர்ச்சி

'குறமகள் எழுத்துலகின் பொன்மகள்' எனக் கூறும் எஸ். திருச்செல்வம் அவர்கள் குறமகளது ஐம்பதாண்டு சேவையை மதித்து 2005 இல் 'மாலை சூட்டும் நாள்' என்னும் கவிதைத் தொகுப்பு ஒன்றினை வெளியிட்டுள்ளார். இந்த நூலில் எஸ். ஜெகதீசன் இவரது இளமையில் பாட்டுத் திறனும், நடனமும், வயலின் ஆற்றலும் பற்றிக்குறிப்பிடப்பட்டுள்ளார். 27 வருடங்கள் ஆசிரியராகவும் 8 வருடங்கள் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளராகவும் இருந்துள்ளமையையும் அறிய முடிகிறது.

இவரது இன்னொரு நாவலான 'மிதுனம்' கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தால் 2012 இல் வெளியிடப்பட்டது. மிதுனம் (மிதுனராசி - இரட்டை என்ற பொருள்படும். தனது சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் இருந்த வேளையில் அவர் அவதானித்த கதைக்கருவே இதில் உள்ளது. வைத்தியசாலையில் இருந்து இப்படியான ஒரு நாவலை எழுதி வெளியிட்டதும் இவராகத்தான் இருக்கும்.

2009 ஆம் ஆண்டு விளம்பர பத்திரிகையில் எழுதிய இவரது குறுநாவல் தொகுப்பு 'சூதிர்காலகுலாவல்' என வெளிவந்தது. தாய்நாட்டுப் போராட்டம், வீரதீர செயல்கள் பற்றியெல்லாம் இதில் வெளிப்படுத்தியுள்ளார். சிறிய நூல் எனினும் மிகவும் காரமானது.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் ஒன்றாக கற்பித்த சகதோழி, வயதினால் எனது அக்கா, பண்பினால் எனது உறவு, உணர்வினால் பாசக்காரி என்றெல்லாம் அவரைக் கூறலாம் போலுள்ளது. இந்த பிரமாண்டம் போன இடம் புரியவில்லை. அவரது இந்த இடத்தை வெறும் காற்று மட்டும் தான் நிரப்பிக் கொண்டிருக்கும்.

# நவராத்திரி பூஜை



புரட்டாதி மாதம் வரும் பூர்வபிரதமை திதிமுதல்
பூர்வ நவமிதிதி வரை ஒன்பது இரவுகள்
நவசக்தி நாயகிக்கு நாமெடுக்கும் பூஜையே
நவராத்திரி பூஜை

சிவனுக்கு உமையவளாய்
சிவசக்தி நாமம் கொண்டு
சிம்ம வாகனத்தில் வீற்றிருப்பவள்
சிவசக்தி
நவசக்தி நாயகியாய் நாமம் கொண்டவளாய்
நவலோகமும் ஆழுபவள் அவளே
நவசக்தி
வீரத்திற்கு அதிபதியாய் வீரம்வேண்டித் துதிப்போருக்கு
வீரத்தை வழங்கும் துர்க்கை அவளே
வீரசக்தி
செந்தூரப் பொட்டுடன் செந்தாமரையில் வீற்றிருந்து
செல்வத்தை வழங்கும் இலட்சுமி அவளே
செல்வசக்தி
வெள்ளை உள்ளம் கொண்டு வெண்தாமரையில் வீற்றிருக்கும்
சகலகலா வல்லியே சரசுவதி ஆனவள்
கல்வி சக்தி
மும்மூன்று இராத்திரிகள் முறையே
மூன்று பேருக்கும் எடுக்கும் பூஜையே
நவசக்தி நாயகிக்கு நாமெடுக்கும்
நவராத்திரி பூஜை



கவிநாதம் பரந்தாமன்






# வாசகர் கடிதம்

### *Responsible dog ownership mitigating risk of dangerous dogs*

கனடாவில் நாய் ஒன்றிடம் கடி வாங்கினால் நட்டஈடு பெறுவது எப்படி? என்ற தலைப்பில் நீதிமன்ற வழக்குகளின் முடிவுகளை வைத்து திரு. சிவ. பஞ்சலிங்கம் அவர்கள் எழுதிய கட்டுரை 'விளம்பரம்' பத்திரிகையில் சில வருடங்களின் முன்பு படித்திருந்தேன். (யூன் 01, 2012 இதழ்) அருமையான சில தகவல்கள் அங்கு குறிப்பிடப்பட்டிருப்பது. அதே கட்டுரையினை இன்னொரு தமிழ்ப் பத்திரிகை இவ்வருடம் மீண்டும் பிரசுரித்தது. யாவருக்கும் மீண்டும் பயன்படும் விடயம். ஆனால் இங்கு இது தொடர்பாக மேலும் சில விடயங்களை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

2015ஆம் ஆண்டு மட்டும் ரொறொன்ரோ நகர மிருகக் கட்டுப்பாட்டு சபைக்கு (Toronto Animal Control Department) நகரில் மொத்தம் 754 பேருக்கு நாய் கடித்தது என்ற முறைப்பாடுகள் வந்திருந்தன. நாய் பாய்ந்து மிரட்டியது என்று 431 முறைப்பாடுகள் வந்தன.

இதில் நாய் மனிதன் மேல் பாய்ந்தது என்பது தவிர, நாய் நாய்க்குமேல் பாய்ந்து கடித்த முறைப்பாடுகளும் அடங்கும்.இதன் காரணமாக ஆபத்தான நாய்களை வெளியே கொண்டு வருபவர்களுக்கு சில இறுக்கமான சட்டத்தினை நடைமுறைப் படுத்தப்படல் வேண்டும் என்று ரொறொன்ரோ நகர சபையிடம் கடந்த மாதம் கோரப்பட்டுள்ளது. (எவரையும் துன்புறுத்தாத கடிக்காத நாய்கள் இதற்கு விதி விலக்கு)

- வெளியே ஆபத்தான நாய்களைக் கொண்டு வரும்போது அதை சங்கிலியில் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதுடன் அதன் வாய் மூடிக் கட்டப்பட்டிருக்க வேண்டும்.
- பகிரங்கப் பூங்காங்களில் கட்டு அவிழ்த்து விட்டு, ஓட விடுவது தடை செய்யப்பட்டுள்ளது.
- ஆபத்தான நாய் என்ற பதாகை நாயின் கழுத்தில் அணிந்து அடையாளப்படுத்தப் படல் வேண்டும்.
- பயிற்சிகள் வழங்கப்பட்டது என்பது நிருபிக்கப்படல் வேண்டும்.

இவ்வாறு சட்டம் உருவாக்கப்படவுள்ளது. நடைமுறை எங்கே போகின்றது என்பதனைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

திரு. ரஞ்சன் பிரான்ஸிஸ்
(குடிவரவுதுறை வருமானவரி ஆலோசகர், நியல் எஸ்ரேஸ் ஏஜன்ற்)


MATH & PHYSICS TUTION

By a well-qualified and an experienced teacher. For all grades from Gr. 4 to 1st year of university.

Special classes in advanced functions, calculus & vectors and data management. Classes available at Scarborough & Stouffville.



Contact: 647 340 9490/ 416 732 2228



விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com / www.tamilvanakkam.com



மார்க்கம் தமிழ் முதியோர் சங்கம் நடத்தும்
13ஆவது கலை விழாவும் ஒன்று கூடலும்

காலம்: Saturday, October 15, 2016
இடம்: Wilclay Public School, 60 Wilclay Ave, Markham
நேரம்: பிற்பகல் 5:30 மணி தொடக்கம் பிற்பகல் 10:30 மணிவரை

அனுமதி: இலவசம் பல கலை நிகழ்ச்சிகளும் இரவுப்போசன விருந்தும் இடம்பெறும் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்

மணியம் மாஸ்ரர்: 905-294-6754 சுந்தரலிங்கம்: 416-454-6360
பரமநாதன்: 416-880-0443

# கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் (CTCC) 25 ஆவது ஆண்டுவிழா நேர்த்தியாக நடைபெற்றதா?




25 ஆண்டுகளாக இயங்கிவரும் கனேடியத் தமிழர் வர்த்தக சம்மேளனம் செப்ரெம்பர் 9, 10 ஆம் திகதிகளில் தனது 25 வருட செயற்பாட்டை முன்னிறுத்தி 25, 20, 15, 10 வருடங்கள் வணிகத்தில் தொடர்ச்சியாக இருந்தவர்கள் என்று கூறிய சிலரிற்கு, ரொறொன்ரோவின் மத்தியில் அமைந்திருக்கும் Convention Centre இல் விருது வழங்கிக் கௌரவம் செய்தது. இதுபோன்ற கௌரவம் முன்னைய காலங்களிலும் நடைபெற்றது.

இம்முறை இருநாள் நிகழ்வாக மிகப்பெரிய பணச்செலவில் ($700,000 வரையில்) கொண்டாடப்பட்டது. இவ்வளவு பெரிய பணத்தொகையை செலவு செய்து ஒரு வருடத்திற்கும் மேலாகத் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்ட இந்நிகழ்வு தகுந்த முறையில் நடைபெற்றதா? என்றதொரு கேள்வி நியாயமானதே.

முதலாவது நிகழ்விற்கு இந்தியாவிலிருந்து நடிகர் R. மாதவன் வந்திருந்தார். அவரது பேச்சு அவரது வாழ்க்கை வரலாறைப் பற்றியதாகவே இருந்தது. இதற்குப் பெரிய தொகை கொடுத்திருந்தார்கள். அத்துடன் $100 ரிக்கற் எடுத்தவர்கள் நின்றே சாப்பிட வேண்டிய கட்டாயத்தில் இருந்தார்கள். வர்த்தக சம்மேளனம் இவ்வாறு செய்தது பலரிற்கு மிகவும் அசௌகரியத்தை கொடுத்ததனை காணக்கூடியதாக இருந்தது.

இரண்டாவது நாள் நிகழ்வில் வர்த்தக நிறுவனம் ஊடகத்துறையிலிருந்து இருவரைக் கௌரவப்படுத்தியது. இவர்கள் வெளிநாடுகளிலிருந்து வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இவர்களுடைய செலவுகளும் பெரியளவாகவே காணப்பட்டது. கனடாவிலும் மதிக்கப்பட வேண்டியவர்கள் இருக்கவில்லையா? அவர்கள் இவ்வாறாக வந்து கலந்து கொள்வதற்கு என்ன தடையாக இருந்தது.

தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் எதிர்கால அங்கத்தவர்கள் இந்நிலையை மாற்றுவார்களா?

Globe and mail இல் ஒரு பக்கத்து விளம்பரத்திற்கு ஒரு தடவைக்கு $40,000 கொடுப்பது தவறு இல்லை என்றாலும், உள்ளூர் தமிழ் ஊடகங்களிற்கு ஒரு வருடம் $50,000 அளவில் விளம்பரம் கொடுத்தது போதுமா? தமிழ் ஊடகங்களை எந்த வகையில் தெரிவு செய்யப்பட்டு அவற்றிற்கு விளம்பரம் கொடுக்கப்பட்டது? உள்ளூரின் வேறு மொழிகளில் விளம்பரம் செய்திருந்தால் என்ன தவறு இருந்திருக்கும்?

நிகழ்வு நடத்துனராக வெளிநாட்டிலிருந்து ஒருவர் வரவழைக்கப்பட்டிருந்தார்? உள்ளூரில் இருமொழி அல்லது மும்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றவர்கள் இல்லையா? நிகழ்வு நடத்துனரின் பங்களிப்பு தகுதியானதாகக் கருதப்படவில்லையா? இதனை நிவர்த்தி செய்வதற்காகவா தலைவர் அடிக்கடி மேடைக்கு வந்தார்? எது எவ்வாறாயினும், அண்மையில் ஒரு நேர்முக உரையாடலில் அதன் தலைவர் தனது பங்கிற்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டதுடன் அங்கத்துவர் சபையில் போதியளவு ஒற்றுமை இல்லை என்பதனையும் ஒத்துக் கொண்டார்.

10,15,20,25 வருடங்கள் வியாபாரத்தில் இருந்ததிற்காக கௌரவிக்கப்பட்டதாகக் கூறப்பட்டாலும், பத்திரங்கள் பூரணப்படுத்தி, சமர்ப்பித்தவர்கள் சிலர் தகுதியிருந்தும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். இதுவரை காரணங்கள் கூறப்படவில்லை. 25 வருடங்கள் நடத்தும் சம்மேளனத்திற்கு இது தார்மீகமா?

பார்வையாளர்கள் தொலைக்காட்சியின் வழியாகப் பார்க்க வேண்டிய சந்தர்ப்பங்களில் நிகழ்வுகளை உரிய முறையில் எடுத்து வரவில்லை. நிகழ்வுகள் அரங்கத்தை அமைதித்தன்மையை ஏற்படுத்தும் வகையில் அமையாததால் சலிப்பினை ஏற்படுத்தியிருந்தது. $200 - $300 வரை ஒரு கதிரைக்குச் செலுத்தியவர்களுக்கு உணவுப் பரிமாற்றமும் திருப்திகரமான முறையில் இடம்பெறவில்லை.

விருது வழங்கும் தருணம் பல சிக்கல்கள் தாமதங்கள் ஏற்பட்டிருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. அவ்விருதில் உள்ள பெயரும் பெறுவர் பெயரும் பொருந்தாதது மேடையிலேயே அவர்கள் அடைந்த குழப்பநிலையைக் கொண்டு அறியக் கூடியத்தாக இருந்தது. அத்துடன் விருதினைப் பெறுபவரது தொழில் நிறுவனத்தின் பெயரையாவது குறைந்த பட்சம் குறிப்பிட்டிருக்கலாம்.

பார்வையாளர்கள், கௌரவிக்கப்பட்டவர்கள், விளம்பரம் கொடுத்து உதவியவர்கள் போன்றவர்களின் குறைபாடுகளைக் கேட்கக் கூடியதாக இருந்தது. வியாபார நிறுவனங்களின் முன்னேற்றத்திற்காக நடத்தப்படும் இந்நிறுவனம் செல்லும் பாதை சரியானதா? எதிர்வரும் காலங்களில் இவ்வாறான குறைபாடுகள் நிவர்த்திசெய்யப்படல் வேண்டும்.



# Canada: An evolving vision புத்தக வெளியீடு

கனடாவில் நன்கு அறியப்பட்ட ஊடகவியலாளரும், சமய மற்றும் சமூகப் பிரமுகருமான திரு. சாமி அப்பாத்துரை அவர்களால் Canada: An evolving vision என்ற ஆங்கில நூல் 24.09.2016 சனிக்கிழமை அன்று வெளியிடப்பட்டது. தமிழர் என்றல்லாது மிகவும் ஆரோக்கியமாக குறிப்பாக தமிழ் அரசியல் பிரதிநிதிகளான பார்த்தி கந்தவேல், நீதன் சாண் மற்றும் ஒன்றாரியோ எதிர்க்கட்சித் தலைவர் பற்றிக் பிறவுண், ஸ்காபரோ றூச்றிவர் நாடாளுமன்ற உறுப்பினர் றேமண்ட் சோ, முன்னைநாள் மத்திய அமைச்சர் கிறிஸ் அலெக்சான்டர், ரொறன்ரோ பொலிஸ் பிரிவின் றிச்சர்ட்




ஹெட்ஜஸ், மத்திய பாதுகாப்புப் பொலிஸ் அதிகாரி மற்றும் சட்டத்தரணிகளான மிச் ஈகல், கெனடி பிராடியஸ், வண.பிதா ரெறி கல்லகர் (Father Terry Gallagher) உள்ளிட பலரும் கலந்து கொண்டனர்.

- வீரகேசரி மூர்த்தி -

கனேடிய தேசிய நீரோட்டத்தைச் சார்ந்தவர்களும் பங்குபற்றியதொரு நிகழ்வாக அமைந்த இந்நிகழ்வில் பலர் உரையாற்றினர்.

# திறமைகளின் திருவுரு குறமகள்

மண்ணில் பிறந்தார் எல்லோரும்
மகிமை பெறுவர் என்பதில்லை
எண்ணில் சிலரே எய்துவர்
ஏற்றம் என்பது கண்கூடு
திண்மையான உடல் வலிவும்
திருவும் கல்வியும் சேர்ந்தணைந்த
பெண்ணின் சிறந்த பண்புகளால்

எழுத்தாளராய் நடிகையையாய் கவிஞராய்
பல்துறைச் சிறப்பில் பரிணமித்தவர்
பண்ணிய நல்ல பணிகளினால்
பாரினில் பெயர் விளங்கச் செய்தார்
வள்ளிநாயகி எனும் பெயர்
கிள்ளை மொழி பேசும் பாலர்க்கும் தெரியும்
உள்ளம் கவலையில் மூழ்கிய திழப்பால்



பெருமை பெற்றவர் குறமகளார்
கண்ணெனத்தகும் கல்விச்சிறப்பால்
எண்ணில் மாணவரேத்தும் குருவாய்
ஆசிரியமாணவரிடையே திகழ்ந்தார்
கல்விச் சமூகம் கணிப்பு தந்தது
தமிழ்பற்றும் இனப்பற்றும்
நாட்டுப் பற்றும் நயந்தது அவருளம்

நேற்றிருந்தார் இன்றில்லை
உலகின் பெருமை
நெற்றிக் கண்ணுதலான் கழற்கீழ்
நற்கதி எய்துக! மானிடம் மறக்காது.

- நா.க. சிவராமலிங்கம் -

# முச்சக்திகளை...

27ஆம் பக்கத்தொடர்ச்சி

செல்வத்தைப் பெறுவதற்கு திருமகளை நடு மூன்று நாட்களிலும் ஆராதனை செய்கின்றோம். திருமகள் மாகாலட்சுமி என போற்றப்படுகின்றாள்.



எழுமையும் ஏமாப்பு உடைத்து. மம்மர் அறுக்கும் மருந்தாவதும் கல்வி. கல்வியின் அத்தியாவசியம் கருதி பாடை ஏறினும் ஏடது கைவிடேல் எனக் கூறப்பட்டுள்ளது. கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு. எனவேதான் 'கற்றதின்படி நில்' என ஆணையிடுகின்றார் வள்ளுவர். பாலர் கல்வி, பள்ளிக்கல்வி, பல்கலைக்கழக கல்வி அகன்ற கல்வி, ஆழ்ந்த கல்வி, ஆராய்ச்சிக்கல்வி என்று கல்வி விரிவுபெறும். ஏட்டுக் கல்வியிலும் ஏற்றம் பெறுவது அனுபவக் கல்வியே ஆகும். படிக்காத மேதைகளும் பாரினில் உண்டு.

விசையுறு பந்தினைப் போல் வேண்டியபடி செலும் உடலும், அசைவுறு மனமும் அளவான செல்வமும் அடக்கமான கல்வி அறிவும் வேண்டி முத்தேவியரையும் முறைப்படி வணங்குவோம்.

வெற்றிலையில் திலகமிட்டோம் இலட்சுமியம்மா
விளக்கேற்றி மாலையிட்டோம் இலட்சுமியம்மா
உற்றதுயர் தீர்ப்பாயே, இலட்சுமியம்மா
ஒளிமயமாய் வாழ்வருள்வாய் இலட்சுமியம்மா

கேடில்லாத விழுமிய செல்வம் கல்வி. எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும். கண்ணுடையர் என்போர் கற்றோர். ஒருமைக்கண் தான் கற்ற கல்வி

உலகத்து நாயகியே எங்கள் முத்துமாரி உன் பாதம் சரண் புகுந்தோம் எங்கள் முத்துமாரி ஆதாரம் சக்தி என்றே அருமறைகள் கூறும் இன்பமே வேண்டி நிற்போம். யாவும் அவள் தருவாள் நம்பினோர் கெடுவதில்லை நான்கு மறைத்தீர்ப்பு அம்பிகையை சரண்புகுந்தாய் அதிக வரம் பெறலாம்.

YOGA - MEDITATION CLASSESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
இலவச ஆலோசனை வழங்கப்படும்



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் எண்ணையினாலும் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும்.

இலவச ஆலோசனைகளுக்கு: 647.456.9796

வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada) Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician LG.Ayurvedic Medical Services (SriLanka)



# அண்ணல் காந்தி

கருணை உள்ளம் கொண்டவர்
கடமை கண்ணியம் கட்டுப்பாடு உடையவர்
தத்துவ போதனையையும்
சத்திய சோதனையையும் தந்தவர்
அடிமை உணர்வினை இவர்
அடியோடு வெறுத்தவர்
அகிம்சையின் சின்னம்மாய்
அகிலத்தில் விளங்கியவர்



கவிநாதம் பரந்தாமன்


MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS
JRS AUTO TECH
OPEN 7 DAYS A WEEK
9am-11pm
VISA
Free Inspection & Diagnostics
Complete Car & Truck Care
Licensed Mechanics
Insurance Work Done
All Fluid Top Ups & A/C Repairs
Fuel Injection Service & Muffler/ Turbos
Courtesy Drop Off & Pick Up Available
Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash
SENIOR'S SPECIAL
Free Shuttle Available for Seniors
TIRE SPECIALS
NEW TIRES FROM $99
USED TIRES FROM $49.95
FREE OIL CHANGE WITH RUST PROOFING
$99 Car
$120 SUV
BRAKE JOB
STARTING FROM $199
WATER PUMP TIMING BELT & LABOR
STARTING FROM
$450 Most Cars
$550 Most Vans
Castrol
REGULAR OIL CHANGE $29.95
CASTROL OIL CHANGE $39.95
SYNTHETIC OIL CHANGE $49.95
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR $149.95
TRANSMISSION FLUSH
Starting From...
Imports $74.95
Radiator Flush $79.95
Domestic $149.95
ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS
CHECK
LEXUS
FREE DTC Code Run and Inspection
2655 Lawrence Ave. East, Unit 5
(Midland & Lawrence, rear of the building)
CALL SUBAS DIRECT → 416-206-9489
Tel: 416-628-4399
Email: jrsautotech@hotmail.ca
Like, Share & Follow us at www.facebook.com/jrsautotech
*Prices subject to change. Valid with flyer. Cannot be combined with any other offers.


IP
IP GOLDHOUSE LTD.
Design your dreams with us
SPECIALIZING IN ANTIQUE AND STONE JEWELLERY
PLATINUM, ROSE GOLD WHITE GOLD YELOW GOLD DIAMOND BANDS SPECIALITY BANDS
பிரசித்திபெற்ற 22கரட் தங்கநகை விற்பனையாளர்கள்
IP SILVERHOUSE
IP GOLDHOUSE
40 New Delhi Drive Unit 56
Markham ON. L3S 0B5
905-554-5890
IP GOLDHOUSE LTD
VLAMBARAM
Name:
Address:
Tel:
E-mail:
IP GOLDHOUSE LTD
Design your dreams with us
EXCLUSIVE DIWALI DRAW
October 30, 2016
40 New Delhi Drive Unit 56
Markham, Ontario L3S 0B5
Tel: (905) 554-5890
1st PRIZE DIAMOND RING
2nd PRIZE CHAIN AND DIAMOND PENDANT
3rd PRIZE GOLD COIN
4th PRIZE SILVER COIN
5th PRIZE SILVER LAKSHMI FRAME
VLAMBARAM



















**Free Real Estate Class -** Call: **416.321.6969**










விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு

***www.vlambaram.com***

***www.tamilvanakkam.com***

